REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜுன் 5 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN 92
தினகரன்
வரு. 92 இல. 133 | Wednesday 05, June, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## மேல் மாகாண பாடசாலைகள் இன்று முதல் திறக்கப்படும்

### அதிபர்களுக்கு ஆளுநர் பணிப்பு

மேல் மாகாணத்தில் வெள்ள நீர் வடிந்துள்ள அனைத்து பாடசாலைகளையும் இன்று 05 ஆம் திகதி புதன்கிழமை திறக்குமாறு அதிபர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க பாடசாலை அதிபர்களுக்கு இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

# IMF: ஒப்பந்தம் மீறப்படுமானால் நாடு மீண்டும் பின்னடையும்

### ஒப்பந்தங்களை சட்டப்பூர்வமாக்க உத்தேச பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்துக்கு ஆதரவளிப்பது அனைவரதும் பொறுப்பாகும்

### வீணாக பேசிக்கொண்டிருக்காமல், நாட்டின் பொருளாதாரம் பற்றிய புரிதலுடன் பேசுவது எதிர்க்கட்சிகளின் பொறுப்பு

### சவால்களை ஏற்காமல் சம்பிரதாய அரசியலில் ஈடுபட்டதாலேயே எதிர்க்கட்சி தொடர்ந்தும் எதிர்க்கட்சியாகவே உள்ளது "உறுமய" காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் மீறப்படுமானால் நாடு பின்னோக்கிச் செல்லும். எனவே அந்த உடன்படிக்கைகள் அனைத்தையும் அமுல்படுத்த, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்துக்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமாக பேணுவதற்கு, பல பொருளாதார இலக்குகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதாகவும், அந்த இலக்குகளை மீறுவது நாட்டின் பொருளாதாரத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

02

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்

### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

**கொலன்னாவை நகரை மீள் கட்டமைக்க நடவடிக்கை**

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கொழும்பு, கொலன்னாவ மற்றும் நாட்டின் ஏனைய பிரதேச மக்களுக்கு உணவு, பானங்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு (03) அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொலன்னாவை உட்பட கொழும்பு நகர்ப்புறப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலம் விசாரிப்பதற்காக ஜனாதிபதி நேற்று முன்தினம் (03) மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போது பிரதேசவாசிகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடிய தன் பின்னர் இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் நீண்டகாலமாக நிலவும் வெள்ளப் பிரச்சினைக்குத் தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம்

06



## 03

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டம் மூலம்

அரசியலமைப்புக்கு முரணானதை நிறைவேற்ற விசேட பெரும்பான்மை தேவை

### அஸ்வெசும கொடுப்பனவுத் திட்டம்

## புதிய முறைமையை மாற்ற முடியாது குறைபாடுகளை நிவர்த்திக்கலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அஸ்வெசும போன்ற நலன்புரி கொடுப்பனவுகள் மூன்று தசாப்தங்களுக்கு மேல் நடைமுறையிலிருந்த முறைமையையே நாம் மாற்றியுள்ளோம். இதில் குறைபாடுகள் இருந்தால் அதனை நிவர்த்தி செய்யலாம். எனினும் இந்த முறைமையை முழுமையாக நீக்க முடியாது என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம்.பி ஹர்ச டி சில்வா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு

06

## நானு ஓயா, நுவரெலியா சம்பவங்கள் பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

### அமைச்சர் ஜீவன் அமைச்சர் டிரானிடம் கோரிக்கை

**பொகவந்தலாவ நிருபர்**



நானு ஓயா உடரதல்ல தோட்டம் மற்றும் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில், பக்கச்சார்பற்ற முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் நீர்வழங்கல்

06

## மூன்றாவது தடவையாகவும் ஆட்சிபீடமேறுகிறது பா.ஜ.க

### 'இந்தியா' கூட்டணிக்கு குறிப்பிடத்தக்களவு ஆசனங்கள்



**இந்தியாவின் 14 ஆவது மக்களவைத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் அதிக ஆசனங்களை வென்றெடுத்துள்ளது. நேற்று இரவு வரை உத்தியோகபூர்வமாக வெளியான தேர்தல் முடிவுகளின்படி பா.ஜ.கவே புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தது.**

**நேற்று மாலை வெளியான உத்தியோகபூர்வ அறிவிப்பின்படி 78 தொகுதிகளுக்கான முடிவுகள்**

06

## ஐ.நா.பிரதிநிதிக்கு மலையக நினைவு முத்திரை கையளிப்பு



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜெனீவா சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பெருந்தோட்ட சமூகத்தின் 200ஆவது வருட நினைவு முத்திரையை ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹிமாலி அருணதிலக்கவுக்கு வழங்கினார். தொழில் அமைச்சின் செயலாளரும் இதன்போது கலந்துகொண்டார்.

## வலுவான பொருளாதாரத்தை ஜனாதிபதி கட்டியெழுப்புவார்

### வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு



பொருளாதாரப் பிரச்சினைகளை நிறைவு செய்து நாட்டை சரியான பாதையில் வழிநடத்தக் கூடிய ஒரே தலைவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே எனவும், மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டு எதிர்காலத்தில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவார் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் இதனைத்

06

## லிற்றோ, லாஃப் சமையல் எரிவாயு விலைகள் குறைப்பு

### லிற்றோ – 150, லா:ஃப் – 160



லிற்றோ, லாஃப் சமையல் எரிவாயுவின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார். கொழும்பில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் தெரிவித்த அவர்,

புதிய விலை குறைப்பின்படி 12.5 கிலோ லிற்றோ

06

## பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர்கள் நியமனம்

### இவ்வாரம் வர்த்தமானி அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மலையகப் பெருந்தோட்டத்துறை பாடசாலைகளில் விரைவில் ஆசிரிய உதவியாளர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும் இதற்கான வர்த்தமானி இவ்வாரம் வெளியிடப்படும் என்றும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த

06

## 15 தீவிரவாத அமைப்புக்களின் சொத்துக்களை முடக்கி வர்த்தமானி

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் வெளியீடு



தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வு கழகம், தேசிய தவ்ஹீத் ஜாமத் உட்பட 15 தீவிரவாத அமைப்புக்களின் சொத்துக்களை முடக்குவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

06

## நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை இதுவரையில் 26 பேர் உயிரிழப்பு

### நிவாரணம் வழங்க ஜனாதிபதி போதியளவு நிதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



**நாட்டில் நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் நேற்று வரை, 26 பேர் உயிரிழந்துள்ளதுடன் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் பாதிப்புகளை மீள் புனரமைக்கவும்**

06

## சவூதி வெளிவிவகார பிரதி அமைச்சரிடம் கடிதம் கையளிப்பு



சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள உமர் லெப்பை அமீர் அஜ்வத், சவூதி அரேபிய பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் கடிதத்தை கையளித்தார்.

தூதுவர் அமீர் அஜ்வத்தை வரவேற்ற சவூதி வெளிவிவகார பிரதியமைச்சர், தூதுவரின் பணி சிறக்க வாழ்த்து தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தூதுவர் அமீர் அஜ்வத் தனது நன்றி, வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் இலங்கை, சவூதி அரேபியாவுக்கிடையிலான இருதரப்பு உறவுகள்

06

## மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்கு உயர்தர மருத்துவ சான்றிதழ்கள்

### திட்டம் விரைவில் அமுலாகும்; விசேட குழுவும் நியமனம்



வேலை வாய்ப்புகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணியாட்களை அனுப்பும் போது பெற்றுக் கொடுக்கப்படும் மருத்துவ சான்றிதழை, உயர் தரத்தில் வழங்குவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முன்வந்துள்ளது.

இதற்காக நுகர்வோர் விவகார அதிகார சபை, இலங்கை அங்கீகார சபை மற்றும் சுகாதார அமைச்சு ஆகிய தரப்பினரைக் கொண்ட விசேட குழுவை நியமிக்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளார்.

06

## தாய், மகளை காணவில்லை பொலிஸில் முறைப்பாடு



காணாமல் போன தாயையும் மகளையும் கண்டுபிடிப்பதற்காக கட்டுநாயக்க பொலிஸார் பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளனர்.

26 வயது பெண்ணொருவரும் 04 வயதுடைய சிறுமியொருவருமே காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் இருவரும் கடந்த மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து

06

# IMF: ஒப்பந்தம் மீறப்படுமானால் நாடு மீண்டும் பின்னடையும்...

(01 ஆம் பக்கம் தொடர்ச்சி)

## உறுமய" காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு






அரசியல் இலாபத்திற்காக மேடைகளில் வீணாகப் பேசிக் கொண்டிருக்காமல், நடைமுறையில் இருக்கும் கட்டமைப்பிற்குள் மாத்திரம் பேசுவது எதிரணியின் பொறுப்பு எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டுக்கான பொறுப்புகளை ஏற்காமல், சம்பிரதாய அரசியலில் ஈடுபட்டதால் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் எதிர்க்கட்சியில் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த சவாலை அச்சமின்றி ஏற்றுக்கொண்டதால் , அரசாங்கம் அதன் வெற்றிகரமான முடிவுகளை இன்று வெளிப்படுத்தி உள்ளதாகவும், எனவே நாட்டு நலனுக்காக அனைவரையும் ஒரே பாதையில் பயணிக்க அழைப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான "உறுமய" முழுமையான காணி உறுதிப் பத்திரம் வழங்கல் மற்றும் அரிசி மானியம் வழங்கும் நிகழ்வு கரவனெல்ல ஸ்ரீ விசுத்தாராமவில் நேற்று (04) நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

"உறுமய" நிரந்த காணி உறுதிப்பத்திரம் வழங்கும் தேசிய வேலைத் திட்டத்தின் ஒரு கட்டமாக, கேகாலை மாவட்டத்தில் 350 காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினார். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, 800 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது. இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

''உறுமய காணி உறுதிப் பத்திரத்தின் ஊடாக உங்கள் உரிமை உங்களுக்கு வழங்கப்படுவதாக நான் கருதுகிறேன். இந்த உரிமையை மக்களுக்கு வழங்க கடந்த சகல அரசுகளும் தவறிவிட்டன. அதற்கான முறையான கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் வெள்ளையர் எந்த சட்டத்தின் மூலம் நிலத்தை கையகப்படுத்தினார்களோ அந்தச் சட்டத்தின்படியே, நாட்டு மக்களுக்கு நில உரிமைகளை வழங்கியுள்ளோம். இந்த நிலத்தைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும்.

இந்த அரசாங்கம் சாதாரண அரசாங்கம் அல்ல. இது ஒரு கட்சியால் உருவாக்கப்பட்ட அரசாங்கமுமல்ல. இந்த அரசாங்கத்தில் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் உள்ளனர். ஆனால் அரசாங்கம் என்ற வகையில் இன்று நாம் ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுள்ளோம். அந்தப் பொறுப்பை ஏற்க மறுத்த குழுதான் எதிர்க்கட்சி.

அதுதான் எமக்கிடையிலுள்ள வித்தியாசம். அன்று நாட்டில் நிலவிய நிலைமையை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இன்று நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு வந்துள்ளோம். அந்த நெருக்கடியில் இருந்து மீண்டுவர 45 வருடங்கள் பிடிக்கும் என்று பலர் நினைத்தனர். ஆனால் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டே ஆண்டுகளில் மீண்டு வர முடிந்தது.

இன்று, நாட்டில் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்துள்ளது. தற்போது நாட்டிலுள்ள வறுமையை குறைப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தாமல் வறுமையை ஒழிக்க முடியாது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான இலக்குகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தங்களை எட்டியுள்ளோம். 2027ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5% ஆக உயர வேண்டும். எதிர்காலத்தில் இது 8 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். 2025இற்குள் வேலையின்மை 5% ஆகக் குறைக்கப்பட வேண்டும். மேலும், வறுமையை 2027இல் 25%15% ஆகவும், 2035இற்குள் 10% ஆகவும் குறைக்க இலக்கு வைத்துள்ளோம்.

இந்தப் பணியை முன்னெடுப்பதாக நாம் அறிவித்த நிலையில், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு முழு ஆதரவை அளித்துள்ளது. மேலும், நாங்கள் பெற்ற வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை எளிதுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த செயற்பாட்டை மீறினால், நாடென்ற வகையில் பின்னோக்கி சென்று விடுவோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இழக்க நேரிடும். ஏனெனில், இலங்கை பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதிகளை அளித்து அவற்றை மீறியுள்ளது.

எனவே, இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டு, பொருளாதார பரிமாற்றச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவு நமது பொருளாதார இலக்குகள் மற்றும் ஒப்பந்தங்களை சட்டப்பூர்வமாக்குகிறது. எமக்கு கடன் வழங்கிய நாடுகள் இலங்கை இந்தத் திட்டத்தைத் தொடரும் என்பதில் திருப்தியடைந்துள்ளதால், அவர்களின் ஆதரவை நாங்கள் பெறுகிறோம்.

எனவே இதை எங்களால் மாற்ற முடியாது. தற்போது இந்த பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. எனவே, அரசியல் மேடைகளில் வீண் பேச்சு பேசுவதில் அர்த்தமில்லை. நாம் எது செய்வதாக இருந்தாலும் இந்தக் கட்டமைப்பிற்குள் செய்ய வேண்டும்.

சவால்களை அச்சமின்றி ஏற்றுக்கொண்டதால்தான் இன்று ஆட்சியில் இருக்கிறோம். இப்போது நாங்கள் பெறுபேறுகளைக் காட்டியுள்ளோம். ஒரே பாதையில் ஒன்றாக பயணிக்க முன்வருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்" என ஜனாதிபதி தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க :

''மக்களுக்கு காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டம் தற்போதைய ஜனாதிபதி, பிரதமராக பதவி வகித்த காலத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரத்தில் அதற்கு தடையேற்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் பாதையைப் பார்க்கும் போது, அவர் வகித்த அனைத்து அமைச்சுப் பதவிகளின் கீழும் மக்களுக்கு பெருமளவில் சேவையாற்றப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர், இளைஞர் விவகார அமைச்சர் என்ற வகையிலும் சிறுவர்களுக்கும் இளையோருக்கும் அளப்பரிய சேவையாற்றியிருக்கிறார். இன்று ஜனாதிபதியாக உங்களுக்கு காணி உறுதிகளை வழங்குகிறார்.

எனது தந்தையின் காலத்தில் வழங்கப்பட்ட காணிப் பத்திரங்களைக்கூட, உறுமய திட்டத்தின் கீழ் காணி உறுதிகளாக மாற்றிக்கொள்ள முடியும். இந்த காணி உறுதிப் பத்திரங்கள் உங்கள் பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதாக அமையும்.'' என்று தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய :

''ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த இரு வருடங்களில் அமைதியாக புரட்சியொன்றை செய்திருக்கிறார். ஜனாதிபதி மட்டுமே சாதாரண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க நினைக்கும் ஒரே தலைவராவார். இன்றைக்கு இரு வருடங்களுக்கு முன்பாக ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்து அனைவரும் வாழக்கூடிய சிறந்த சூழலை உருவாக்கினார்.

அதேபோல் இன்று காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன. குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு அரிசி மானியம் வழங்கப்படுகிறது. சாதாரண மக்களைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதி தனது திட்டங்களை செயற்படுத்துகிறார். உதவி தேவைப்படும் மக்களின் பக்கமாகவே ஜனாதிபதி என்றும் நிற்கிறார். தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 சம்பளத்தை பெற்றுக்கொடுத்துள்ளார். இதற்காக ஜனாதிபதி கோசங்களை எழுப்பவில்லை. மாறாக அமைதியாக ஒரு புரட்சி செய்திருக்கிறார். '' என்று தெரிவித்தார்.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய :

''காணிகளின் உரித்து கிடைத்ததன் மூலம், வறிய மக்களுக்கு தேவையான மூலதனம் இதனூடாக கிடைக்கிறது. காலனித்துவ காலத்தில் தோட்ட நிறுவனங்களிடம் காணிகளை ஒப்படைத்ததால் மக்களின் காணிகள் இல்லாம் போனது. இன்று நிரந்தர காணி உறுதிகள் வழங்கப்படுவதால் பொருளாதாரத்திற்கு அதிலிருந்து நேரடி பங்களிப்பு கிட்டும். கேகாலை மக்களின் தேயிலை, இறப்பர், கராம்பு போன்ற உற்பத்திகளுக்காக இந்த காணிகளைப் பயன்படுத்த முடியும். இதனால் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பு கிடைக்கும். உறுமய திட்டத்தினால் மக்களின் காணி உரிமை பாதுகாக்கப்படும். இதனூடாக வெளிநாட்டு வருமானத்தையும் பெருமளவில் ஈட்டிக்கொள்ள முடியும்.'' என்று தெரிவித்தார்.

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் :

''இப்பகுதி மக்களில் பெருமளவானர்களுக்கு நிரந்தர காணி உறுதிகள் இருக்கவில்லை. அவற்றை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது புண்ணியமாகும். உறுமய திட்டத்திற்காக கிராம சேவகர்கள் பெரும் பணி ஆற்ற வேண்டியுள்ளது. அதனால் கிராம சேவகர்களை கருத்தில் கொண்டு இலத்திரனியல் சட்டத்திற்கான வரம்புகள் நாளைய தினம் அறிவிக்கப்படும். அதனால் கிராம சேவகர்கள் சான்றிதழ்களை ஒன்லைன் மூலம் விநியோகிக்க முடியும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பாக நெருக்கடியிலிருந்த நாட்டை இன்றைய நிலைக்கு கொண்டு வந்து புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே வழங்குகிறார்.

அதனால் கடந்த இரண்டு வருடங்கள் எதிர்கொண்ட நிலையைக் கருத்தில் கொண்டு எதிர்கால தேர்தல்களின் போது தீர்மானம் எடுக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜிகா விக்கிரமசிங்க, உதயகாந்த குணதிலக, சுதத் மஞ்சுல, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





கடும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விமானப்படை ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்டபோது...

உயிரியல் பிரிவில் கேகாலையில்

## முதல் 03 இடங்கள் மாவனல்லை ஸாஹிரா மு.ம.வித்தியாலயத்துக்கு

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி இவ் வருடம் உயிரியல் பிரிவில் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை ஸாஹிரா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் நௌஷாத் தெரிவித்தார்.

பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக மாவட்டத்தில் முதலாம்,இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முயற்சியினால் பெற முடிந்ததாகவும் அதிபர் தெரிவித்தார். கேகாலை மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் அகீப் அப்துல்லாவின் தந்தை தொழில் ரீதியாக கணக்காளர். புலமைப்பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்ற மாணவர் அப்துல்லா க.பொ.த சாதரணத் தரத்தில் ஒன்பது பாடங்களிலும் ஏ தர சித்தி பெற்றிருந்தார். இம் மாணவன் அகில இலங்கை ரீதியில் 36 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.



அகீப் அப்துல்லா



எம். எஃப். உமைர் பாயிஸ்



பாத்திமா சஹிமா

இரண்டாம் இடத்தை எம். எஃப். உமைர் பாயிஸ் பெற்றுள்ளார். அவரது தந்தை ஒரு தொழிலதிபர். இம் மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று க.பொ.த சாதரணத் தரத்தில் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்.இவர் அகில இலங்கை ரீதியில் 134 வது இடத்தைப் பெற்றுள்ளார்.

மூன்றாவது இடத்தை முகமது மிஷ்வர் பாத்திமா சஹிமா பெற்றுள்ளார். இவரது தந்தை மின்சார சபையில் பொறியியலாளர். தாயார் மாவனல்லை சாஹிரா மகாவித்தியாலயத்தின் ஆசிரியை இம்மாணவி ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்றுள்ளதோடு, க.பொ.த சாதரணத் தரத்தில் ஒன்பது பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்றுள்ளார். இந்த மாணவி அகில இலங்கை ரீதியில் 134வது இடத்தைப் பெற்றுள்ளார். கேகாலை மாவட்டத்தில் தனது கல்லூரி ஒன்பதாவது இடத்தையும் பெற்றுள்ளதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

தொழில் முயற்சிகளுக்காக

## 'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' நிறுவனத்தை தாபிக்க முடிவு

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் (SMEs). ஒத்துழைப்பு வழங்கும வகையில் “Enterprise Sri Lanka” என்ற புதிய நிறுவனத்தை நிறுவுவதற்கு ஜனாதிபதி மற்றும் கைத்தொழில் அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் (03) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி, சர்வதேச நடைமுறைகளை கருத்தில் கொண்டு விசேட நிபுணத்துவர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளஆய்வுகளின்பின்னர் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை மிகவும் பயனுள்ள வகையில் வழி நடத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான ஒருங்கிணைந்த முகவர் நிறுவனத்தை நிறுவுவதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, தொழில்நுட்ப அபிவிருத்திச் சபை, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சிறு வியாபார அபிவிருத்தி பிரிவு நிறுவன ரீதியாகவும் மற்றும் சட்ட ரீதியாகவும் மறுசீரமைப்பு செய்வதன் மூலம் சிறிய மற்றும் பாரியளவிலான தொழில் முயற்சிகளுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள தனி அலகாக “என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா” எனும் பெயரில் முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்தை தாபிப்பதற்கும், அதற்காக சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதியும் கைத்தொழில் அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது

பொசன் பண்டிகையை முன்னிட்டு

## மதுபானசாலைகள் ஒரு வாரத்திற்கு பூட்டு

தேசிய பொசன் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நாட்டின் பல பிரதேச செயலகங்களில் உள்ள மதுபானசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.




தேசிய பொசன் பண்டிகை நாட்களில் மதுபானசாலைகள் மூடப்படுமென இலங்கை கலால் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மத்திய நுவரகம், கிழக்கு நுவரகம் மற்றும் மிஹிந்தலை ஆகிய மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் இக் காலப்பகுதியில் அனைத்து மதுபானசாலைகளும் அக் காலப்பகுதியில் மூடப்படும்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜூன் 5 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

| | |
|---|---|
| சுபஹ் | - 04.32 |
| லுஹர் | - 12.10 |
| அஸர் | - 03.36 |
| மஃரிப் | - 06.24 |
| இஷா | - 07.40 |

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் வைகாசி 23

ராகுகாலம் : காலை : 11.52 - 1.22வரை
சுபநேரம் : மாலை : 4.22 - 5.52வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம்: நீதிமன்ற அறிவுறுத்தலை மீறமாட்டோம்

## திட்டமிட்டபடி விவாதம் நடத்தி நாளை நிறைவேற்றுவோம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை செயற்படுத்த, அரசாங்கம் தயாராக வுள்ளது. இவ்விடயத்தில் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலை மீறி செயற்படப் போவதில்லை என, அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்டுள்ள 12 திருத்தங்களும் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படும் என தெரிவித்த அ மைச்சர், திட்டமிட்டபடி இதன் மீதான விவாதம் நாளை பாராளுமன்றத்தில் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

ஆளும் கட்சியில் பெரும்பான்மை எம்மிடம் உள்ளது. அதனை எதிர்ப்பவர்கள் எதிர்க்கலாம் ஆனாலும் சட்டமூலம் நாளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உத்தேச மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலம் தொடர்பில், உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி சட்டமூலத்தை நாளை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாம் என்றும், அது தொடர்பில் விரிவாக ஆராய்ந்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் இரண்டு நாள் விவாதமாக அதனை முன்னெடுக்க முடியும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், கஞ்சன விஜேசேகர,

இச்சட்டம் மூலம் தொடர்பான செயற்பாடுகளில் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அப்பாற்பட்டு செயற்படப் போவதில்லை.முன்வைக்கப்பட்டுள்ள 12 திருத்தங்களையும் சட்டமூலத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.கடந்த காலங்களிலும் இவ்வாறான பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டமூலம் அவசரமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரால் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.கடந்த ஒன்றரை வருட காலமாக இச்சட்டமூலம் பற்றி பேசப்படுகிறது. இது அவசரமாக கொண்டு வரப்பட்டதல்ல.

சட்டமூலத்தை நாளை வியாழக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள தயார். இதற்கான பெரும்பான்மை தொடர்பில் கவலைப்பட வேண்டிய அவசியம் கிடையாது. நிச்சயம் சட்டமூலத்தை சபையில் நிறைவேற்றுவோம்.

மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டுமென, ஐக்கிய மக்கள் சக்தி தரப்பினர் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனர். இதனை முன்னெடுக்கும் போது எதிர்ப்பு தெரிவிப்பது விந்தையாக உள்ளது.

06

# அஸ்வெசும: தகுதியுள்ளோரின் அநீதிகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்

## பொதுஜன பெரமுன எம்பி ஜகத்குமார

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தகுதியுள்ள இலட்சக்கணக் கானோருக்கு அஸ்வெசும கிடைக்காமலும்,தகுதியில்லாத இலட்சக் கணக்கானோர் இதைப் பெறுவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என,பொதுஜன பெரமுன எம்பி ஜகத்குமார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இக்கொடுப்பனவுத் திட்டம் வழங்க ஆரம்பித்த காலத்திலிருந்து வறுமையிலுள்ள இலட்சக்கணக் கானவர்களுக்கு அநீதி இழைக்கப் பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்யாமல் அரசாங்கம் எத்தனை பில்லியன்களை இதற்காக செலவிட்டாலும் பயனில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் உரிய கவனம் செலுத்தி, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் இது தொடர்பாக எதிர்க்கட்சி எம்பிக்கள் நேற்று எழுப்பிய கேள்விகளுக்குப் பின்னர் ஜகத்குமார எம்பி, இவ்விடயத்தை நிதி இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அஸ்வெசும கொடுப்பனவு நடவடிக்கைகளில் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. இது வறுமை நிலையில் உள்ள அடிமட்ட மக்களுக்கான திட்டம். அடிமட்டத்தில் உள்ள துறை சார்ந்த அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தரவுகள் பெறப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கையை முன்னெடுப்பது அவசியமாகும்.

துறை சார்ந்த அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட முடியாத நிலை காணப்படுகி றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

இந்த சட்டத்தை தற்காலிகமாவது நீக்கி, கிராமப்புற மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற கீழ் மட்ட துறை சார்ந்த அதிகாரிகளை தொடர்பு படுத்தி முறையான திட்டத்தை முன்னெடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

### மின்சார சபை மறுசீரமைப்பு சட்ட மூலம்

# அரசியலமைப்புக்கு முரணானதை நிறைவேற்ற விசேட பெரும்பான்மை தேவை

## உயர் நீதிமன்ற வியாக்கியானம் சபாநாயகரால் அறிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானது என்றும், அதனை நிறைவேற்ற வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை அவசியம் என்றும் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்

அத்துடன் சட்டமூலத்தின் 48 ஆவது பிரிவை நிறைவேற்ற விசேட பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

அந்த வகையில்,உயர்நீதிமன்றம் முன்வைத்துள்ள திருத்தங்களை முழுமையாக அமுல்படுத்தினால், சட்டமூலத்தை பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்றும் அவர் அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக்காலை கூடிய போது உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை சபாநாயகர் அறிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 121 (1) ஆவது பிரிவுக்கமைய சவாலுக்குட்படுத்தப்பட்ட மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் அதன் வியாக்கியானத்தை வழங்கியுள்ளது.

06

# சீரற்ற காலநிலையால் நோய்கள் பரவும் அபாயம்

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல்வேறு நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாக, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வயிற்றுப்போக்கு, தடிமன், வைரஸ் காய்ச்சல்கள் உள்ளிட்ட நோய்கள் பரவக்கூடிய அபாயம் நிலவுவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அசுத்தமான நீர் மற்றும் உணவுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந்நோய்கள் இலகுவாகப் பரவக்கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றுப் போக்கு, வயிற்று வலி மற்றும் மலத்துடன் இரத்தம் கசிதல் உள்ளிட்டவை இந்நோய்களுக்கான அறிகுறிகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் காய்ச்சல் விரைவாகப் பரவினால் அது வைரஸ் காய்ச்சலாகவும் இருக்கலாம். குளிர் காலம் காரணமாகக் குழந்தைகள் மத்தியில் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பொது வேலைத்திட்டத்தில் ஒன்றுபடாதோர்

# பொது வேட்பாளரிலும் ஒன்றுபட முடியாது

## ஈ.பி.டி.யின் ஊடக பேச்சாளர்

பொது வேலைத்திட்டத்தில் ஒரு அணியாக செயற்பட முடியாதவர்கள், பொது வேட்பாளர் விடயத்தில் எவ்வாறு ஒன்றுபட முடியுமென ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச்சந்திப்பிலேயே, இதனைத் தெரிவித்தார். தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்:

ஜனாதிபதி தேர்தல் அறிவிப்புக்கான காலங்கள் நெருங்கிவருகிறது.இன்னும், பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் கட்சிகளிடம் ஒருமித்த நிலைப்பாடு ஏற்படவில்லை.

கிழக்கிலிருந்து ரெலோ அமைப்பு அறிக்கைவெளியிட்டால்,வன்னியிலிருந்து அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வேறு ஒரு கருத்தை வெளியிடுகிறார்.

பொது வேட்பாளர் தொடர்பில் இவர்களிடையே உள்ள ஒற்றுமையை புரிந்து கொள்ள இதுவே போதும்.எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆசன ஒதுக்கீடுகளைப் பெறும் வியூகமே இந்தப் பொது வேட்பாளர் விடயம்.

தேர்தலில் தென்னிலங்கை தேசியக் கட்சிகளைச் சேர்ந்தவர்களே ஜனாதிபதியாக முடியும். பொது வேட்பாளர் தொடர்பில் பேசுகின்ற தரப்பினருக்கு இது,தெரியாத விடயமல்ல. ஆயினும் தத்தமது நலன்களிலிருந்தே அவர்கள் இந்த நாடகத்தை அரங்கேற்றி பிழைப்பு நடத்த முனைகின்றனர்.

# திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவர்களின் பெறுபேறுகளை உடனடியாக வெளியிட வேண்டும்

## சபையில் செல்வராஜா கஜேந்திரன் எம்.பி

**(லோரன்ஸ் செல்வநாயகம் )**

திருகோணமாலை சாஹிரா கல்லூரியின் 70 மாணவர்களது கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.பாராளுமன்றத்தில் நேற்று மகளிர் வலுவூட்டல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

06

# ஓமான் தூதுவருடன் இம்தியாஸ் MP சந்திப்பு



இலங்கைக்கான ஓமான் புதிய தூதுவர் அஹமட் அலி சைட் அல் ரஷ்தியை, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் சந்தித்தபோது பிடிக்கப்பட்ட படம். சவூதி அரேபிய தூதரகத்தில் மரியாதை நிமித்தம் இச்சந்திப்பு நடைபெற்றது.



தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
குரோதி வருடம் வைகாசி மாதம் 23ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 27

**குறள் தரும் சிந்தனை**



உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு

*விருந்தினரை வரவேற்றுப் போற்றத் தெரியாத அறிவற்றவர்கள் எவ்வளவு பணம் படைத்தவர்களாக இருந்தாலும் தரித்திரம் பிடித்தவர்களாகவே கருதப்படுவார்கள்.*

# பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டியது மிக அவசியம்

நாட்டில் மாதாந்தம் மேற்கொள்ளப்படும் எரிபொருள் விலை திருத்தத்துக்கு அமைய கடந்த மே மாதமும் இந்த மாதமும் டீசல் விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு சமையல் எரிவாயுவுக்கும் கூட கடந்த மாதமும் இம்மாதமும் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நாடு பெற்றுக் கொள்ளும் பொருளாதார நலன்கள் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

பொருளாதார நெருக்கடியின் போது முழுநாடும் பாதிப்புக்கும் தாக்கங்களுக்கும் முகம் கொடுத்தது. அந்நிய செலாவணிப் பற்றாக்குறையைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருள், எரிவாயு என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை உருவாகி இருந்தது.

அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்து இருந்தன. அத்தோடு போக்குவரத்து சேவையும் இயல்பு நிலையை இழந்திருந்தது. அந்த தாக்கங்களின் போது நாட்டின் பெரும்பாலான மக்கள் பொறுமை காத்தார்கள்.

இவ்வாறான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத சூழல் ஏற்பட்டது. அந்தச் சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையைப் பொறுப்பு எடுத்தார். அதனைத் தொடர்ந்து பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அனைத்து வேலைத்திட்டங்களும் நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதாக அமைந்திருந்தன.

இதன் விளைவாக நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் பாதிப்புக்களும் குறுகிய காலம் முதல் நாட்டில் இருந்து நீங்கத் தொடங்கின. குறிப்பாக எரிவாயு, எரிபொருள் என்பவற்றுக்கு நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக போக்குவரத்து சேவை வழமைக்குத் திரும்பியதோடு, தினமும் பல மணித்தியாலய மின்வெட்டும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இவ்வாறான சூழலில் நாடு அடைந்து கொள்ளும் பொருளாதார நலன்களின் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முன்னுரிமை அளித்து செயற்பட்டது. இதன் பயனாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டம் கட்டமாக குறைப்பட்டன. அவற்றில் எரிபொருள், எரிவாயும் அடங்கியுள்ளன.

அந்த வகையில் நாட்டு மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து கடந்த மாதமும் இம்மாதமும் டீசலுக்கு விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இவ்விலைக்குறைப்பின் பிரதிபலனை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்வருவதாக இல்லை. ஆனால் பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பயணிகள் முன்வைத்து வருகின்றனர்.

அது நியாயமான கோரிக்கையும் கூட. பொதுவாக இந்நாட்டில் விலை அதிகரிப்பு இடம்பெறும் போது உடனடியாக விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். ஆனால் விலைக் குறைப்பு செய்யப்பட்டால் அதன் பிரதிபலன்கள் உடனடியாக மக்களை சென்றடைவதில்லை.

இந்த நிலைமை மாற்றமடைய வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். பொருளாதார நெருக்கடியின் போது எதிர்கொண்ட தாக்கங்கள் பாதிப்புக்களின் போது பொறுமை காத்த மக்களுக்கு பொருளாதாரம் நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் சூழலில் கிடைக்கப்பெறும் பிரதிபலன்கள் மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதுவே நியாயமானதாகும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும் என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஆகவே டீசல் விலைக் குறைப்பு மூலம் கிடைக்கப் பெற்றுள்ள பிரதிபலன்களை பயணிகளுக்கும் பெற்றுக் கொடுக்கும் வகையில் பஸ் கட்டணங்களைக் குறைக்க போக்குவரத்துத் துறையினர் முன்வர வேண்டும். பயணிகளின் எதிர்பார்ப்பும் அதுவாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவில் புதிய அரசாங்கத்தை அமைக்கத் தயாராகின்றது பா.ஜ.க

## நேற்று மாலை வரையான தகவல்களின்படி சுமார் 300 தொகுதிகளில் முன்னிலை

இந்திய மக்களவைத் தேர்தல் வாக்குகள் எண்ணும் பணி நேற்றுக் காலை ஆரம்பமானதையடுத்து பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க நேற்று மாலை வரை வெற்றிவாய்ப்பில் இருந்தது.

நாடு முழுவதும் 7 கட்டங்களாக நடத்தப்பட்ட மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்றுக் காலை 8 மணி முதல் எண்ணப்பட்டன. நேற்று மாலை வரையான நிலைவரப்படி பா.ஜ.கவே முன்னிலை வகித்தது. தேர்தல் முடிவுகள் நேற்று மாலையும் முழுமையாக வெளியாகவில்லை. ஆகவே இக்கட்டுரை அச்சுக்குப் போகும்வரை இந்திய மக்களவைத் தேர்தலின் இறுதி முடிவு வெளியாகவில்லை.

ஆனாலும் பா.ஜ.கவே மீண்டும் ஆட்சியமைக்கும்படியாக நேற்று மாலை வரையான முடிவுகள் அமைந்திருந்தன. 78 தொகுதிகளுக்கான முடிவுகள் நேற்று மாலை 6 மணிவரை அறிவிக்கப்பட்டிருந்தன.

தேசிய அளவில் தேர்தல் முடிவுகளில் பா.ஜ.க 295 இற்கு மேற்பட்ட இடங்களில் முன்னிலையில் இருந்தது. எனினும் பா.ஜ.க தலைமையகத்தில் உள்ள தொண்டர்கள் அதிருப்தியில் உள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் 'இந்தியா' கூட்டணி மொத்தம் உள்ள 80 தொகுதிகளில் சுமார் 50 தொகுதிகளில் முன்னிலை வகிப்பது அவர்களை கவலையடையச் செய்துள்ளது.

இதேவேளை தமிழகத்தில் பா.ஜ.கவின் தாமரை கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் உள்ள 39 மக்களவை தொகுதிகளில், 20 தொகுதிகளில் பா.ஜ.க தனித்துப் போட்டியிட்டது. இவையன்றி இதன் கூட்டணிக் கட்சிகளான பா.ம.க 10, த.மா.கா – 3, அ.ம.மு.க. – 2, புதிய நீதிக்கட்சி – 1, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் – 1, இந்திய ஜனநாயக கட்சி – 1, இந்திய மக்கள் கல்வி முன்னேற்றக் கழகம் – 1 இடங்களில் போட்டியிட்டன.





இப்படியாக தமிழ்நாட்டில் மொத்தமாக 39 மக்களவை தொகுதிகளில் களம் கண்டது பா.ஜ.க. தமிழகத்தில் தி.மு.க கூட்டணி வேட்பாளர்கள் அனைத்து இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றனர். பா.ஜ.க ஒரு இடத்திலும் முன்னிலை இல்லை என்றே கூறலாம். குறிப்பாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நட்சத்திர வேட்பாளர்களான தமிழிசை சவுந்தரராஜன், அண்ணாமலை, எல்.முருகன்,நயினார் நாகேந்திரன், கே.பி.ராமலிங்கம், ராதிகா சரத்குமார், பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் எவரும் முன்னிலை வகிக்கவில்லை.

இதனிடையே தமிழ்நாட்டில் முதன் முறையாக 10 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றுள்ளது பா.ஜ.க என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று மாலைவரை வெளியான முடிவுகளின் அடிப்படையில், பா.ஜ.க கூட்டணி 298 இடங்களில் முன்னிலையில் இருந்தது. எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி 228 இடங்களில் முன்னிலை பெற்றிருந்தது.

நேற்று மாலை 6 வரை 78 தொகுதிகளுக்கு மாத்திரமே தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தன.

வாரணாசி தொகுதியில் பிரதமர் மோடி 1,50,423 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தார்.

அதேபோல, வயநாடு தொகுதியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 3,61,394 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தார். அவர் போட்டியிடும் மற்றொரு தொகுதியான உத்தரப் பிரதேசத்தின் ரே பரேலியிலும் 3,88,615 வாக்குகள் வித்தியாசத்தில் நேற்றுப் பிற்பகல் முன்னிலையில் இருந்தார்.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், நீலகிரி, வட சென்னை, தென் சென்னை, மத்திய சென்னை, சிதம்பரம், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட 38 தொகுதிகளில் தி.மு.க கூட்டணி முன்னிலை பெற்றுள்ளது.

தருமபுரி தொகுதியில் மட்டும் பா.ஜ.க கூட்டணியில் போட்டியிடும் பா.ம.க வேட்பாளர் சௌமியா அன்புமணி முன்னிலையில் இருந்தார். தமிழ்நாட்டில் அதிக இடங்களில் தி.மு.க முன்னிலை பெற்றுள்ளதை அக்கட்சியினர் விமர்சையாக கொண்டாடி வருகின்றனர்.

தமிழகத்தில் பா.ஜ.கவின் நம்பிக்கையாக கருதப்பட்ட அக்கட்சியின் மாநில தலைவர் கே. அண்ணாமலை 38,000 இற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் பின்னடைவை சந்தித்துள்ளார். அவர் போட்டியிட்ட கோயம்புத்தூர் தொகுதியில், திமுக வேட்பாளர் கணபதி ராஜ்குமார் 2,10,049 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

தென்சென்னை தொகுதியில் திமுக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் 1,39,272 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார். பாஜக வேட்பாளர் தமிழிசை சௌந்தரராஜன் 46,272 வாக்குகள் வித்தியாசத்தில் இரண்டாவது இடத்தில் இருந்தார்.

மத்திய சென்னை தி.மு.க வேட்பாளர் தயாநிதி மாறன் 1,16,200 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார்.

தி.மு.க வேட்பாளர் கனிமொழி, தூத்துக்குடி தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

விருதுநகர் தொகுதியில் அ.தி.மு.க கூட்டணியில் போட்டியிட்ட தே.மு.தி.க வேட்பாளர் விஜயபிரபாகரன் 4,162 வாக்குகள் வித்தியாசத்தில் பின்னடைவைச் சந்தித்துள்ளார்.

கர்நாடகாவில் மொத்தம் உள்ள 28 மக்களவை தொகுதிகளில் 10 இற்கும் மேற்பட்ட தொகுதிகளில் பாஜக பின்னடைவை சந்தித்துள்ளதால், பா.ஜ.க கவலையடைந்துள்ளது.

# தமிழருவி த.சிவகுமாரன் இம்மாதம் லண்டனுக்கு ஆன்மீக இலக்கிய பயணம்

இலங்கையின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான தமிழருவி த.சிவகுமாரன் இம்மாதம் 22, 23 ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெறும் உலக சைவ மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்தும் 23 ஆவது உலக சைவ மாநாடு, முதல்நாள் லண்டன் விம்பிள்டன் ஸ்ரீ கணபதி கோவில் மாநாட்டு மண்டபத்திலும் இரண்டாம் நாள் லண்டன் லூசியம் சிவன் கோவில் மண்டபத்திலும் இடம்பெற உள்ளது.

'சைவமும் தமிழிசையும்' என்னும் பொதுத்தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இவ்விருநாட்கள் மாநாட்டில் தமிழகம், மலேசியா, கனடா, பிரான்ஸ்,சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிருந்து மகாசந்நிதானங்களும் அறிஞர்களும் கலந்து சிறப்புரைகளையும் செயலமர்வுகளையும் நிகழ்த்தவுள்ளனர்.

'சைவ ஆலயப் பயன்பாட்டில் தமிழிசை', 'இளைஞர்கள் மத்தியில் தமிழிசை' என்னும் பொருள்களில் முறையே இரு தினங்களும் பேருரைகளை ஆற்றவுள்ள தமிழருவி சிவகுமாரன், முதல்நாள் மாநாட்டில் நடைபெறவுள்ள 'இடம்பெயர்ந்ததும் புலம்பெயர்ந்ததும் எம் தமிழ் மக்களுக்கு நன்மைகளைப் புரிந்திருக்கிறதா? அல்லது தீமைகளைப் புரிந்திருக்கிறதா?' என்னும் தலைப்பில் ஆறு அறிஞர்கள் பங்குபற்றும் பட்டிமண்டபத்திற்குத் தலைமை தாங்கவுள்ளார். மாநாட்டில் பல அறிஞர்கள் எழுதிய சைவம்,தமிழிசை பற்றிய கட்டுரைகளைத் தாங்கிவரும் மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.



லண்டனில் நடைபெறவுள்ள தமிழ் விழாக்கள், கம்பன் விழா, வவுனியா சங்கமம், நடன அரங்கேற்றம், மூத்தோர் நிலை நிகழ்வுகள், ஆலய உற்சவங்களில் உரையாற்றவுள்ள தமிழருவி சிவகுமாரன் ஸ்கொட்லாந்து, எடின்பரோ நகரில் இருந்து சிறப்பாகச் செயற்பட்டு வரும் இந்து மகாசபையின் பத்தாமாண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

லண்டனில் 1998 இல் நடைபெற்ற முதலாவது உலக சைவ மாநாட்டில் கலந்து கொண்டதிலிருந்து இங்கு நடைபெற்ற பதினொரு சைவ மாநாடுகளிற்கு இவர் அழைக்கப்பட்டு சிறப்புரைகளை ஆற்றிய பெருமைக்குரியவர். தமிழருவி சிவகுமாரன் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், ஹொலண்ட், நோர்வே, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் இலக்கிய, சமய அமைப்புகளால் தமிழ் இலக்கிய ஆன்மிகச் சொற்பொழிவுகளுக்காக தொடர்ச்சியாக அழைக்கப்பட்டு வருபவர்.

தனது நாவன்மையின் சிறப்பால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எண்பத்தைந்து விருதுகளை இதுவரை பெற்றுள்ளார். இவரது பணிகளுக்காக இலங்கையின் புகழ்பூத்த கல்லூரியாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தான் வழங்கிய முதலாவது 'வாழ்நாள் சாதனையாளர்' விருதை தமிழருவி சிவகுமாரனுக்கு வழங்கி தனது பழைய மாணவனைச் சிறப்பித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

லண்டனிலிருந்து **சி.தயாளன்...**
(ஆர்ச்வே முருகன் ஆலயம், ஹைகேற்)

# அர்ரஹ்மானின் விருந்தினர்களுக்கு சவூதி ஆற்றும் பெரும் சேவைகள்



ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம் ஹி: 1381 இல் 'ஹஜ் மற்றும் வக்ப் அமைச்சகம்' என்ற பெயரில் நிறுவப்பட்டது. இது ஹஜ் மற்றும் வக்ப் விவகாரங்கள், அத்துடன் இரண்டு புனிதஸ்தலங்கள் மற்றும் மஸ்ஜிதுகள் ஆகியவற்றின் விவகாரங்களை மேற்பார்வையிடும் கடமைகளை ஆற்றிவருகிறது.

ஹிஜ்ரி 1414 இல், வக்ப் நிர்வாகப் பிரிவு 'இஸ்லாமிய விவகாரங்கள், வக்ப், தஃவா மற்றும் வழிகாட்டுதல் அமைச்சகம்' என்ற பெயரில் சுயாதீன அமைச்சகமாக, ஒரு சுயாதீனமான நிர்வாகப் பிரிவாகப் பிரிக்கப்பட்டது.

அவ்வாறே இரண்டு புனிதஸ்தலங்களின் விவகாரங்களுக்கான மேற்பார்வை அதிகாரசபையும் புனித கஃபாவுக்கான போர்வை தயாரிக்கும் நிறுவனமும் 'மஸ்ஜிதுல் ஹராம் மற்றும் மஸ்ஜிதுந் நபவி விவகாரங்களுக்கான பொது தலைமையகம்' என்ற பெயரில் தனியான அலகாக வேறாக்கப்பட்டது.

மீதமுள்ள பகுதி 'ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம்' என்ற அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்டது.

மேலும் அதன் பணிகள் ஹஜ், உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் மஸ்ஜிதுந் நபவியை தரிசிப்போர் உட்பட அல்லாஹ்வின் விருந்தினர்களுக்கு சேவை செய்யும் துறையில் அரசின் கொள்கையை செயல்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. மேலும் சட்ட ஒழுங்குகளை முன்மொழிந்து தயாரித்து வழங்குவதிலும், தனியார் துறைகளின் பணிகளை மேற்பார்வை செய்து அதன் நல்ல செயல்திறனைக் கண்காணித்து உயர்ரக சேவையை வழங்குவதிலும் கவனம் செலுத்தி வருகிறது.

ஹஜ், உம்ரா மற்றும் தரிசிப்பு பயணத்தை ஒழுங்குபடுத்துவதிலும், அதை எளிதுபடுத்தி அமைதியானதும் பாதுகாப்பானதுமான சூழலில் அவற்றை இடம்பெறச் செய்வதிலும் ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு கவனம் செலுத்தி வருகிறது.

அமைச்சின் நோக்கங்களில் பின்வருவன பிரதானமானவையாகும்:

★ ஹஜ் யாத்திரிகருக்கான சேவை: கௌரவமானது, அமாநிதமானது, பொறுப்புமிக்கது என்ற சுலோகத்தை சரிவர நிறைவேற்றல்.

★ யாத்ரீகர்கள் மற்றும் உம்ரா செய்பவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தும் முயற்சிகளில் கவனம் செலுத்தல்.

★ ராஃப்டிங், ஏஜென்சி மற்றும் வழிகாட்டுதல் மற்றும் உள்நாட்டு ஹஜ் ஆகிய தொழில்களின் பணிகளை சமீபத்திய தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்தி மேம்படுத்துதல்.

★ பயன்படுத்தப்படும் மனித முயற்சிகள், மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகள் மூலம் ஹஜ்ஜை எளிதுபடுத்தப்பட்டதாகவும், சிக்கலற்றதாகவும் மாற்றும் முயற்சிகளை முன்னெடுத்தல்.

★ புகழ்பெற்ற மற்றும் பயனுள்ள பயிற்சித் திட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம், ஹஜ் உம்ரா யாத்திரிகர்களுக்கு சிறப்பான சேவைகளை உறுதிசெய்ய களப்பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துதல்.

★ ஹஜ் உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் தரிசிப்போர் அவர்களின் கிரியைகளை சிரமங்களின்றி, எளிதாக முன்னெடுப்பதற்காக அது தொடர்பான அனைத்து அதிகாரிகளுடனும் ஒருங்கிணைத்து ஒத்துழைத்தல்.

★ சகிப்புத்தன்மையுள்ள இஸ்லாமிய நம்பிக்கையின் பெறுமானங்கள் மற்றும் போதனைகளுக்கு ஏற்ப சிறந்த சேவைகளை வழங்கி பணியாற்றுதல்.

★ ஒரு அதிகாரியாக இருந்தாலும் அல்லது தன்னார்வத் தொண்டராக இருந்தாலும், அர்ரஹ்மானின் விருந்தினர்களுக்கு சேவை செய்வதில் பங்களிக்க குடிமக்களை ஊக்குவிக்கும் முயற்சிகளை ஒன்றிணைத்தல்.

புனிதஸ்தலங்களையும், ஹஜ் உம்ரா யாத்திரிகர்களுக்கு வழங்கப்படும் சேவைகளையும் தொடர்ந்து விஸ்தரிப்பதில் ஸவூதியின் அபிவிருத்தி திட்டவரைபு கவனம் செலுத்தி வருகிறது.

ஹஜ் உம்ரா சேவைகள் தொடர்பான சில நோக்கங்களை இத்திட்டம் வரையறுத்துள்ளது. அவை:

1. ஹஜ் உம்ரா யாத்திரிகர்கள் ஸவூதி அரேபியாவின் தரை, வான் மற்றும் கடல் வழி துறைமுகங்களூடாக வந்தடைந்தது முதல் அவர்கள் புறப்படும் வரை மற்றும் மக்கா, மதீனாவில் தங்கியிருக்கும் காலமெல்லாம் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்.

2. ஹஜ் மற்றும் உம்ரா சேவைகளை வழங்குவதற்கு பொறுப்பான நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.

3. ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம் மற்றும் அதன் மேற்பார்வையின் கீழ் உள்ள நிறுவனங்களின் நிறுவன மற்றும் நிறுவன கட்டமைப்பு மேம்பாடு.

4. யாத்திரிகர்கள் மற்றும் உம்ரா செய்பவர்களுக்கு கல்வி கற்பித்தல் மற்றும் அவர்களின் கிரியைகளை எளிதாகவும் வசதியாகவும் செய்ய அவர்கள் தொடர்பான விதிமுறைகள், உரிமைகள் மற்றும் கடமைகளை அவர்களுக்கு உணர்த்துதல்.

5. யாத்திரிகர்களின் வழிகாட்டுதல் மையங்கள் மற்றும் குழுவாக்கும் கட்டுப்பாட்டு மையங்களை உருவாக்குதல், அத்துடன் மக்கா, மதீனா மற்றும் புனிதத் தலங்களில் யாத்திரிகர்களின் வழிகாட்டல் மையங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சு; யாத்திரிகர் கிரியையை செய்ய நினைக்கும் நேரத்திலிருந்து, அவர் தனது தாயகத்திற்குத் திரும்பும் வரை பல்வேறு பணிகளைச் செய்கிறது.

**அஷ்ரப் ஆப்தீன்...**
ரியாதி, விரிவுரையாளர்
தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்

தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

# முதல் காலாண்டில் இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நேரடி வெளிநாட்டு முதலீடுகள்

## இந்த ஆண்டு இறுதிக்குள் 4 பில். டொலர் முதலீட்டு இலக்கை அடைய எதிர்பார்ப்பு

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) இலங்கை ஈர்த்துள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் முதலீட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட முதலீட்டாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"இது எங்கள் முதல் காலாண்டு இலக்கை நிறைவேற்றுகிறது, மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் 4 பில்லியன் டாலர் முதலீட்டு



இலக்கை அடையவதற்கு எதிர்பார்க்கிறோம்" என்று அவர் கூறினார்.

அதானி சோலார் திட்டம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ததன் மூலம் ஒரு பில்லியன் டாலர் முதலீட்டு நோக்கம் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. 320 மில்லியன் டொலர் பெறுமதியான வேறு ஒப்பந்தம் முதலீட்டுச் சபையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கையொப்பமிடப்பட்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும், நிலுவையில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், 2024 முதல் காலாண்டில் கையொப்பமிடப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கவும் இந்த முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

மேலும், அனைத்து முதலீட்டாளர்களும் தமது திட்டங்களை பிரச்சினையின்றி முன்னெடுத்துச் செல்வதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

முதலீட்டுச் சபை பணிப்பாளர் நாயகம் ரேணுகா எம்.வீரகோன் குறிப்பிடுகையில், முதலீட்டாளர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் IFC (முதலீட்டாளர் வசதியளித்தல் மையம்) மூலம் தீர்க்க முடியும் என்றும், எந்தவொரு ஒப்புதல் தொடர்பான பிரச்சினையும் மிகக் குறுகிய காலத்தில் தீர்க்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முதலீட்டாளர்கள், தங்கள் திட்டங்களை தொடங்குவதற்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் முதலீட்டு சபையில் இருந்து பெற்றுள்ளதாக தெரிவித்தனர்.

## AB Mauri Lankaவின் 3 புதுமையான வெதுப்பக தயாரிப்புகள் CAF 2024 கண்காட்சியில்

ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட அசோசியேட்டட் பிரிட்டிஷ் ஃபுட்ஸ் பிஎல்சிக்கு [Associated British Foods PLC] சொந்தமான AB Mauri Lanka, CAFE 2024 Culinary Art Food Expo இல் 3 புதுமையான தயாரிப்புகளை சந்தைக்கு அறிமுகப்படுத்த உள்ளது. இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை கொழும்பு BMICH இல் நடக்கவிருக்கும் சமையல் கலை கண்காட்சியான CAFE 2024 இல் இம்மூன்று புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்த உள்ளது. ஒவ்வொரு வெதுப்பக உள்ளடக்கமும் வணிக மற்றும் கைவினைஞர் வெதுப்பகர்களின் வாய்ப்புகளுக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை vegan baking,முட்டை மாற்றீடு, மற்றும் புகழ் பெற்ற sourdough சுவையூட்டிகளை கொண்டதாக அமைந்திருக்கும்.

உணவுக் கண்காட்சியில் கலந்து கொள்ளும் வெதுப்பகர்கள், FOVO சைவ உணவு மற்றும் முட்டை மாற்றீடு, அரோமாஃபெர்ம் தானிய நொதித்தல் மற்றும் பன் நெகிழ்வடைவதற்கான வேகா பற்றிய மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள முடியும். AB Mauri Lanka பிரதிநிதிகள் மேற்படி தினங்



களில் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரையில் இருப்பார்கள். கண்காட்சி கூடங்கள் 66 68 இல், 'வெதுப்பகத்துறையின் எதிர்காலத்தை அனுபவிக்க ஒரு அழைப்பு' என்ற கருப்பொருளின் கீழ் தங்கள் சலுகைகளைப் பற்றி இங்கு அறிந்து கொள்ள முடியும்.

"எங்கள் சமீபத்திய தொழில்நுட்பத்தை ஆராயவும், சிறந்த பேக் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை உருவாக்குவதில் எங்கள் புதிய தயாரிப்புகள் எவ்வாறு அவர்களுக்கு உதவ முடியும் என்பதைப் பற்றிய நுண்ணறிவைப் பெறவும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து வெதுப்பக மற்றும் சமையல் நிபுணர்களை அழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று AB Mouri லங்காவின் வதிவிடப் பணிப்பாளர் சுராஜ்தீன் செய்யத் தெரிவித்தார்.

## சுகாதார பராமரிப்பு அணுகலை மேம்படுத்துவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ், oDoc இணைவு

முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையில் முன்னணி தொலைத்தொடர்பாடல் மருத்துவ சேவைகள் வழங்கும் நிறுவனமான oDoc உடன் பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது. சௌகரியமான மற்றும் வினைத்திறனான சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதை கவனத்தில் கொண்டு, தனது காப்புறுதிதாரர்களுக்கு மூலோபாய பங்காண்மைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கத்தினூடாக சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பின் பிரகாரம் யூனியன் அஷ்யூரன்ஸ் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் oDoc வாடிக்கையாளர்கள் அனைவரும் பெருமளவு அனுகூலம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



oDoc கட்டமைப்பினூடாக சகல வைத்திய ஆலோசனைகளுக்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதிதாரர்களுக்கு பிரத்தியேகமான விலைக்கழிவுகள் வழங்கப்படும். இதனை யூனியன் அஷ்யூரன்ஸ் ClickLife App இனூடாக இலகுவாக அணுகக்கூடியதாக இருக்கும். இந்த பிரத்தியேகமான சலுகையினூடாக, தரமான சுகாதாரப் பராமரிப்பை அணுகுவதற்கு ஒப்பற்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், காப்புறுதிதாரர்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்களுடன் சௌகரியமான முறையில் அணுகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

oDoc வாடிக்கையாளர்களுக்கு மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க ஆயுள் காப்புறுதி தீர்வுகளை யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும்.

## 2024 முதல் காலாண்டில் ரூபா 92.7 பில்லியன் திரட்டிய மொத்த வருமானத்தை ஈட்டி மக்கள் வங்கி சாதனை

இலங்கையின் முன்னணி நிதியியல் சேவைகள் வழங்குனரான மக்கள் வங்கி, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த முதலாவது காலாண்டுக்கான நிதியியல் பெறுபேறுகளை இன்று அறிவித்துள்ளது. மொத்த திரட்டிய தொழிற்பாட்டு வருமானமாக ரூபா 20.4 பில்லியனையும் மற்றும்



வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 2.5 பில்லியனையும் வங்கி பதிவாக்கியுள்ளது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, கூடுதல் விவேகத்துடன் மேற்கொள்ளப்பட்ட விதிவிலக்கான செம்மையாக்கல்களின் தாக்கம் நீங்கலாக, இந்த தொகைகளை சாதாரண நிலைமை அடிப்படையில் கருத்தில் கொள்ளும் போது அவை முறையே 18.2% மற்றும் 35.8வீத வளர்ச்சியுடன், ரூபா 28.4 பில்லியன் மற்றும் ரூபா 6.6 பில்லியன் ஆக அமைந்துள்ளன.

திரட்டிய தேறிய வட்டி வருமானம், 2023 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கப்பட்ட ரூபா 15.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இக்காலாண்டில் ரூபா 16.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. எந்தவொரு விதிவிலக்கானவற்றினதும் தாக்கம் நீங்கலாக, சாதாரண நிலைமை அடிப்படையில் திரட்டிய தேறிய வட்டி இலாப மட்டங்கள் 2023 இன் போது காணப்பட்ட 2.0வீதத்திலிருந்து 3.0வீதமாக மேம்பட்டுள்ளதுடன், கடனுக்கான தவணை வைப்புச் செலவின் குறைவை பிரதிபலிக்கின்றது. திரட்டிய தேறிய கட்டணங்கள் மற்றும் தரகுப் பணங்கள் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.7% அதிகரிப்புடன் ரூபா 3.8 பில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது. மொத்த திரட்டிய தொழிற்பாட்டுச் செலவுகள் ரூபா 17.6 பில்லியனாக காணப்பட்டது (2023: ரூபா 14.4 பில்லியன்).

மொத்த திரட்டிய வாடிக்கையாளர் வைப்புக்கள் ரூபா 2,808.3 பில்லியனை எட்டியுள்ளதுடன் (2023 இன் முடிவில்: ரூபா 2,745.2 பில்லியன்), நிகர கடன்கள் ரூபா 1,845.4 பில்லியனாக காணப்பட்டது (2023 இன் முடிவில்: ரூபா 1,823.8 பில்லியன்). திறன்குறை கடன் விகிதமும் 2023 இன் முடிவுடன் ஒப்பிடுகையில் மேம்பாட்டைக் காண்பித்துள்ளது. மொத்த திரட்டிய சொத்துக்கள் இக்காலப்பகுதியின் முடிவில் ரூபா 3,264.5 பில்லியனை எட்டியுள்ளன (2023 இன் முடிவில்: ரூபா 3,208.2 பில்லியன்).

## நிலைபேறான கழிவு முகாமைத்துவத்திற்காக Neptune Recyclers ற்கு உலகளாவிய அங்கீகாரம்

அதிக சூழல் விழிப்புணர்வு அவசியமான இந்த சகாப்தத்தில், மிகவும் ஈர்க்கக்கூடிய வகையிலான 99.25% கழிவு மாற்றீட்டு விகிதத்துடன் தொழில்துறை முன்னணி அமைப்பாக Neptune Recyclers திகழ்கின்றது. இந்தச் சாதனையானது Neptune Recyclers அமைப்பை இலங்கையில் ஒரு சூழல் சேவையாளராக நிலைநிறுத்துவதோடு மட்டுமல்லாமல், Intertek யிடமிருந்து பெறுமதிமிக்க Zero Waste to Landfill (பூமிக்கு பூச்சிய கழிவு) சான்றிதழைப் பெற்ற உலகின் முதலாவதும் ஒரேயொரு கழிவு முகாமைத்துவ நிறுவனமாகவும் உள்ளது.



Intertek இன் சான்றழிப்பு திட்டமானது, Zero Waste to Landfill, Near Zero Waste to Landfill, Advanced Waste Diversion ஆகிய 3 வகைகளில் வழங்கப்படுகிறது. Neptune Recyclers இனது சாதனையானது, மூன்று வருட சான்றழிப்பு காலத்தில் அதன் வலுவான கழிவு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான நீடித்த உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்த முக்கிய சாதனைகளில், Intertek இன் Zero Waste to Landfill சான்றிதழை கொண்டிருக்கும் ஒரேயொரு கழிவு முகாமைத்துவ நிறுவனம் எனும் உலகளாவிய அங்கீகாரம் அடங்குகின்றது. இது ஒரு வரலாற்று ரீதியான தொழில்துறை சாதனையாகவும் அமைகிறது. 99.25% கழிவு சுழற்சி வீதத்துடன் இலங்கையில் முன்னணியில் உள்ள Neptune Recyclers, சூழல் நிலைபேறான தன்மைக்கான அர்ப்பணிப்பை இதன் மூலம் வெளிப்படுத்துகிறது. சூழல் தொடர்பான விசேடத்துவம் தொடர்பில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் மூலம், அது தனது முதலாவது சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. அத்துடன். தொழில்துறையின் ஒரு முன்னோடி எனும் வகையில், அதன் நிலையை இது மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

## இறப்பர் விவசாயிகளின் குழந்தைகளின் கல்விக்கு ஆதரவளித்துவரும் சியெட்

சியெட் களனி ஹோல்டிங்ஸ் இலிருந்து இறப்பர் பயிர்ச்செய்கை பிரதேசங்களில் உள்ள பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் சமூக செயற்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மற்றும் எல்பிட்டிய பிரதேசங்களில் உள்ள நான்கு பாடசாலைகளின் மாணவர்கள் தமக்குத் தேவையான காலணிகள் மற்றும் பாடசாலை பைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

படத்தோட்ட, மஹவத்த கந்த வித்தியாலயம் – படத்தோட்ட மற்றும் லஸ்ஸகந்த வித்தியாலயம் – எரத்ன, அனைத்தும் இரத்தினபுரி மாவட்டம் குருவிட்ட பிரதேசம், மற்றும் ஸ்ரீ தம்மாதிலக மகா வித்தியாலயம் எல்பிட்டியவில் உள்ள திவிதுர போன்ற பகுதியை சேர்ந்த மாணவர்கள் சமீபத்திய இத்திட்டத்தில் பயனடைந்தனர்.

10,000 விவசாய குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 100 சதவீத இயற்கை இறப்பர் தேவைகளை பெற்றுக் கொள்ளும் இலங்கையின் காற்றழுத்த டயர் தேவைகளில் பாதியை உற்பத்தி செய்யும் சியெட் களனி இப்பாடசாலைகளிலுள்ள மொத்தம்



236 குழந்தைகளுக்கு காலணிகள் மற்றும் பள்ளிப் பைகள் ஆகியவற்றை வழங்கியது.

மத்துகம கல்வி வலயத்தை மையமாகக் கொண்ட இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் நல்ல குடியுரிமை முயற்சிகளின் 'சியட் கேர்ஸ்' போர்ட்ஃபோலியோவின் ஒரு பகுதி மூலம் இரண்டு பள்ளிகளைச் சேர்ந்த 119 குழந்தைகள் பயனடைந்தனர்.

## PCI DSS Version 4 சான்றிதழைப் பெற்ற முதலாவது உள்நாட்டு வங்கியாக யூனியன் வங்கி தெரிவு

யூனியன் வங்கி Payment Card Industry Data Security Standard (PCI DSS) version 4 சான்றிதழைப் பெற்ற முதலாவது வங்கி எனும் முக்கியமான மைல்கல்லை பூர்த்தி செய்துள்ளது. இந்த நிலை கௌரவிப்பைப் பெற்றுக் கொண்ட முதலாவது உள்நாட்டு வங்கி எனும் நிலையை எய்தியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் PCI DSS சான்றிதழினூடாக தொடர்ச்சியாக எய்தியிருந்த சாதனைகளின் வெளிப்பாடாக, வாடிக்கையாளர் தகவல் பாதுகாப்பில் உயர் நியமங்களை பேணியிருந்தமைக்காக வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த சான்றிதழ் மேலும் உறுதி செய்துள்ளது.

யூனியன் வங்கியின் பிரதம தகவல் அதிகாரி நிஷில கொடிப்பிலி கருத்துத் தெரிவிக்கையில், "PCI DSS version 4 சான்றிதழ் என்பதனூடாக, பாதுகாப்பான கொடுப்பனவு கையாளலில் பிந்திய மற்றும் மேம்படுத்தப்பட்ட நியமங்கள் பிரதிபலிக்கப்படுகின்றன. அதனூடாக பிந்திய பாதுகாப்பு ஏற்பாடுகளினூடாக வாடிக்கையாளர் தரவுகள் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்படுகின்றது. வாடிக்கையாளர் தகவலை பாது



காப்பதற்கான யூனியன் வங்கியின் அர்ப்பணிப்பு மற்றும் அதன் நிதிச் சேவைகள் மீதான நம்பிக்கையை பேணுவதற்கான எடுத்துக்காட்டாக இந்த சான்றிதழ் அமைந்துள்ளது.

பாதுகாப்பு மற்றும் பின்பற்றல் செயற்பாடுகளில் வங்கியின் முன்னாயத்தமான செயற்பாடுகள் தொழிற்துறையில் நியமத்தை தோற்றுவித்துள்ளதுடன், நவீன பாதுகாப்பு செயன்முறைகளை பின்பற்றுவதில் தலைமைத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது." என்றார்.

## பிரமாண்டமாக இடம்பெற்ற ஸ்ரீயானி டிரெஸ் பொயின்ட் வர்ண இரவு

தைத்த ஆடைகள் துறையில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையையும் கௌரவத்தையும் பெற்ற ஸ்ரீயானி டிரெஸ் பொயின்ட் (Sriyani Dress Point) நிறுவனம், அதன் ஊழியர்களை பாராட்டும் வகையில் "ஸ்ரீயானி டிரெஸ் பொயின்ட் வர்ண இரவு" எனும் நிகழ்வை, நிறுவனத்தின் தலைவர் மாரியாப்பிள்ளை செல்வராஜ் தலைமையில் கடந்த மே 23ஆம் திகதி கோட்டே, மொனார்ச் இம்பீரியல் ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது.

முப்பது வருடங்களுக்கும் மேலாக நுகர்வோரின் இதயங்களை வென்றுள்ள தைத்த ஆடைகள் உற்பத்தியாளரும், விற்பனையாளருமான ஸ்ரீயானி டிரெஸ் பொயின்ட், தற்போது கேகாலை, குருணாகல், மாத்தளை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, கண்டி, பேராதனை, யட்டிநுவர ஆகிய இடங்களில் அதன் விஸ்தீரணமான காட்சியறை வலையமைப்பைக் கொண்டுள்ளது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான ஸ்டைலான தைத்த



ஆடைகள், பாதணிகள், அணிகலன்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும், இலங்கையின் முன்னணி வர்த்தக நாமமாக ஸ்ரீயானி டிரெஸ் பொயின்ட் விளங்குகிறது. தனது 1,200 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நட்புறவான சேவைகளை வழங்க நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

## 2024இன் முதல் காலாண்டில் நிதிசார் வளர்ச்சியைப் பதிவு செய்த SLT–MOBITEL

2024இன் முதல் காலாண்டு பகுதியில் சவால்களுக்கு மத்தியிலும் எல்லையளவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது SLTMOBITEL. எவ்வாறாயினும், நிறுவனத்தின் தூரநோக்குடைய செலவு நிர்வாக செயற்பாடுகளின் காரணமாக, பெருமளவு தொழிற்பாட்டு செலவீன சேமிப்புகளை பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், இலாபகரத்தன்மையை பேண முடிந்திருந்தது.

நிறைவடைந்த முதல் காலாண்டில், SLT குழுமம் மொத்த வருமானமாக ரூ. 26.93 பில்லியனை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 1.4% வளர்ச்சியாகும்.

எவ்வாறாயினும், முன்னைய நிதியாண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், வருமானத்தில் 3.7% அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது. இதில் நிறுவனசார் மற்றும் புரோட்பான்ட் பிரிவுகளின் வருமான அதிகரிப்பு முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தது.



நிறுவனம் செலவுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், 2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், தொழிற்படு செலவீனத்தில் 0.6% சரிவை ஏற்படுத்தியிருந்தது (தேய்மானம் மற்றும் பெறுமதி இறக்கம் தவிர்ந்த). வருடாந்த பராமரிப்பு செலவு (AMC), சர்வதேச கொடுப்பனவுகள் மற்றும் இணைய பின்புல கட்டணங்கள் போன்றன ரூபாய் மதிப்புயர்வு காரணமாக டொலர் சார்ந்த செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இதில் முக்கிய பங்காற்றியிருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், தளம்பல்களுடனான வியாபார சூழல் காணப்பட்டதுடன், பெரும் பொருளாதார காரணிகளினால் நிறுவனத்தின் வருமானத்தில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், SLTMOBITEL துரிதமாக செலவு செம்மையாக்கல் மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்ததுடன், அதனூடாக நிறுவனத்துக்கு தொழிற்படு செலவை குழும மட்டத்தில் 2.7% வரை சேமித்துக் கொள்ள முடிந்தது.

SLTMOBITEL இன் செலவு சேமிப்பு முயற்சிகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில், குறிப்பாக வருடாந்த பராமரிப்பு செலவுகள், வாகன வாடகை கட்டணங்கள், சர்வதேச செலுத்துகைக் கட்டணங்கள் மற்றும் பழுதுபார்ப்பு, பராமரிப்பு செலவுகள் போன்றன அடங்கியிருந்தன.

## புதிய முறைமையை மாற்ற முடியாது...

தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

அஸ்வெசும இரண்டாம் கட்டத்தை உறுதிப்படுத்துவது மிக முக்கியமானதாகும். இம்மாதம் 15 ஆம் திகதியளவில் உறுதிப்படுத்தப்படும் இந்த இரண்டாம் கட்ட விடயங்கள் முக்கியமானவை.

மூன்று தசாப்தங்களாக பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையையே, நாம் தற்போது மாற்றியுள்ளோம்.

இந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாத அல்லது அதனை விரும்பாத தரப்பினரும் உள்ளனர். பழைய முறைமையையே முன்னெடுத்து, அதிலுள்ள தவறுகள் மற்றும் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும் என சிந்திக்கும் தரப்பினரும் உள்ளனர்.

எவ்வாறெனினும் இந்த நடவடிக்கைகளில் சில குறைபாடுகள் உள்ளதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் இந்த குறைபாடுகளை நாம் இக்காலங்களில் இனங்கண்டுள்ளோம்.

## நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையான நிதியை ஒதுக்கியுள்ளார் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எம்பிக்கள் பலரும் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் கடந்த தினங்களில் நிலவிய சீரற்ற காலநிலையால் நேற்று முன்தினம் வரை 23 மாவட்டங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 622 குடும்பங்களை சேர்ந்த 1,30,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலையால், ஏற்பட்ட அனர்த்தங்களால் 26 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 41 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் மண்சரிவு மற்றும் வெள்ள அபாயம் காரணமாக 116 தற்காலிக முகாம்களில் 2369 குடும்பங்களைச் சேர்ந்த 9,248 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவு உள்ளிட்ட தேவைகள் பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டு வருவதுடன், அனர்த்தங்களின்போது மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் முப்படையினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இயற்கை அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என, எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அனர்த்தங்கள் தொடர்பில் தகவல்களை வழங்கவும் பெற்றுக் கொள்ளவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் 117 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

## மூன்றாவது தடவையாகவும்...

அறிவிக்கப்பட்டிருந்தன. அந்த 78 தொகுதிகளில் பா.ஜ.க 48 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்தது. ஆட்சியமைப்பதற்கு 272 ஆசனங்கள் தேவை. பா.ஜ.க 300 தொகுதிகள் வரை வெற்றி பெறலாம் என்று நேற்றைய தகவல்கள் தெரிவித்தன. எனினும் இறுதி முடிவுகள் நேற்றிரவும் வெளிவரவில்லை.

இந்திய மக்களவைத் தேர்தல் வாக்குகள் எண்ணும் பணி நேற்றுக் காலை ஆரம்பமானதையடுத்து பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அணியே நேற்று மாலை வரை வெற்றிவாய்ப்பில் இருந்தது. நாடு முழுவதும் 7 கட்டங்களாக நடத்தப்பட்ட மக்களவை தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்றுக் காலை 8 மணி முதல் எண்ணப்பட்டன. நேற்று மாலை வரையான நிலைவரப்படி பா.ஜ.கவே முன்னிலை வகித்தது. தேர்தல் முடிவுகள் நேற்று இரவும் முழுமையாக வெளியாகவில்லை. ஆகவே இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இந்திய மக்களவைத் தேர்தலின் இறுதி முடிவு வெளியாகவில்லை.

ஆனாலும் பா.ஜ.கவே மீண்டும் ஆட்சியமைக்கும்படியாக நேற்று மாலை வரையான முடிவுகள் அமைந்திருந்தன. 78 தொகுதிகளுக்கான முடிவுகள் நேற்று மாலை வரை அறிவிக்கப்பட்டிருந்தன. தேசிய அளவில் தேர்தல் முடிவுகளில் பா.ஜ.க 295 இற்கு மேற்பட்ட இடங்களில் முன்னிலையில் இருந்தது. எதிரணியான 'இந்தியா' கூட்டணி 232 தொகுதிகளில் முன்னிலையில் இருந்தது. இதேவேளை தமிழகத்தில் பா.ஜ.கவின் தாமரை கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் தி.மு.கவே பெருவெற்றி ஈட்டியுள்ளது. தமிழ்நாட்டில் முதன்முறையாக 10 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றுள்ளது பா.ஜ.க என்பது குறிப்பிடத்தக்கது. வாரணாசி தொகுதியில் பிரதமர் மோடி வெற்றி பெற்றார்.

ராகுல் காந்தி வயநாடு தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

## நானு ஓயா, நுவரெலியா சம்பவங்கள்...

மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அமைச்சரவை அமைச்சர் மற்றும் மலையக மக்களின் பிரதிநிதி என்ற வகையிலும் பிரபல அரசியல் கட்சி ஒன்றின் பொதுச் செயலாளர் என்ற வகையிலும், இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அமைச்சர் ஜீவன் தெரிவித்துள்ளார்.

## பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இதன்படி தோட்டப்புறங்களிலுள்ள தமிழ் பாடசாலைகள் மற்றும் மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூல தமிழ் பாடசாலைகள் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளிலும் ஆசிரிய உதவியாளர்களை நியமனம் செய்வதற்கான வர்த்தமானி இவ்வாரத்தில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், ரோஹண பண்டார எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தோட்டப்புறங்களில் "இசற்" வெட்டுப் புள்ளிக்கமைய ஆசிரியர்கள் தெரிவாவதில்லை.இப்பகுதிகளில், பட்டதாரிகள் குறைந்தளவிலேயே காணப்படுகின்றனர். எவ்வாறெனினும் தோட்டப்புற பாடசாலைகளுக்கு இம்முறை நியமனங்கள் வழங்கப்படும்.

ஆசிரிய உதவியாளராவதற்கு அடிப்படைத் தகுதியுள்ளவர்களை தெரிவு செய்து, அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன்படி தோட்டப்புறங்களிலுள்ள தமிழ் பாடசாலைகள் மற்றும் தோட்டப்புறங்களை அண்மித்த தமிழ் பாடசாலைகள் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கான வர்த்தமானி இவாரம் வெளியிடப்படும்.

இரண்டு வாரங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்ப டும்.நேர்முகத் தேர்வை நடத்தி அதில் சித்தியடைபவர்களுக்கு ஆசிரிய உதவியாளர்களாக கொடுப்பனவு வழங்கி 3 வருடங்களில் தேசிய கல்வி நிறுவனத்தால் டிப்ளோமோ வழங்கப்படும்.

இதன் பின்னர் நியமனம் வழங்குவதற்கான பட்டியலை, மாகாண சபைகளுக்கு அனுப்பி 2535 பேருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட...

வழங்கியுள்ளது. இதன்படி, கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணங்களுக்கு அனுமதி வழங்காமை, அனுமதியற்ற அனைத்து நிர்மாணங்களையும் அகற்றுதல், தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் காணி நிரப்பும் நடவடிக்கைகளை நிறுத்துதல், தற்போதுள்ள நீர் விநியோகிக்கும் நிலையங்களின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்து வடிகாலமைப்புகளைப் புனரமைத்து உடனடியாக திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல் ஆகிய விடயங்களில் கவனம் செலுத்துமாறு கொலன்னாவ பிரதேச செயலக அதிகாரிகளுக்கு அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், கொழும்பு பெரு நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான மூல காரணங்களை இனங்கண்டு, எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாமலிருப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல், கொலன்னாவ நகரை மீள் திட்டமிடலுக்கான விரிவான அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், கொலன்னாவ பிரதேச செயலகத்தில் உள்ள காணிகளை உகந்த வகையில் பயன்படுத்த திட்டமிடுதல் ஆகிய பணிகளுக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் உள்ளிட்ட ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் அமைச்சரவையில் சமர்பிக்கும் வகையில் ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு அமைச்சரவை அறிவித்துள்ளது.

## திருகோணமலை ...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை மாவட்டத்தில் பாடசாலையொன்றின் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவரவில்லை. இந்த ஆதங்கம் முஸ்லிம் மக்களிடமிருந்து வெளிவருகிறது. ரிஷாட் பதியுதீன் உட்பட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களின் கவலைகளை இங்கே வெளிப்படுத்தியுள்ளனர். திருகோணமலை சாஹிரா கல்லூரியிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 70 மாணவர்களின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன . இந்த விடயம் மிகவும் கவலைக்குரியது. அந்த பிள்ளைகள் பல கனவுகளுடன் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இந்நிலையயில் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை அவர்களுக்கு ஏமாற்றத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தும்.

ஆகவே, இவ்விடயத்தில் இனம், மதம் தொடர்பில் பாரபட்சம் இடம்பெற்றுள்ளதா? என ஆராயப்பட வேண்டும். இது தொடர்பில் மாணவர்களுக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும். அந்த மாணவர்களின் பெறுபேறுகள் உடனடியாக வெளியிடப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலை சாஹிரா கல்லூரி உயர்தரப் பெறுபேறுகளை உடனடியாக வெளியிட வேண்டும்

### ரிஷாட் பதியுதீன் சபையில் வேண்டுகோள்

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் உயர்தரப் பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுமாறு ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சரிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று (04) நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், மேலும் கூறியதாவது,

திருகோணமலை சாஹிரா கல்லூரியில் கல்வி கற்று, சென் ஜோசப் கல்லூரியில் உயர்தரப் பரீட்சை எழுதிய 70 முஸ்லிம் மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த விவகாரம் தொடர்பில், எமது கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மஹ்ரூப்பின் ஊடாக உண்மை நிலையை விசாரித்தேன். இது குறித்து, ஸாஹிரா கல்லூரி அதிபருடனும் உரையாடினேன். பாதிக்கப்பட்ட மாணவியொருவர் மற்றும் பெற்றோருடனும் பேசினேன். இது ஒரு திட்டமிட்ட சதியாகவே எமக்கு புலப்படுகின்றது.

ஏற்கனவே, திருமலை மாவட்ட பாடசாலையொன்றில் ஆசிரியையின் அபாயா பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தபோது, நீதிமன்றம் பாடசாலை நிர்வாகத்தை எச்சரித்தமை நாடறிந்த விடயம்.

இந்தப் பின்னணியில், 70 மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாளை (5) தொடக்கம் பரீட்சை வினாத்தாள்கள் மீளாய்வுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாணவிகளுக்கு மீளாய்வுக்கான சந்தர்ப்பமும் இல்லாமல்போகும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

## வலுவான பொருளாதாரத்தை...

தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

சீரற்ற காலநிலையால் சேதமடைந்த வீதிகளை உடனடியாக புனரமைப்பதற்கு சுமார் 03 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சுமார் 12 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி, கிராமிய வீதிகளையும், பாலங்களையும் அமைக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளோம்.

எமது அமைச்சின் ஊடாக சுமார் 65 சதவீதமான பணிகளை ஆரம்பிக்க முடிந்துள்ளது. எதிர்வரும் நாட்களில் இப்பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படும்.

கடந்த வருடங்களில் கட்டுமானத் துறை வீழ்ச்சியடைந்திருந்தது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு மற்றும் கட்டுமானத் துறையில் ஈடுபட்ட சாதாரண தொழிலாளர்களுக்கும் சிக்கல்களை எதிர்கொண்டனர். தற்போது நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதோடு மக்களின் வருமானத்தையும் உயர்த்தி, கட்டுமானத்துறையை அபிவிருத்தி செய்யக் கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. எனவே இவ்வாறு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இதன் ஊடாக கிராமியப் பொருளாதாரமும் எதிர்காலத்தில் வளர்ச்சியடையும்.

வெள்ளத்தால் சேதமைடைந்த வீதிகளை துரிதமாக புனரமைக்க ஜனாதிபதி சுமார் 03 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அந்த வகையில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேப்படுத்துவதற்கான பணிகளை நாம், செவ்வனே செய்துகொண்டிருக்கிறோம்.

## 15 தீவிரவாத அமைப்புக்களின்...

15 தீவிரவாத அமைப்புகள் அந்த அமைப்புகளுடன் தொடர்புடைய 210 பேரின் சொத்துக்கள், நிதிகள் மற்றும் பொருளாதார வளங்களை செயல் இழக்கச் செய்வதாக இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் கீழ், இந்த விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, விடுதலைப் புலிகள் அமைப்பு (LTTE) , தமிழர் புனர்வாழ்வு அமைப்பு (TRO), உலக தமிழர் இயக்கம் (WTM), நாடு கடந்த தமிழீழ அரசு (TGTE), உலக தமிழர் நிவாரண நிதியம் (WTRF), தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (TCC) என்பவை முடக்கப்பட்டுள்ளன. இதேவேளை, HQ Group, தேசிய தவ்ஹீத் ஜமாத் (NTJ), ஜமாதே மிலாதே இப்ராஹீம் ( JMI), விலயாத் அஸ் செய்லானி (WAS) , கனேடியன் தமிழ் தேசிய பேரவை (NCCT) ,தமிழ் இளைஞர் அமைப்பு (TYO) , டருள் அதர் அத்தபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் (SLISM) , Save the Pearls போன்ற அமைப்புகளும் முடக்கப்பட்டுள்ளன.

## மத்திய கிழக்கு வேலை வாய்ப்புக்கு...

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணியாட்களை அனுப்பும் போது எடுக்கப்படும் மருத்துவ சான்றிதழ்களின் தரம் மற்றும் அதற்கு பணியாளர்களிடம் அறவிடப்படும் கட்டணம் தொடர்பில் எழும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி இந்த குழுவை நியமிக்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பிரகாரம், இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இரண்டு வாரங்களுக்குள் குழுவைக் கூட்டி அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

## சவூதி வெளிவிவகார பிரதி...

வேகமாக வளர்ந்து வருவதை சுட்டிக் காட்டினார். 2024 இரு நாடுகளுக்கும் இடையிலான 50 வருட கால இராஜதந்திர உறவுகளின் நினைவு ஆண்டாக கொண்டாடப்படுவதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

தூதுவர் அமீர் அஜ்வத் இலங்கையின் இராஜதந்திர சேவையில் 26 வருட அனுபவங்களைக் கொண்ட தொழில்முறையான இராஜதந்திரியாக திகழ்கிறார்.

சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெறுவதற்கு முன்னர் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயல் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் இருதரப்பு ஒப்பந்தங்கள் உட்பட்ட செயற்திறன் மீளாய்வு, அரசியல் விவகாரம் (ஆபிரிக்க பிராந்தியம்), தூதரக விவகாரங்கள் மற்றும் அவசர கால உதவி வழங்கல் பிரிவுகளுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளராகப் பணியாற்றினார்.

வெளிவகார அமைச்சின் கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி, மனிதவள மேம்பாடு மற்றும் வெளிவிவகார அமைச்சின் கடல் கடந்த நிர்வாகத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார்.

2019 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் ஓமான் இராச்சியத்துக்கான இலங்கை தூதுவராக பணியாற்றிய அமீர் அஜ்வத் , சமகாலத்தில் எமன் குடியரசுக்கான அதிவிசேட திறமை வாய்ந்த பூரண அதிகாரம் கொண்ட தூதுவராகவும் பணியாற்றியுள்ளார்.



## இன்றைய பலன்கள்

(05.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
குடும்பம் சீராக நடந்து வரும். சிறு சிறு பிரச்சனைகள் காணப்பட்டாலும் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. கலைஞர்கள் பணி நிமிர்த்தமாக வெளியூர் பயணிப்பர்.

**ரிஷபம் :**
புதிய கிளை தொடங்க கூட்டாளிகளுடன் ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவார்கள்.

**மிதுனம் :**
குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்படும். கலைஞர்கள் அதிக வருமானம் தரும் ஒப்பந்தங்களை பெற முயற்சிப்பார்கள்.

**கடகம்:**
சிலருக்கு அலுவலகத்தில் புதிய பொறுப்புக்கள் கிடைக்கக்கூடும். கலைஞர்கள் பிரபல நிறுவனத்தின் ஒப்பந்தம் பெற்று உற்சாகமாக பணியாற்றுவர்.

**சிம்மம் :**
நவீன பொருட்களை வாங்கி இல்லத்தை அழகு படுத்துவீர்கள். பெண்களின் முயற்சியால் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும்.

**கன்னி :**
கலைஞர்கள் சக கலைஞர் மூலம் புதிய ஒப்பந்தங்களை பெறுவார்கள், பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும்.

**துலாம் :**
அதிக மூலதனத்துடன் வரும் நபரை கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் முன்னேற்றம் காணப்படும்.

**விருச்சிகம் :**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கு முன்னேற்பாடுகளை செய்வீர்கள். குலதெய்வ வழிபாடு செய்ய திட்டமிடுவீர்கள். பெண்களுக்கு சேமிப்பு பெருகும்.

**தனுசு :**
குடும்பத்தில் அவ்வப்போது சில பிரச்சினைகள் தலைகாட்டும். பெண்களுக்கு சேமிப்பு கரையலாம். கலைஞர்கள் பணிகளில் கவனமாக செயல்படுங்கள்.

**மகரம் :**
கடன் தொல்லைகளை சமாளிக்க புதிய கடன் வாங்க நேரலாம். கலைஞர்களில் சிலருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம் :**
விருந்தினர் வருகையால் செலவு கூடும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவர். பங்குச் சந்தையில் போதிய வருமானம் உண்டு.

**மீனம் :**
கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு வியாபாரத்தில் அதிக லாபம் ஏற்படும். புதிய கிளைகள் தொடங்குவது பற்றி ஆலோசிப்பீர்கள். குடும்பம் சீராக நடைபெறும்.

## தாய், மகளை காணவில்லை...

காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காணாமல் போன பெண்ணின் கணவர் இது தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த புகைப்படத்தில் உள்ளவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 071 8591639 அல்லது 011 2252222 என்ற கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுள்ளனர்.

## லிற்றோ, லாஃப் சமையல்...

சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 3,790 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

05 கிலோ லிற்றோ எரிவாயு சிலிண்டரின் விலை 60 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 1,522 ரூபா. அத்துடன் 2.3 கிலோ லிற்றோ எரிவாயு சிலிண்டரின் விலை 28 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 712 ரூபாவாகும் என்றும் தெரிவித்தார். உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலைகள் குறைவடைந்ததன்படி, உள்நாட்டிலும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று லாஃப் சமையல் எரிவாயுவின் விலையும் நேற்று நள்ளிரவு முதல் குறைக்க லாஃப் நிறுவனமும் தீர்மானித்தது.

12.5 கிலோ லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 160 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது. இதன் புதிய விலையாக 3,680 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 05 கிலோ எடையுடைய லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 65 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலையாக 1,477 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## மின்சார சபை... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலத்தை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பதால் எதிர்க்கட்டும். எனினும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுவது உறுதி என்று அவர் தெரிவித்தார். இது தொடர்பில் மீண்டும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாம் முன்வைத்துள்ள திட்ட வரைபில் மின்சார சபையை தனியார் மயப்படுத்துவதாக குறிப்பிடவில்லை.அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் அதனைக் காட்ட வேண்டும் என்றார்.

அத்துடன் அதன் போது ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய விமல் வீரவன்ச எம்.பி: இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் விசேட பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்குக்குச் செல்ல வேண்டும் என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வகையில் அமைச்சர் சபையில் குறிப்பிடும்போது 12 திருத்தங்கள் தானே அவற்றை முன்னெடுக்கலாம் என்று.அதனை அலட்சியப்படுத்துகிறார். நாட்டின் மின்சார துறையுடன் தொடர்புடைய இந்த சட்டமூலம் குறித்து விசேட கவனம் செலுத்துவது அவசியம் .

இந்த வகையில் சட்டமூலத்தை நாளைய தினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதை பிற்போடுங்கள். அவ்வாறானால் அதனை முறைப்படி பரிசீலனை செய்யலாம் என்றும் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட எதிரணி சுயாதீன உறுப்பினர் சந்திம வீரக்கொடி, இந்த சட்டமூலத்தின் 12 (1) பிரிவு அரசியலமைப்புக்கு முரணாகவே உள்ளது. விசேட பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக் செல்ல வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.12(1) பிரிவு நாட்டு மக்களின் சமவுரிமை பற்றி குறிப்பிடுகிறது. ஆகவே இச்சட்டமூலத்தை விரிவாக ஆராய வேண்டும் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி எம்பி முஜிபூர் ரஹ்மான், சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தில் மின்சார சபையை தனியார் மயப்படுத்துவதாக குறிப்பிடப்படவில்லை.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதை இடைநிறுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளார். ஆகவே அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## அரசியலமைப்புக்கு...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலத்தின் 84(2) ஆவது பிரிவு அரசியலமைப்பின் 12(1) பிரிவுக்கு முரணானது.இந்த ஏற்பாட்டை நிறைவேற்ற வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை பெறப்பட வேண்டும். அத்துடன் மசோதாவின் பிரிவுகள் 1(2) மற்றும் 1(3) உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய திருத்தப்பட்டால் சட்ட முரண்பாடுகள் நீங்கும்.

சட்டமூலத்தின் 3(6) பிரிவு மற்றும் 10(1) பிரிவு ஆகியன அரசியலமைப்பின் 12(1) பிரிவுக்கு முரணாக காணப்படுவதுடன், அரசியலமைப்பின் 84(2) பிரிவுக்கமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் இந்த பிரிவை நிறைவேற்ற முடியும்.அவ்வாறிருந்த போதும் அந்த பிரிவு தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் திருத்தத்தை உத்தேச சட்டமூலத்தில் உள்ளடக்கினால் அரசியலமைப்பின் முரண்பாடுகள் நீங்கும்.

11 (1) பிரிவின் முதல் பகுதி அரசியலமைப்பின் 12(1) பிரிவுக்கு முரணானதுடன், அரசியலமைப்பின் 84 (2) பிரிவுக்கமைய பாராளுமன்றத்தின் விசேட பெரும்பான்மையுடன் இந்த பிரிவை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

சட்டமூலத்தின் 17 ஆவது மற்றும் 18 (3) இ (2) பிரிவுகள் அரசியலமைப்பின் 12(1) பிரிவுக்கு முரணானதுடன்,அரசியலமைப்பின் 84 (2) பிரிவுக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் இப்பிரிவை நிறைவேற்றிக் கொள்ள முடியும். உயர் நீதிமன்றத்தின் திருத்தத்தை செயற்படுத்தினால் பெரும்பான்மையுடன் இந்த பிரிவை நிறைவேற்ற முடியும்.

18 (3)ஈ மற்றும் 18(5) (ஆ) (2) பிரிவு, 21 மற்றும் 23 பிரிவு என்பன அரசியலமைப்பின் 12(1) பிரிவு மற்றும் 14(1) (உ) பிரிவுகளுக்கு முரணானதுடன் அரசியலமைப்பின் 84(2) பிரிவுக்கு அமைய இப்பிரிவுகளை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.அவ்வாறின்றேல் உயர்நீதிமன்றத்தின் திருத்தத்திற்கு அமைய, செயற்படுவதானால் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும். சட்டமூலத்தின் 48 பிரிவு அரசியலமைப்பின் 3 மற்றும் 76 ஆகிய பிரிவுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 4(அ) பிரிவுக்கு முரணாக அமைவதுடன், விசேட பெரும்பான்மையுடனும் மக்கள் வாக்கெடுப்புடனும் நிறைவேற்றப்பட வேண்டும்.

சட்டமூலத்தில் 53 ஆவது பிரிவு 'தேசிய வலையமைப்பு' என்ற சொற்பதத்துக்கு வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கணம் அரசியலமைப்பின் 12(1) பிரிவுக்கு முரணானதுடன் அரசியலமைப்பின் 84(2) பிரிவுக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையுடன் இந்த பிரிவை நிறைவேற்ற முடியும். அவ்வாறில்லாவிடின் உயர்நீதிமன்றத்தின் திருத்தங்களை சட்டமூலத்தில் உள்ளடக்கினால் அரசியலமைப்பு முரண்பாட்டுத் தன்மை நீங்கும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

வடக்கின் உதயம்

யாழ்.மாவட்டத்தில்

# சுயதொழில் உற்பத்தியில் 46,000 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

(கோப்பாய் குறூப் நிருபர்)



யாழ்.மாவட்டத்தில் சுயதொழில் உற்பத்தியில் 46,000 இற்கு மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஈடுபடுவதாக யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவத்தைக் கொண்டு இயங்கும் சிறுதொழில் டொப் ஆரோக்கியம் அமைப்பின் 25 ஆவது ஆண்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் (03) யாழ்.பூநகரி மடத்தில் சிறு தொழில் டொப் ஆரோக்கியா சுயதொழில் முயற்சியாளர் கலாஜோதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, பெண் தலைமைத்துவ குடும்பமாகவிருந்தால் சரி தொழில் முனைவோர்களாக இருந்தாலும் சரி உதவி கேட்டுவருவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற அமைப்பு 25 வருடகாலமாக பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது என்பது பெருமைக்குரியது.

பல உதவித்திட்டங்களைப் பெற்றுக் கொண்டாலும் மீண்டும் மீண்டும் இலவசமாக பொருட்களை பெற்றுக் கொள்ளும் மனநிலையில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் எண்ணங்கள், மனநிலையில் அரசாங்கம், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்குகின்ற உதவிகளைப் பெற்று அதன்மூலம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும். என்ற நோக்கில் தான் வாழ்ந்து வருகின்றனர். சுய தொழில் முயற்சியாளர்களை ஊக்கப் படுத்த வேண்டும். ஒரு சிலர் இலை, மறைகாயாக தமது உற்பத்திப்பொருட் களை சந்தைப்படுத்த முடியாமல் இருக்கின்றனர். அவ்வாறான நபர்களை அடையாளப்படுத்த வேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் முன்னாள் ஒய்வுபெற்ற யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்கள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,சிறுதொழில் முயற்சியாளர்கள், பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## நயினாதீவில் அதிக மழைவீழ்ச்சி பதிவு

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நயினாதீவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரையான 24 மணிநேரத்தில் கூடுதலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

24 மணி நேரத்தில் யாழ். மாவட்டத்தில் நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 58.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்தனர். யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் கோட்டையில் 43.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 43.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், யாழ். நகரில் 34.6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், பருத்தித்துறையில் 32.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 29.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

## யாழ். மாநகர ஆணையாளருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த ஆண்டு அறிமுகமான நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்களை அவமதிக்கும் சட்ட ஏற்பாட்டின் கீழ் நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு எதிராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தொடுத்த வழக்கே இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், மாநகர ஆணையாளர் சார்பில் கடந்த மாதம் 22ஆம் திகதி ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிறுகோரிக்கை நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சிறுகோரிக்கை நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்ய வேண்டும் என்ற வாதத்தை முன் வைத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் கட்டளைக்காக எடுத்து கொள்ளப்பட்ட போது, வழக்கு உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஜனாதிபதி சட்டத்தரணியின் வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, வழக்கை தள்ளுபடி செய்வதாக மாவட்ட நீதிபதி சி.சதீஸ்தரன் கூறி வழக்கை தள்ளுபடி செய்தார்.

## எழுத்தாளர்களை ஊக்குவிக்க உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

எமது மண்ணின் எழுத்தாளர்களை ஊக்குவிக்க உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கவிஞர் சூரியநிலா (ஜென்சன் றொனால்ட்) கோரிக்கை விடுத்துள்ளார். எழுத்தாளர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,எமது மண்ணின் எழுத்தாளர்களை ஊக்குவிக்க உள்ளூராட்சி சபைகளினால் நூலகங்களுக்காக ஒரே தடவையில் எழுத்தாளரிடமிருந்து நூல்களை கொள்வனவு செய்ய ஆவனம் செய்யப்பட வேண்டும். இதுவே ஒரு எழுத்தாளனை ஊக்குவிக்க செய்யவேண்டிய சிறந்த வழி. எழுத்தாளனுக்கு சிந்திப்பதற்கோ எழுதுவதற்கோ தடையேதும் இல்லை. அதனால் தான் எழுதிய எழுத்தாக்கக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதே சவாலாக உள்ளது. பெரும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் நேரம், பணம் என்பவற்றைச் செலவிட்டு வெளியிடப்படும் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கக்கூடிய வாய்ப்பு அமையாதபோது எழுத்தாளரது அந்த வெளியீடு மட்டுமன்றி அடுத்த ஆக்கத்துக்கான முயற்சியும் தோற்றுப்போய் விடுகின்றது. உள்ளூராட்சி சபைகள் வாசிப்பு மாதம், எழுத்தாளர்கள் கௌரவிப்பு என பல்வேறு நிகழ்வுகளை நடாத்தினாலும் கூட அவர்கள் எமது மண்ணுக்குரிய எழுத்தாளர்களை கண்டு கொள்வது மிகக் குறைவாகவே உள்ளது. மதப் பிரசார வெளியீடுகள், பாடப் பயிற்சிப் புத்தகங்கள், பஞ்சாங்கங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கு மேலாக கலை மற்றும் அறிவியல் சார்ந்து எழுத்தாளர்களால் வெளியிடப்படுகின்ற நூல்களையும் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாட்டிலுள்ள நூலகங்களிலும் வாசகர்களுக்காக ஒரேதடவையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஊடாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் ஒரு எழுத்தாளருடைய கணிசமான புத்தகங்கள் விற்பனைக்குள்ளாகும் சந்தர்ப்பம் உள்ளது. இது சபைகளுக்கு பெரிய நிதிச்சுமையை ஏற்படுத்தாது. இதனால் அந்த எழுத்தாளருக்கு அடுத்த நூலொன்றை உருவாக்குவதற்கான உத்வேகமும் ஏற்படுத்தப்படுகின்றது. சில சம்பவங்கள் எழுத்தாளனை அவமரியாதைக்கும் சலிப்புக்கும் உட்படுத்தி அவனது எதிர்கால வெளியீடுகளையும் முடக்கி விடுகின்றது. என்னதான் இலத்திரனியல் ஊடகங்களினூடாக வாசித்தாலும் அது பௌதீகரீதியாக ஒருநூலை வாசிப்பது போன்ற அனுபவத்தை ஏற்படுத்தாது. எனவே எழுத்தாளர்களைக் கௌரவப்படுத்தவும் அதேநேரம் அதிகளவில் புதிய நூல்கள் உருவாகவும் வேண்டுமானால் எமது மண்ணின் எழுத்தாளர்களது நூல்களை கொள்வனவு செய்ய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ஊடாக உள்ளூராட்சி சபைகள் முன்வருவதே சாலச் சிறந்தது என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## 'போதையிலிருந்து இளம் சந்ததியை காப்பாற்றுவோம்'

(மாங்குளம் குருப் நிருபர்)





போதையிலிருந்து எதிர்கால சந்ததியை பாதுகாக்க கோரி வடமாகாணத்தை சுற்றி நடை பயணமொன்றை ஆரம்பித்துள்ள வவுனியா சமயபுரத்தைச் சேர்ந்த இளைஞனொருவன் நேற்றுமுன்தினம் மாலை முல்லைத்தீவு நகரை வந்தடைந்துள்ளார். '

போதையிலிருந்து இளம் சந்ததியை காப்பாற்றுவோம்' என்ற தொனிப்பொருளோடு வட மாகாணத்தை சுற்றி நடைபயணமொன்றை இளைஞன் ஆரம்பித்துள்ளார். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் மரமொன்றிலிருந்து கீழே விழுந்து ஒரு வருடங்களாக படுக்கையிலிருந்த ரோஷன் என்கின்ற இளைஞனே தற்போது தனது உடல் நல குறைவிலிருந்து சற்று தேறிய நிலையில் இந்த நடை பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை மற்றும் அதன் ஊடாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பழக்க வழக்கங்களிலிருந்து எதிர்கால சந்ததியை பாதுகாக்க கோரியே குறித்த நடை பயணத்தை வவுனியாவிலிருந்து அவர் ஆரம்பித்துள்ளார்.

வவுனியா நகர மத்தியில் உள்ள மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து ஆரம்பித்த நடைபயணமானது நேற்றுமுன்தினம் (03) மாலை முல்லைத்தீவு நகரை வந்தடைந்தது

## போதைக்கு அடிமையான மகனை மீட்டு தருமாறு பொலிஸாரிடம் முறையீடு

(யாழ்.விசேட நிருபர்)

போதைக்கு அடிமையான மகனை, போதைப்பழக்கத்திலிருந்து மீட்டு தருமாறு தாயார் கோரியதையடுத்து, இளைஞனை மீட்டு நீதிமன்றின் ஊடாக புனர்வாழ்வு முகாமுக்கு பொலிஸார் அனுப்பி வைத்துள்ளனர். மானிப்பாய் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் தாயொருவர், தனது மகன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளார். அவரை அந்த பழக்கத்திலிருந்து மீட்டு தருமாறு மானிப்பாய் பொலிஸாரிடம் கோரியுள்ளார். அதனையடுத்து இளைஞனை கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அவரை ஆஜர்படுத்தி, நீதிமன்றின் ஊடாக கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.




# பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு நிலையானதொரு பொறிமுறை அவசியம்



சம்பள உயர்வு தொடர்பான சட்ட சமரிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். எனவே, மலையக மக்களும் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை வென்று தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கு எமது அழுத்தங்களும், கோரிக்கைகளும் தொடரும் என ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு மகிழ்ச்சியளிக்கின்றது எனவும், அத்தீர்ப்பின் பிரகாரம் பெருந்தோட்ட நிறுவனங்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

“இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்த, தற்போது கூட ஏற்றுமதி வருமானத்தின் பிரதான பங்காளிகளான மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமக்கான சம்பளத்தைக் கூட ஒவ்வொரு முறையும் போராடியே பெற வேண்டியுள்ளது. 2020 இல் ஆயிரம் ரூபா சம்பளத்தை பெறக்கூட ஆயிரம் தடைகளை தாண்டி வர வேண்டியிருந்தது.

இம்முறையும் அப்படிதான். ஆனால் நாம் தொழிலாளர்களுக்கு சார்பாக களமிறங்கினோம். தொடர் அழுத்தங்களை பிரயோகித்தோம். போராட்டங்களைக்கூட நடத்தியுள்ளோம்.

இனிவரும் காலப்பகுதியிலும் இப்படியான பாரபட்சங்கள் தொடரக்கூடாது. சம்பளப் பிரச்சினைக்கு நிலையானதொரு பொறிமுறை அவசியம், அதனை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுப்பார் என உறுதியாக நம்புகின்றோம். மலையக மக்களுள் ஒரு பகுதியினரே பெருந்தோட்டத் தொழிலாளர்கள், எனவே, ஒட்டுமொத்த மலையக மக்களின் வாழ்விலும் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும், அவர்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைப்பதற்குரிய பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், அவை துரிதப்படுத்தப்பட வேண்டும்.

அதற்குரிய வழிகாட்டல்களை நிச்சயம் நாம் வழங்குவோம்.

சம்பள உயர்வு போராட்டத்தில் வென்றதுபோல, உரிமைகளை வென்றெடுக்கும் சமரிலும் நிச்சயம் வெற்றி பெறுவோம் என அவர் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை

## மருத்துவ பீடத்துக்கு மாணவி தகுதி



றுவென்வெல்லை கன்னத்தோட்டையைச் சேர்ந்த பாத்திமா பஹ்மியா என்ற மாணவி, ஒரு வருடத்துக்கு முன்னரே க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளார்.

கன்னத்தோட்டை சுலைமானியாக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்று வந்த பஹ்மியா, அடுத்த வருடமே உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருக்க வேண்டும். ஆனால், தன்னிடமிருந்த நம்பிக்கை மற்றும் விடா முயற்சி காரணமாக தனிப்பட்ட பரீட்சாத்தியாக ஒரு வருடத்துக்கு முன்பே பரீட்சையில் தோற்றினார்.

அண்மையில் வெளியான பரீட்சை முடிவுகளின்படி இவர், 2 ஏ, 1 பி சித்தியைப் பெற்று மருத்துவ பீடத்துக்குத் தகுதி பெற்றுள்ளார். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையிலும் இவர், 9 ஏ சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.




# பசறை, கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம்

(லுணுகல நிருபர் )

நூற்றாண்டு பழமை வாய்ந்த பசறை, கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருவிழாவின் பூர்வாங்க கிரியைகளில் நேற்றுமுன்தினம் அடியார்கள் தெய்வீக விக்கிரங்களுக்கு எண்ணெய்காப்பு சாத்துதல் நடைபெற்றது.

இன்று (05) புதன்கிழமை கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இனிதே நடைபெறவுள்ளது.

சிவாகம சக்கரவர்த்தி வேதாகம வித்தியாபதி சிவஸ்ரீ மஹாதேவ ஸ்ரீ வத்சாங்க குருக்கள் (இணுவில்) தலைமையில் சர்வ சாதகமும், சிவாகம கிரியா திலகம் ஜெயராம் நிதர்சன் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவும் பக்திப்பூர்வமாக கிரியைகளை ஆற்றுகின்றனர்.

சித்தர்களின் குரல் அமைப்பின் ஆசியுடன் நடைபெறும் கும்பாபிஷேக பெருவிழாவில் உலகப்புகழ் நாதசக்கரவர்த்தி ஈழநல்லூர் பி.பாலமுருகன் தலைமையிலான குழுவினரின் மங்களநாதம் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்போது தவில் சக்கரவர்த்தி ஈழநல்லூர் செந்தில்நாதன், இளம் நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் சாரங்கன், இளம் இசை வயலின் வித்தகர் இராசரத்தினம் நிரோஷன், வீணை வாத்திய சிதம்பரம் இசைமைந்தன் பத்மநாதன் சிவமைந்தன், மிருதங்கங்க இசை வித்தகர் முரளிதரன் சுலக்ஷன் ஆகியோரும் பக்தி இசை நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். பக்தர்கள் அனைவரும் கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல இறையருளைப் பெற்றுகொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் கேட்டுகொண்டுள்ளனர்.

## பலத்த மழை; வெள்ளத்தில் மூழ்கியது புத்தல நகரம்

(ஊவா சுழற்சி நிருபர்)

கடும் மழை காரணமாக புத்தல நகரின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. புத்தல நகரிலிருந்து வெல்லவாய மொனராகலை வீதி மற்றும் படல்கும்புர புத்தல வீதி என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் வீதி போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. நகரின் பல இடங்கள் சுமார் 2 மணி நேரம் வெள்ளத்தில் மூழ்கியதால் நகர மக்களும் பாதிக்கப்பட்டனர்.

# கிழக்கின் குரல்



## பெரும்போக செய்கையில் பாதிப்பை எதிர்நோக்கிய விவசாயிகளுக்கு நட்டஈடு

ஒலுவில் விசேட நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் கடந்த பெரும்போக நெற்செய்கையில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள விவசாயிகளுக்கு திறைசேரியுடன் கலந்துரையாடி நட்டஈடு வழங்குவதற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம நடவடிக்கை எடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்ட திட்டமட்ட விவசாய அமைப்பின் தலைவர் ஏ.சி.சிறாஜுடீன் தலைமையில் அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரமவுடன் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு வாக்குறுதி வழங்கியுள்ளதாக அம்பாறை மாவட்ட திட்டமட்ட விவசாய அமைப்பின் செயலாளர் ஏ.எல்.எம்.என். அகமட் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தினால் அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்படவிருந்த வேளாண்மை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட கமநல சேவை அபிவிருத்தி நிலையத்தினர், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாக சென்று பாதிப்பு தொடர்பான விபரங்களை சேகரித்துள்ளனர். இந்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வங்கிகளில் கடன் பெற்று வேளாண்மை செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் கடனை திருப்பி செலுத்த முடியாமல் உள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2024ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்கான உர மானியத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மூதூரில் 25 குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கல்



மூதூர் தினகரன் நிருபர்

திருகோணமலையில் மூதூர் பிரதேசத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

கணவனை இழந்து மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழும் குடும்பங்களின் அன்றாட தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது தெரிவுசெய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், மூதூர் வை.எம்.எம்.ஏ. கிளையின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் நொக்ஸ் ஒன்றுகூடல் மண்டபத்தில் வைத்து மேற்படி குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், வை.எம்.எம்.ஏ. மூதூர் கிளையின் பொதுச் செயலாளர் அஷ்ஷேஹ் எம். சல்மான் உலர் உணவுகளை வழங்கி வைத்தார்.

## அட்டாளைச்சேனை, கல்முனையில் உலக சுற்றாடல் தினம் கடைப்பிடிப்பு

சாய்ந்தமருது விசேட, கல்முனை விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்



உலக சுற்றாடல் தினம் கல்முனை மற்றும் அட்டாளைச்சேனை பிரதேசங்களில் கடைப்பிடிக்கப்பட்டன.

கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டப் பகுதியில் கல்முனை மாநகர சபையினர் ஒழுங்கு செய்த விசேட சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை அம்மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பயன்தரும் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன், வடிகான்களும் குளக்கரைகளும் புறச்சூழல்களும் சுத்தம் செய்யப்பட்டன.

இவ்வேலைத்திட்டத்துக்கு கல்முனை பிரதேச செயலகம், 'சமாதானம் மற்றும் சமூகப்பணி' நிறுவனம் என்பன ஒத்துழைப்பு வழங்கின.

இதேவேளை 'பயனுறுதிமிக்க நிலப் பயன்பாட்டினூடாக நலம் நிறைந்த நாடு' எனும் தொனிப்பொருளின் கீழ் சுற்றாடல் வாரம் கடந்த 30ஆம் திகதி முதல் இன்றுவரை (05) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்படுகிறது.

இந்நிலையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி. எம்.இர்பானின் நெறிப்படுத்தலின் கீழ் சுற்றாடல் அமைச்சின் கீழ் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர் தலைமையில் சுற்றாடல் தினம் முன்னெடுக்கப்படுகிறது. இதன்போது மரக்கன்றுகள் நடுகை மற்றும் சிரமதான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகிறது.

## கல்வியில் சாதனை நிலைநாட்டிய மாணவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு

### நிகழ்வில் அதாஉல்லா எம்.பி. பங்கேற்பு

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று அரசினர் முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயத்தில் கடந்த 2022ஆம், 2023ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் தரம் 09, தரம் 10 இல் சாதனை படைத்த மாணவர்களுக்கான 'Gallant Awards Gala' பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி அதிபர் ஐ.எல்.சாஜீத் தலைமையில் அண்மையில் அக்கரைப்பற்று மாநகர அதாஉல்லா அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, இம்மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஞாபகார்த்த சின்னம் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய அதாஉல்லா எம்.பி.,

"மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக இருப்பதற்கு எதிர்காலத்தில் தாங்கள் எதிர்கொள்ளும் சகல பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறு பெற்றுக்கொள்ள வேண்டும். ஒழுக்கமுள்ள பிள்ளைகளாகவும் எதிர்கால சந்ததியினரை வழிநடத்தக்கூடிய தலைவர்களாகவும் சிறந்த கல்வியாளர்களாகவும் மாற வேண்டும்" என்றார்.

இதன்போது கல்வியில் சாதனை நிலைநாட்டிய இம்மாணவர்களுக்கு அதாஉல்லா எம்.பி. வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ், பிரதி கல்விப் பணிப்பாளர்களான ஏ.எஸ்.அஹமட் கியாஸ், எம்.எம். சித்தி பாத்திமா, பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய உற்சவம்; தாகசாந்திக்கு ஏற்பாடு



மணல்சேனை நிருபர்

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு, துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலயத்தில் பால் காப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதனை சிறப்பிக்கும் முகமாக துறைநீலாவணை மண்ணின் மைந்தர்கள் அமைப்பினால் பிரமாண்டமான முறையில் தாகசாந்தி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் அடியார்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பானது பல்வேறு சமூகப் பணிகளையும் சமயப் பணிகளையும் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. உ/த பரீட்சை பெறுபேறுகள்

## பார்வை இழந்த மாணவன் உ/த பரீட்சையில் சாதனை

மாளிகைக்காடு குறூப் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் பார்வையை இழந்த மாணவர் ஒருவர், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் 02 ஏ மற்றும் ஒரு பீ சித்திகளை பெற்றுள்ளார்.

மட்டக்களப்பின் பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரசடி தீவைச் சேர்ந்த முன்னாள் போராளியின் மகனான பாலச்சந்திரன் பிரஷோபன் என்பவரே க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இச்சித்திகளை பெற்று, ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார்.

மட்டக்களப்பு தரிசனம் விழிப்புணர்வு அற்றோர் பாடசாலையிலும், கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரியிலும் இம்மாணவர் கல்வி பயின்றுள்ளார்.

இந்நிலையில் இம்மாணவரின் சாதனையை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற பாராட்டு நிகழ்வில் இம்மாணவரின் அன்னை, கல்விப் பணிமனையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருமலை கல்வி வலயம் முதலிடத்தில்

திருகோணமலை தினகரன் நிருபர்

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய திருகோணமலை மாவட்ட மட்டத்தில் திருகோணமலை கல்வி வலயமானது உயிரியல், பொறியியல், கலைப்பிரிவு, பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு ஆகியவற்றில் முதலிடத்தை பெற்றுள்ளது.

இந்நிலையில் உயிரியல் பிரிவில் புனித சூசையப்பர் கல்லூரி மாணவன் ஸ்ரீதரன் ஸ்ரீரக்ஷன், பொறியியல் பிரிவில் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவன் சுசீந்திரன் அருள்ராஜ் ஹர்சியன், கலைப் பிரிவில் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவி அபிலக்ஷிகா சுரேஸ்குமார், பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் விபுலானந்தா கல்லூரி மாணவன் முகமட் இனாம் ஆகியோர் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளனர். அத்துடன் ஸ்ரீசண்முக இந்து மகளிர் கல்லூரியில் இம்முறை உயிரியல் துறையில் நான்கு மாணவர்கள் 03 ஏ சித்திகளை பெற்று 02, 05, 09, 10 ஆகிய மாவட்ட நிலைகளையும் பெற்றுள்ளனர்.

## மருத்துவத்துறைக்கு தெரிவாகினார்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலை மாணவன் பிர்தௌஸ் இஹ்ஸான் அஹமட், மருத்துவத்துறைக்கு தெரிவாகி அம்பாறை மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இருதய சத்திர சிகிச்சை நிபுணராக உருவாகி இந்த நாட்டுக்கும் தனது பிரதேச மக்களுக்கும் உயரிய சேவை செய்ய வேண்டுமெனவும் இம்மாணவர் தெரிவித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்திலும் பின்னர் கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையிலும் கற்றார். இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டு பல பரிசில்களையும் இம்மாணவர் பெற்றுள்ளார். பாடசாலை மட்ட வலய மட்டப் போட்டிகளிலும் தன்னை ஈடுபடுத்தி இம்மாணவர் திறமைகளை வெளிகாட்டினார்.

## அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் வைத்தியத்துறைக்கு 10 மாணவர்கள் தெரிவு

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

இம்முறை வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் மருத்துவத்துறைக்கு 10 பேரும் பொறியியல்துறைக்கு 07 பேரும் பொறியியல் தொழில்நுட்பத்துறைக்கு (ETEC) 05 பேரும் உயிரியல் தொழில்நுட்பத்துறைக்கு (BTEC) 05 பேரும் வர்த்தகத் துறைக்கு 08 பேரும் கலைத்துறைக்கு 05 பேரும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

மேலும் இதனுடன் இணைந்ததாக QS, BSC, APPLIED SCIENCE ஆகிய துறைகளுக்கும் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளதாக, மேற்படி கல்லூரி அதிபர் ஏ.எச். பௌஸ் தெரிவித்தார்.

மாவட்ட ரீதியாக மருத்துவத் துறைக்கு 02ஆம் இடமும் BTEC பாடத்துக்கு 05ஆம் இடமும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு கிடைத்துள்ளது.

இப்பாடசாலையில் பொறியியல் தொழில்நுட்பப் பாடத்தில் A சித்தியும் உள்ளது. இந்நிலையில் மாணவர்கள் சிறந்த சித்தி பெற்றுள்ளமைக்கு அனைவருக்கு தனது நன்றியை அதிபர் தெரிவித்தார்.

## ஒலுவில் தேசிய பாடசாலை; வரலாற்று ரீதியான சாதனை

ஒலுவில் விசேட நிருபர்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி ஒலுவில் அல்ஹம்றா மஹா வித்தியாலய தேசிய பாடசாலையின் பெறுபேறுகள் வரலாற்று ரீதியான முன்னேற்றத்தை அடைந்துள்ளதாக அப்பாடசாலை அதிபர் யூ.கே.அப்துல் றஹீம் தெரிவித்தார்.

பௌதீக விஞ்ஞானப் பிரிவில் எம்.எம்.எப்.பாத்திமா நிஹாறா 02 ஏ, 01 பி சித்தி பெற்று மாவட்டத்தில் 34ஆவது நிலையிலும் எம்.ஏ.எப்.முஸாரப் 01ஏ, 02 பி சித்தி பெற்று மாவட்டத்தில் 37ஆவது நிலையிலும் எம்.எஸ். ஜப்ரான் பாயி 01 ஏ, 01பி, 01 சி, சித்தி பெற்று மாவட்டத்தில் 80ஆவது நிலையிலும் எம்.எச்.எம்.அஸ்மத் அஸ்னி 02 பி, 01 சி சித்தி பெற்று மாவட்டத்தில் 83ஆவது நிலையிலும் தெரிவாகியுள்ளனர். பொறியியல் பீடத்துக்கு 07 பேரும் தெரிவாகியுள்ளனர். உயிரியல் விஞ்ஞான பிரிவில் ஆர்.எம். றிப்தி 03 ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் 05ஆவது நிலையிலும் ஏ.டபிள்யு.எம். ஆதில் சஹீம் 03 ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் 09ஆவது நிலையிலும் ஜ.எப். சனூபர் 02 ஏ, 01 பி சித்தி பெற்று மாவட்டத்தில் 40ஆவது நிலையிலும் தெரிவாகியுள்ளனர். 14 மாணவர்கள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் பிரயோக விஞ்ஞான பீடத்துக்கும் வர்த்தகப் பிரிவில் 05 மாணவர்கள் முகாமைத்துவ பீடத்துக்கும் கலைப் பிரிவில் 05 மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இதனுடன் இணைந்ததாக மேலும் பல துறைகளுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

## உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் 03 மாணவர் முதலிடம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்





க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் காத்தான்குடியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளனர்.

மருத்துவத்துறையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த பாறூக் நஹ்ஜுல் பதீக் எனும் மாணவன் முதலிடத்தை பெற்றுள்ளதுடன், தேசிய மட்டத்தில் 18ஆவது இடத்தை பெற்றுள்ளார். இதேவேளை காத்தான்குடியைச் சேர்ந்த நவாஸ் முகம்மது யூசுப் வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மாணவன் சாகீர் ஸப்வான் மாவட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளார்.

# ஜே.வி.பியினருடன் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டால் பொது வேட்பாளர் விடயம் கைவிடப்படுமா ?

## ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் கேள்வி

**யாழ்.விசேட நிருபர்**

ஜே.வி.பியினருடன் பொது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டால் பொது வேட்பாளர் விடயம் கைவிடப்படுமா ? என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சிக்குள் உட்பூசல் உச்சமடைந்திருந்த சமயத்தில் பொதுவேட்பாளர் தொடர்பாக தமிழரசுக் கட்சிக்குள் இருந்த தலைமைப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் தங்களிடம் பேச வரட்டும் என ஏளனமாக கூறிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தற்போது



தமிழரசுக் கட்சி சரியான முடிவை மிக விரைவாக எடுத்து எல்லோருடனும் இணைந்து பயணிப்பதானது தேவையான விடயம் என கூறுவதை காணக்கூடியதாகவுள்ளது.

ஆயினும் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் வந்த பின்னர் தமது முடிவை எடுக்கவுள்ளதாக கூறிவருகின்றது. அதேவேளை பொது வேட்பாளர் என்பது ஒரு விஷப் பரீட்சை என அக்கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை எதிர்வரும் 9 ஆம் திகதி பொது வெளியில் இது தொடர்பாக விவாதிப்பதற்கு அறிவித்தல் ஒன்றையும் விடுத்துள்ளது.

அதில் எவ்வாறான நிலைப்பாட்டை தமிழரசு கட்சியினர் எடுப்பார்கள் என்பதை தெரிந்து கொண்ட சுரேஷ் அணியினர் மிக மிக விரைவாக முடிவெடுக்குமாறு கோரியுள்ளனர்.

அத்துடன் ஜே.வி.பியினர் பொது வேட்பாளர் தொடர்பான தரப்பினரை எதிர்வரும் வாரம் சந்திக்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இச்சந்திப்பின்போது ஜே.வி. பியினருடன் பொது இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டால் தத்தமது நலன்களுக்காக முகவர்களுக்கு பின்னால் இருந்து இயங்கும் இவர்கள் பொது வேட்பாளர் விடயத்தை கைவிட்டுவிடுவார்களா ? அதன்பின்னர் மக்களுக்கு எதை கூறி மீண்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்றுவார்கள் ? என மேலும் தெரிவித்திருந்தார்.

# வெள்ள அனர்த்தத்தை பார்க்க படகில் சென்ற இளைஞன் மின்சாரம் தாக்கி மரணம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளை பார்வையிட ஆற்றில் விநோதப் பயணம் சென்ற இளைஞனொருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் புலத்சிங்கள திவலகட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

இப்பகுதியில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தங்களை பார்ப்பதற்காக பிரதேச இளைஞர் குழுவொன்று படகொன்றில் ஏறி ஆற்றில் விநோதமாக சென்றுக் கொண்டிருக்கையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தமித் குமார என்ற 22 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படகினை ஓட்டிச் சென்ற இளைஞன் தனது கையில் வைத்திருந்த மூங்கிலை உயர்த்தும் போது சக்தி வாய்ந்த மின்சாரக் கம்பியொன்றில் பட்டதால் அவர் ஆற்றில் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு உயிரிழந்துள்ளார். இதேவேளை அப்படகில் பயணித்த மேலும் 19 இளைஞர்கள் மின்சாரத் தாக்கத்துக்கு உட்பட்ட போதிலும் அவர்களுக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தோட்டக்கம்பனிகளுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு; மலையக மக்களின் வாழ்வில் திருப்புமுனை

## இ.தொ.கா உபதலைவர் திருக்கேஷ் செல்லச்சாமி

நாட்டின் ஏற்றுமதித்துறையில் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழிசமைத்துள்ளதாக இ.தொ.கா உபதலைவர் திருக்கேஷ் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் 1700 ரூபா வழங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை வரவேற்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பெருந்தோட்டத்தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துக் கொண்ட முயற்சிபாராட்டுக்குரியதும், வரவேற்புக்குரியதுமாகும்.

தோட்டக்கம்பனிகளின் செயற்பாட்டுக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மலையக மக்களின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாகும்.

இதேவேளை இ.தொ.காவின் பிரதம சட்டஆலோசகர் சட்டத்தரணி கா.மாரிமுத்து தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வில் ஆரம்பத்திலிருந்து முழுமையான அர்ப்பணிப்போடுதனதுவாததிறமைகள்மூலமாக ஆலோசனைகளை வழங்கி இதனை வெற்றிபெறச் செய்யவேண்டுமென்பதில் உறுதியாக செயற்பட்டு வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

# ஐ.நா.சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மன்னார் விஜயம்

## மன்னார் சதொச மனித புதைகுழியையும் பார்வையிட்டார்

**மன்னார் குறூப் நிருபர்**

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் ( (MarcAndr□ Franche) நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை(4) மதியம் மன்னாருக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது பல்வேறு சந்திப்புக்களை முன்னெடுத்தார்.

மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் விசேட சந்திப்பொன்றும் நடைபெற்றது. இதன்போது மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.



மேலும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரையும் சந்தித்து மன்னார் மாவட்டத்தின் மனித உரிமைகள் நிலைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர். அதனைதொடர்ந்து மன்னார் நகர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சதொச மனித புதைகுழியையும் அவர் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

# களுகங்கையில் மெதுவாக தாழிறங்கும் வெள்ள நீர்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

அடைமழை ஓரளவு தணிந்து வெள்ள நீர் வடிய ஆரம்பித்துள்ள போதிலும் களுகங்கையை அண்மித்த நிலப்பரப்புகளில் நீர் தாமதமாகவே இறங்குவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கல்கங்கையின் இரு பக்கங்களிலும் உள்ள பிரதேசங்கள், இரத்தினபுரி நகரத்தின் பல தாழ் நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் இன்னும் காணப்படுவதாக பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக களுகங்கையின் புடுவா வுல மற்றும் எல்லகாவ பகுதிகளிலும் குடாகங்கை மில்லகந்த மற்றும் களுகங்கையின் இரத்தினபுரி மாவட்ட எல்லை பிரதேசமான மில்லனிய பகுதிகளிலும் நீர் தேங்கியுள்ளது.

# மட்டு. கண்ணபுரம், படலக்கல்லடி, ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலய மகா கும்பாபிஷேகம்

கிழக்கிலங்கை மட்டக்களப்பு, 35ம் கிராமம், கண்ணபுரம், படலக்கல்லடி, அருள்மிகு ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலயத்தின் புனராவர்த்தன பஞ்ச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2024.06.09ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.38 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தில் எதிர்வரும் 2024.06.08 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. பிரதிஸ்டா பிரதம குரு அலங்கார கிரியாமணி, சிவாச்சார்ய கிரியாபானு சிவஸ்ரீ எஸ். மணி வள்ளிகாந்த குருக்கள் (ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் ஸ்ரீ மங்கள விநாயகர் ஆலயம்) , கலாநிதி சிவ ஸ்ரீ பூரண குகதாச குருக்கள், சிவ ஸ்ரீ நடராஜா ஸ்ரீ தர சிவாச்சாரியார், சிவ ஸ்ரீ கிரியாமணி சுரேஷ்வரக் குருக்கள், சிவ ஸ்ரீ கிரியாமணி பூ. ஐங்கர குருக்கள் ஆகியோருடன் இணைந்து ஆலய குரு ஈசான சிவாச்சாரியார் சி.கு. மகாலிங்கசிவம் குருக்களும், ஆலய உதவி குரு சிவ ஸ்ரீ சி.கு. சிவதீஸ் சர்மாவும் கும்பாபிஷேக கிரியைகளை செய்வார்கள். மஸ்கெலியா ஜெயராம் ஆனந்தராஜ் குழுவினர் மங்கள வாத்தியம் முழங்க கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.



தென்னிந்தியா சிங்காரவேலன் (சேரன்) ஆச்சாரியார் தலைமையில் ஆரையம்பதி விநாயகர் கலைக்கூடம் வர்ணனை வேலைகளை செய்ய மண்டூர் கணபதிப்பிள்ளை விஸ்வநாதன் கட்டட நிர்மாண வேலைகளை செய்துள்ளார்.

ஆலய தலைவர் க. விஜயகுமார், செயலாளர் ஆ. ஜெயகாந்தன், பொருளாளர் பா. தர்மலிங்கம் ஆகியோர் ஆலய திருப்பணிகளில் கவனம் செலுத்தி கும்பாபிஷேக கிரியைக்களுக்கான பணிகளை கண்காணித்து வருகின்றார்கள். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 11 நாட்களுக்கு மண்டலாபிஷேக பூசை நடைபெற்று 12ஆம் நாள் 1008 சங்காபிஷேகமும் பால்குடபவனியும் இடம்பெறும்.

2024.06.07ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு கோதுாளிகா சுபவேளையில் கர்மாரம்பம், விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், அனுக்ஞை திரவிய சுத்தி சங்கீரணம், தீர்த்த சங்கீரணம், நூதன மூர்த்தி, கிராம வலம், (நாதன மூர்த்தி பூர்வாங்க கிரியைகள் நடைபெறும்.

2024.06.09ஆம் திகதி காலை 6மணிக்கு சித்தி விநாயகர் வழிபாடு, புண்ணியாக வாசனம், யாக பூசை, மஹா கும்பாபிஷேகம், மகேஸ்வர பூஜை என்பன நடத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.



கலாபூஷணம்
இராசையா கிருஷ்ணப்பிள்ளை

# மணி குருக்களின் மாபெரும் இன்னிசை விருந்தும், பாராட்டு விழாவும்

## 2024.06.09 ஞாயிறு மாலை 5.30 மணிக்கு கொழும்பு 13, மேட்டுத்தெருவிலுள்ள கமலாமோடி மண்டபத்தில்









திரையிசைத் திலகம் மணிப்பாடகர் டாக்டர் சாம்பசிவ T.M.S. மணி குருக்கள் வருடாந்தம் நடத்தும் மாபெரும் இன்னிசை விருந்தும், பாராட்டு விழாவும் எதிர்வரும் 2024.06.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை கொழும்பு 13, மேட்டுத்தெருவிலுள்ள கமலாமோடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 50 கலைஞர்கள் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார்கள். 15 மாணவ மாணவிகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

மறைந்தும் மறையாது மக்களின் மனங்களில் வாழும் திரையிசைப் பாடகர்களான இசைமேதை கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டர் டீ. எம். செந்தராஜன், இசை சக்கரவர்த்தி கலைமாமணி சீர்காழி கோவிந்தராஜன், முதல் பின்னணிப் பாடகர் கலைமாமணி திருச்சி லோகநாதன், அதிர்வேட்டு குரலோன் கலைமாமணி டீ. ஆர். மகாலிங்கம் ஆகியோரை நினைவு கூரும் முகமாக இந்த இன்னிசை நிகழ்வில், இவர்கள் பாடிய பாடல்கள் பல பாடப்படும்.

இந்த விழாவில், ஆசியுரையை க.செந்தில்நாதக்குருக்கள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ. வைத்ய வைகுந்தசிவாச்சார்யார் சிவஸ்ரீ வை.கமலநாதக்குருக்கள், சிவஸ்ரீ சிவ. நேசக்குருக்கள் தலைமை ஆறுமுகம் ரவீந்திரன் (குருசாமிகள் ஒன்றியம்) முன்னிலை ரி.வி.டி.கதிரேசன் (பெரி) ஆகியோர் ஆன்மிக விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வாழ்த்துரை சு.ரவீந்திரகுமார் (குருசாமி ஒன்றியம்)

வரவேற்பு டாக்டர் சாம்பவசிவமணிக்குருக்கள்

பிரதமர் விருந்தினர்களாக ஸ்ரீவாசம் லோகநாதன்(JP), அருணாசலம் சந்திரசேகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், மக்கள் வங்கியின் முகாமையாளர் வேல்ராணி காத்திகேசு, கலைஞர் விஜயராஜ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

ராஜேந்திரன் (குருசாமி), க.ராமதாஸ் (குருசாமி), நந்தாமாஸ்டர் நடிகர் (குருசாமி), ஹரன், நல்லதம்பி, மகேஷ்வரன் (ரவி ஜுவல்லரி), கனக சபை சாமி, டிஸ்கோராஜா, கே.செல்வராஜன், ராஜசேகரன், ஹெலன்குமாரி ஆகியோர் அன்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நிகழ்ச்சியின் உறுதுணையாளரான தமிழ் பேராசிரியர் பிரம்ம ஸ்ரீ சசாங்கன் சர்மா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கவுள்ளார்.

சித்தாரா இசையில் நடைபெறும் இன்னிசை நிகழ்வில் பிரபல தென்னிந்திய கலைஞரும் பாடகருமான கலைமோகன், திருச்சி லோகநாதனின் மகன் டீ. எல். மஹாராஜன், சீர்காழி கோவிந்தராஜனின் மகன் சிதம்பரம் தியாகராஜன் ஆகியோருடன் இவ்விழா அமைப்பாளர் பெரும் பாடகர் திரையிசைத் திலகம் மணிப் பாடகர் டாக்டர் சாம்பசிவ மணி குருக்களும் பாடல்களைப் பாடி பரவசப்படுத்தவுள்ளார்.



# அமைச்சரவை தீர்மானங்கள்

**தானிய வகை இறக்குமதி கட்டுப்பாடு நீக்குதல்**

தெரிவு செய்யப்பட்ட தானிய வகைகளை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவையை நீக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சட்டத்துக்கு முரணாக மேற்கொள்ளப்படும் இலாபமீட்டும் (கறுப்புச் சந்தை செயன்முறை) முறையை அடியோடு ஒழித்தல், சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் தானியங்களின் இறக்குமதியை தடுத்தல், முறைகேடான மற்றும் அநீதியான முறையில் மேற்கொள்ளப்படும் தானிய இறக்குமதியை தடுத்தல், நுகர்வோர் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையை உறுதிப்படுத்துதல் மற்றும் பொருத்தமான வரி விகித அளவு, சுகாதார தனிமைப்படுத்தல் முறைகளை விதிப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாத்தல் ஆகிய பல்வித நோக்கங்களை நிறைவேற்றும் நோக்கத்துடன், தானிய வகைகளை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதி தேவையை நீக்குதல் உகந்தது என தெரியவருகிறது.

அதற்கமைய, ஜனாதிபதி செயலாளரின் தலைமையில் இலங்கை மத்திய வங்கி ஆளுனர், பொது திறைசேரியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்டஆலோசகர் அடங்கிய குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளை கருத்திலெடுத்து தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையினால் வழங்கப்பட்ட தேசிய தாவர தனிமைப்படுத்தல் உரிமத்தை சமர்ப்பிப்பதன் அடிப்படையில், விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் விதந்துரைக்கு அமைய உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதுகாக்கப்படும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்து பயறு, உழுந்து, கௌபி, குரக்கன், சோயாமா மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய தேவையை நீக்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**பரிஸ் உடன்படிக்கையின் 06 ஆவது பிரிவை இலங்கையில் அமுல்படுத்தல்**

காலநிலை மாற்றம் தொடர்பான சட்ட ரீதியான கடப்பபாடட்டுடனான சர்வதேச உடன்படிக்கையான பரிஸ் உடன்படிக்கை 2015 ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்தின் தரப்பாளர்கள் பங்குபற்றும் 21 ஆவது மாநாட்டில் (COP 21) 196 தரப்பினரால் நிறைவேற்றப்பட்டுள்ள அதேவேளை, இலங்கை 2016ம் ஆண்டில் அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது. உலகளாவிய சாதாரன வெப்பநிலை அதிகரித்தல் முன் கைத்தொழில் மட்டத்தை விடவும் 02 பாகை செல்சியசை விடவும் கூடாத மட்டத்தில் பேணுதல் மற்றும் வெப்பநிலை அதிகரிப்பு முன் கைத்தொழில் மட்டத்தை விடவும் 1.5 செல்சியஸ் வரை மட்டுப்படுத்துதல் பரிஸ் உடன்படிக்கையின் பிரதான குறிக்கோள் ஆகும். அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய, தரப்பு நாடுகளால் 'தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு (NDCs) இலக்குகள்' அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக 02 சந்தைப் பொறிமுறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் தரப்பு நாடுகளில் பசுமை வாயுவை குறைப்பதன் பெறுபேற்றை இருதரப்பாக பரிமாற்றம் செய்வதற்கும், அவ்வாறான பசுமை வாயு பரிமாற்றத்தை அறிக்கை செய்வதற்காகவும், தரப்பு நாடுகளில் தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை அடைவதற்காக பாவிப்பதற்குமான வாய்ப்பு ஏற்படுத்தப்படும். அத்துடன், அந்த உடன்படிக்கை மூலம் புதிய சர்வதேச காபன் குறைப்பு பொறிமுறையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அந்த நிலமையின் கீழ் இலங்கை ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்தின் டுபாய் பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் காபன் சந்தை மூலோபாய மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன், இந்த ஆண்டின் இறுதியளவில் அந்த கருமங்களை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதனிடையே பசுமை வாயு வெளியேற்ற குறைப்புக்காக இலங்கை அறிமுகம் செய்துள்ள மின்சார, கைத்தொழில், கழிவு முகாமைத்துவம், போக்குவரத்து, விவசாயம் மற்றும் வனங்கள் ஆகிய பிரதான துறைகள்தொடர்பாக பல்வேறு திட்ட அபிவிருத்தியாளர்களால் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. காபன் சந்தை மூலோபாய மற்றும் வழிகாட்டல் கோட்பாடுகள் அமுல்படுத்தப்படும் வரை அந்த திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தீர்மானங்களை எட்டுவதற்காக சுற்றாடல் அமைச்சு செயலாளரின் தலைமையில் ஒரு குழுவை நியமிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் என்ற ரீதியில் கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கல்வித் துறையில் மாற்றம் செய்ய கல்வி நிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்**

நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் சமமான அணுகல் வசதிகள் மற்றும் தரமான கல்வியை வழங்கும் நோக்கத்துடன் '2048 ஆண்டில் முழுமையாக அபிவிருத்தியடைந்த இலங்கை' எனும் நோக்குக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய கல்வி கொள்கைச் சட்டகம் 20232033 மூலம் கல்வித் துறையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, நீண்டகால கற்றல் முறையை உறுதி செய்வதற்காக நிறுவன கட்டமைப்பு, பாடவிதானங்கள் மற்றும் மதிப்பீட்டு முறையில் புதிய மாற்றத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய கல்வி கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல் தொடர்பாக கௌரவ ஜனாதிபதியின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவின் விதந்துரையின் அடிப்படையில் முழுமையான கல்வி மறுசீரமைப்பை வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனாக அமுல்படுத்துவதற்கு பொருத்தமான நிர்வாக கட்டமைப்பை நிறுவும் நோக்கத்துடன் பின்வரும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2032 பிரிஸ்பென் ஒலிம்பிக் போட்டிக்கு அரச – தனியார் கூட்டிணைவு திட்டம்**

இலங்கை 2032 பிரிஸ்பென் ஒலிம்பிக் போட்டியில் 'பதக்கங்களை வெல்லும் நாடு' என உறுதிபூண்டு தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு கல்வி அமைச்சு மற்றும் விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், திறமைகளை வெளிப்படுத்தும் விளையாட்டு வீர, வீராங்கனைகளை 2028 ஆண்டில் லொஸ் ஏன்ஜல்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்ற செய்து குறிப்பிடத்தக்க அடைவு மட்டத்தை பெறுவதற்காக அவர்களுக்கு வாய்ப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, அந்த குறிக்கோளை அடைவதற்கான உத்தேச நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கல்வி அமைச்சர் மற்றும் விளையாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் ஒருங்கிணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**இரத்தினபுரி புதிய நகரிலுள்ள காணியை சப்ரகமுவ மாகாண சபைக்கு வழங்குதல்**

இரத்தினபுரி புதிய நகரில் மாகாண சபை கட்டட தொகுதிக்கு அருகில் ஹெல பொஜூன் உணவகத்தை நிறுவுவதற்காக ஒரு காணித்துண்டை வழங்குமாறு சப்ரகமுவ மாகாண சபையால் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்து பெறப்பட்டுள்ள 23.10 பேர்ச்சஸ் காணித்துண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த காணிக்காக அரச விலை மதிப்பீட்டாளரால்மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தை பெறுமதி ஏற்கனவே சப்ரகமுவ மாகாண சபையால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, அந்த காணித்துண்டை இரத்தினபுரி பிரதேச செயலாளர் ஊடாக சப்ரகமுவ மாகாண சபைக்கு உரித்து மாற்றம் செய்யக்கூடிய வகையில் காணி ஆணையாளர் நாயகத்துக்கு விடுவிப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



**பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் 2024 முதல் காலாண்டுக்கான முன்னேற்றம்**

நிரல் அமைச்சுக்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முதலாம் காலாண்டுக்கான அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயலாற்றுகைத் தரவுகள் மற்றும் தகவல்களை மீளாய்வு செய்து கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தால் பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான செயலாற்றுகை அறிக்கைகள் சமர்;ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கைக்கமைய, 2024 ஆம் ஆண்டில் 171 பாரியளவிலான அபிவிருத்திகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 09 கருத்திட்டங்கள் தவிர்ந்த, ஏனைய அனைத்துக் கருத்திட்டங்களும் 2026 ஆம் ஆண்டு முடிவடையும் போது பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, புதிய மூலதனக் கருத்திட்டங்களுக்காக நிதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களைத் துரிதமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவையைக் கருத்தில் கொண்டு,80 வீதத்துக்கும் அதிகமான பௌதீக முன்னேற்றம் கொண்ட 58 கருத்திட்ட செயற்பாடுகள் 2024 இல் பூர்த்தி செய்வதற்கும், போதியளவு நிதியின்மையால் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களில் தொடர்ந்து நிதி முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் அவ்வாறான கருத்திட்டங்கள் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசிய செயற்பாட்டு அலுவலர் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**உலகளாவிய வளிமண்டலவியல் கட்டமைப்புக்கு தொழிநுட்ப உதவி**

மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் உலக வங்கி நிதி வழங்குகின்ற காலநிலையால் ஏற்படும் எதிர்விளைவுகளைக் குறைப்பதற்காக பலமட்டத்திலான வேலைத்திட்டப் படிமுறைகள் 03 இன் கீழ் 09 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 05 கூறுகளுடன் கூடிய குறித்த வேலைத்திட்டத்தின் முதலாவது கூறாக காலநிலை நிலைமைகளை சரியான வகையில் முன்னறிவிப்பதற்கும், மற்றும் முற்கூட்டியே மதிப்பிடுவதற்கு இயலுமாகும் வகையில் அந்தந்த நிறுவனங்களில் திறன், தொழிநுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, செயற்படுவதன் மூலம் அதிக இடர் கொண்ட காலநிலை மற்றும் வானிலை நிலைமைகளை மிகவும் துரிதமான துல்லியமான முன்னறிவுப்புக்களை மேற்கொள்வதற்கும், அனர்த்தங்களுக்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் அரசால் செலவிடப்படும் 313 மில்லின் டொலர்கள் மதிப்பீட்டுச் செலவுகளைக் குறைப்பதற்கும் இயலுமாகும் வகையில் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த கூறை நடைமுறைப்படுத்துவதற்காக வளிமண்டலவியல் மற்றும் நீர் விஞ்ஞானவியல் துறைகளில் விரிவான அனுபவங்களுடன் கூடிய மற்றும் திடீர் அனர்த்த முன்னெச்சரிக்கைத் தொகுதியை மேம்படுத்தும் தொழிநுட்ப இயலுமைகள் காணப்படுகின்ற சர்வதேச அமைப்பான உலக வளிமண்டலவியல் அமைப்பின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**குற்றவியல் வழக்குக் கோவையைத் திருத்தம் செய்தல்**

குற்றவியல் வழக்குகளுக்குத் துரிமாகத் தீர்ப்பதற்கு, நீதிமன்ற நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற தாமதங்களை குறைப்பதன் மூலம் வழக்குகள் திரள்வதைத் தடுத்தல், சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் இலங்கையிலுள்ள சட்டத்தில் குற்றங்கள் தொடர்பான உடன்பாடுகளுக்கு ஏற்படுவதற்கான முறையை அறிமுகப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் குற்றவியல் வழக்குக் கோவையைத் திருத்தம் செய்வதற்காக 2023.03.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

உத்தேச திருத்தங்களுக்கமைய வழக்கு விசாரணையில் ஆஜராவதற்குப் பதிலாக குற்றத்தை ஒப்புக்கொள்கின்ற உடன்பாடு பிரதிவாதி மற்றும் முறைப்பாட்டாளருக்கிடையே ஏற்படுத்தப்படுவதால், தண்டனைகள், அபராதம் அல்லது நட்டஈட்டுத் தொகையைக் குறைப்பதற்கான விதந்துரையைப் பெற்றுக் கொள்வதற்கு இயலும். அதற்கமைய, சட்டவரைஞரால் குற்றவியல் வழக்குக் கோவையைத் திருத்தம் செய்வதற்காக தயாரிக்கப்பட்;டுள்ள சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**சேர் பெறுமதி வரிச்சட்டத்தை திருத்தம் செய்தல்**

பெறுமதி சேர் வரிச்சட்டத்தின் வரி விடுவிப்பை நீக்கம் செய்கின்ற எதிர்பாராத விளைவுகளை தடுத்தல், சட்டத்தின் தெளிவான தன்மையை பேணுதல் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் வரி மறு சீரமைப்புகளை அமுல்படுத்துவதற்காக அரச நிதி தொடர்பான செயற்குழு வழி வகைகள் தொடர்பான செயற்குழு தேசிய பொருளாதார மற்றும் பௌதீக திட்டமிடல் தொடர்பான துறை சார் கண்காணிப்பு செயற்குழு மற்றும் பொருளாதார பாதிப்புகளை சமப்படுத்த தொடர்பான துறை சார் கண்காணிப்பு செயற்குழு உள்ளிட்ட அரச கணக்குகள் தொடர்பான செயற்குழுக்களின் தலைமையில் ஒருங்கிணைந்து ஒருங்கிணைந்த குழுவின் ஆலோசனைக் அமைவாக நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக பெறுமதி சேர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதைந்துறைகளின் பிரகாரம் அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்கள் மற்றும் பல்வேறு அமைச்சு தீர்மானங்களின் பிரகாரம் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஏனைய திருத்தங்களையும் உள்ளடக்கி 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதிசேர் வரி சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டமூலம் ஒன்றை தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**அனர்த்த நிலைமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கல்**

இம்முறை தென்மேற்கு பருவப்பெயர்ச்சி மழை காரணமாக எதிர்பாராத வகையில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களின் விளைவுகளாக, நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அதிக மழை வீழ்ச்சியால் மண் சரிவு, மரங்கள் சரிந்து வீழ்தல்,போன்றன பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மோசமான வகையில் பாதிப்புகளை ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தற்போது ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.அதனால் முப்படையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையணியின் சேவைகளை பெற்றுக் கொண்டு குறித்த ஏனைய அமைச்சுகளின் முழுமையான ஒத்துழைப்புகளுடன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள பொது உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# கம்பனிகள் முன்னெடுத்த முயற்சி தோல்வி கண்டு, நீதி வென்றுள்ளது

## மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி தெரிவிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை தடுப்பதற்காக சட்டரீதியாக பெருந்தோட்டக் கம்பனிகள் முன்னெடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கான ஆயிரத்து 700 ரூபா சம்பள விவகாரம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை வரவேற்றுள்ள அவர், இ.தொ.காவால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைக்கு பேராதரவு வழங்கிய மக்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 1700 நாளாந்த சம்பளமாக வழங்குமாறு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்கள் இடைக்கால தடையுத்தரவு கோரி இருந்தபோதிலும், அந்த கோரிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. அதாவது தொழிலாளர்களுக்குரிய சம்பள உயர்வு என்பது நியாயமானது என்பது இதன்மூலம் உறுதியாகியுள்ளது.

எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ரூ.1700 வழங்குவதற்கு முன்வருமாறு பெருந்தோட்ட நிறுவனங்களை வலியுறுத்துகின்றேன்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வு, பொறிமுறை அவசியம். அதனை ஏற்படுத்துவதற்குரிய தொடர் முயற்சிகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஈடுபட்டு வருகின்றது. அந்த முயற்சியில் நிச்சயம் வெற்றியடைய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இ.தொ.கா அன்று முதல் இன்று வரை மக்கள் நல அரசியலையே நடத்தி வருகின்றது. எப்படிதான் சவால்கள் வந்தாலும் மக்களுடன் தோளோடு தோழாக நின்றுள்ளது. மக்களும் காங்கிரஸ் பக்கம் நின்றுள்ளனர். சம்பள உயர்வு போராட்ட விடயத்தில் இது தெளிவாக தென்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்களா?

## புலனாய்வு அறிக்கை கோருவதாக விமல் எம்பிக்கு அமைச்சர் சுசில் பதில்

## தகவல் முற்றிலும் தவறு – வேலு குமார் எம்.பி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இந்தியாவிலிருந்து பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு வரவழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் ஆசிரியர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விமல் வீரவன்ச எம்பி எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விமல் வீரவன்ச தமது கேள்வியின் போது, நாட்டில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை காணப்பட்டதால், தோட்டப்புற பாடசாலைகளுக்காக இந்தியாவிலிருந்து 2000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டுள்ளார்கள். ஆசிரியர்கள் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காகவே கல்வியமைச்சு இதைச் செய்திருக்க முடியும்.

எனினும், புலனாய்வுப் பிரிவு அறிக்கையில் இந்தியா ஆசிரியர்கள் தோட்டப்புற பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு ஒரு விதத்தில் நஞ்சை புகட்டுகிறார்கள் என தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஊடகங்களிலும் தகவல்கள் வெளியிடப்பட்டன.

இதனைக் கருத்திற் கொண்டு அது தொடர்பில் புலனாய்வுப் பிரிவின் அறிக்கையை கல்வி அமைச்சுக்குப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடக்குமானால் அதை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கு பதிலளித்த கல்வியமைச்சர் தாம், கல்வி அமைச்சராக பதவியைப் பொறுப்பேற்ற பின்னர், இந்திய ஆசிரியர்களை வரவழைப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் தாம், அனுமதி வழங்கவில்லை என தெரிவித்தார்.

மேற்படி நடவடிக்கைகள் இதற்கு முன்னரான செயற்பாடாக இருக்க முடியும். ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலய தலையீட்டுடன் ஒரு தரப்பினர் வருகை தந்ததாக அறிய முடிகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் போது சபையில் கருத்து தெரிவித்த கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார்,

மேற்படி தகவல் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இந்தியாவிலிருந்து 2000 ஆசிரியர்கள் வரவழைக்கப்படவில்லை.

இதை பொறுப்புடன் கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# காலி, மாத்தறை மாவட்ட பாடசாலைகளுக்கு விடுமுறை

தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று (05) விடுமுறை வழங்கப்படுவதாக மாகாண கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேபோன்று இரத்தினபுரி கல்வி வலயத்தின் அனைத்து பாடசாலைகளும் நிவித்திகல கல்வி வலயத்தின் எலபத, அயகம மற்றும் கலவான ஆகிய கல்விப் பிரிவுகளின் சகல பாடசாலைகளையும் இன்று மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்விச் செயலாளர்கள் அறிவித்தல் ஒன்றை விடுத்து இந்தத் தீர்மானத்தை அறிவித்துள்ளனர்.

இன்று நிலவும் வானிலை நிலைக்கு ஏற்ப பாடசாலைகளை நடத்துவது தொடர்பான தீர்மானங்கள், பிராந்திய பணிப்பாளர்களால் எடுக்கப்படும் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் வெள்ள நிலைமை தணிந்துள்ள பகுதிகளில், பாடசாலைகளை திறக்குமாறு மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க அனைத்து பாடசாலைகளின் அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலைநிலையால் பல பகுதிகளில் இயல்பு நிலை குலைந்துள்ளது. இந்நிலையில் மீட்பு பணிகள் துரிதமயப்படுத் தப்பட்டுள்ளதுடன்,இடம்பெயர்ந்தோருக்கு சமைத்த உணவுகளும் வழங்கப்படுகின்றன.

பாடசாலைகளை வழமைக்கு கொண்டு வரும் தீர்மானங்கள் பிரதேச அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.




## 5 ஜூன் 2024 / சர்வதேச சுற்றாடல் தினம் 2024

# பேண்தகு காணி முகாமைத்துவம், பாலைவனமாக்கல் மற்றும் வரட்சி தடுப்பு

## "பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம்"



### உலக சுற்றாடல் தினச் செய்தி

ஒரு நாடு என்ற வகையில், நாளாந்தம் சுற்றுச் சூழலின் அழிவு காரணமாக காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளுக்கு பலியாகி வருகிறோம். இந்நிலைமையைக் கட்டுப்படுத்தாவிடின், நமது சுற்றுச்சூழல் கட்டமைப்பு கடுமையான அழிவை நோக்கிச் செல்லும். அதனால் மனித குலத்தின் இருப்புக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும்.

எனவே, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் குடிமக்களாகிய நமது பொறுப்பை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. மேலும், காலநிலை மாற்றத்தை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பது குறித்தும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

அதற்குத் தேவையான சட்டம் மற்றும் நிறுவன ஏற்பாடுகளை உருவாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. மேலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பொதுச் சட்டமொன்றையும் கொண்டு வர எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் போது, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட போட்டிப் பொருளாதாரத்துக்கு மேலாக 2050ஆம் ஆண்டுக்குள் முழுமையாக பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதே அரசாங்கத்தின் இலக்காகும். அதன்படி பசுமைப் பொருளாதார திட்டங்களைத் தயாரிக்கும்போது, காலநிலை மாற்றச் சட்டம் மற்றும் உயிரியல் கட்மைப்புச் சட்டம் என்பனவும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் சிங்கராஜ, ஹோர்ட்டன்தென்ன, நக்கிள்ஸ், மகாவலியின் உயிரியல் கட்டமைப்பைப் பாதுகாக்கும் வகையில் அந்தச் சட்டம் அமையும்.

காடு வளர்ப்பு, முத்துராஜவெல பாதுகாப்பு மற்றும் நாட்டிலிருக்கும் ஏனைய இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கான சட்டமூலங்களையும் விரைவில் தயாரித்து நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது மட்டுமன்றி, காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகள் குறைந்த , சுற்றுச் சூழலுக்கு உகந்த நாடாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு "பயனுள்ள நிலப் பயன்பாட்டின் ஊடாக ஆரோக்கியமான சூழல்" என்ற தொனிப்பொருளில் இம்முறை நடத்தப்படவிருக்கும் சுற்றாடல் தின நிகழ்வுக்கு எனது வாழ்த்துக்கள்!

**ரணில் விக்கிரமசிங்க**
**ஜனாதிபதி**
**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**04 ஜூன் 2024**



### சர்வதேச சுற்றாடல் தினம் 2024
### கௌரவ இராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி
### குடிமக்களின் பொறுப்பை நிறைவேற்றி சுற்றாடலை பாதுகாக்க ஒன்றிணைவோம்.

புதிய பொருளாதார அபிவிருத்தி இலக்கு போன்று உலகளாவிய பேண்தகு அபிவிருத்தி இலக்கை அடையும்போது சுற்றுச்சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் அதிகமாகும். சுற்றாடல் மாசு, காடுகளின் அளவு குறைதல், நில அழிவுகள், உயிர் பல்வகைமையின் பாதிப்பு, காலநிலை மாற்றம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பாதிப்புச் செலுத்துகிறது. அந்த சுற்றுச்சூழல் பிரச்சினைகளை குறைப்பதற்கு அரசாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பேண்தகு சூற்றுச்சூழல் எதிர்கால சந்ததிகளுக்கான அன்பளிப்பாக மாற்றுவதற்கு நட்பார்ந்த கொள்கை ஒன்றுடன் மற்றும் ஒத்துழைப்புடன் தேசிய மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். நீர் பிடிப்பு, பாதுகாக்கப்பட்ட பகுதிகள், நிதிக் கரைகள், ஈர நிலங்கள் போன்ற சுற்றுச்சூழலின் முக்கிய நிலங்களை அடையாளம் கண்டு அவைகளை பாதுகாக்க வேண்டி உள்ளது. அழகான தூய்மையான நாடு ஒன்றை உருவாக்குவது எமது முயற்சியாகும். அதற்காக பொதுமக்கள், அரசு மற்றும் மாகாண அரசு உட்பட அனைத்து நிறுவனங்களினதும் நேரடி பங்களிப்பு அவசியமாகும்.

சுற்றாடல் அழிவில் பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் போன்ற உக்கா கழிவுகள் எமக்கு இருக்கும் பிரதான சவால்களாகும். வீட்டில், அலுவலகத்தில், பணி இடத்தில், வேலைத் தளத்தில் பொலித்தீன், பிளாஸ்டிக்கை குறைக்கும் செயற்பாட்டில் பொது மக்கள் என்ற வகையில் சுயமாக செயற்படுவது முக்கியமாகும். சட்ட திட்டங்களை விட சுய அர்ப்பணிப்பு சுற்றாடலை பாதுகாப்பதில் மிகவும் முக்கியமானது. தினசரி சேர்கின்ற குப்பைகள் தற்போது பெரும் சுற்றுச்சூழல் பிரச்சினையாகும். உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக திண்ம கழிவு முகாமைத்துவத்தின் மூலம் சுற்றுச்சூழலுக்கு உக்கா கழிவுகள் சேர்க்காமல் இருப்பதற்கு தற்போது அரசாக தீர்மானித்து செயற்படுத்துகிறோம். நாளுக்கு நாள் புதுப்பிக்கப்படும் அந்தத் திட்டங்களில் பொதுமக்களின் பங்களிப்பு சுற்றாடலை பாதுகாக்கும் பணிக்கு அதிக தாக்கம் செலுத்துகிறது. வயது, இனம், மத பேதம் இன்றி நாம் குடிமக்களுக்கான பொறுப்பை நிறைவேற்றுவோம்.
இம்முறை சுற்றாடல் தினத்தை நாம் கொண்டாடுவது உயிர் பல்வகைமையைக் கொண்ட உலக மரபுரிமையான சிங்கராஜ காட்டின் ஒரு நுழைவாயிலான கலவான குடவ வாயிலிலாகும். "பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம்" என்ற இந்த ஆண்டின் சுற்றாடல் தொனிப்பொருளை வெல்வதற்கு நாம் நாமாக அர்ப்பணிப்போம்.

**ஜனக்க வக்கும்புர**
**சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்**



### உலக சுற்றாடல் தினம் 2024
### அமைச்சு செயலாளரின் ஆசிச் செய்தி
### அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு தகுதியான உலகம் ஒன்றை உருவாக்குவதற்கு பங்களிப்புச் செய்வோம்.

சர்வதேச சுற்றாடல் தினத்தை இம்முறை நாம் கொண்டாடுவது பல சவால்களுக்கு மத்தியிலாகும். அரை நூற்றாண்டு காலமாக பல்வேறு தொனிப்பொருளில் உலகம் வருடாந்தம் சர்வதேச சுற்றாடல் தினத்தை கொண்டாடியது வாழ்வதற்கு தகுதியான சூழல் ஒன்றை கட்டியெழுப்புவதற்காகும். இம்முறை தொனிப்பொருள் "பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம்" என்பதாகும்.

சர்வதேச சுற்றாடல் தினத்திற்கு இணையாக மே 30ஆம் திகதி தொடக்கம் ஜூன் 05ஆம் திகதி வரை சுற்றாடல் வாரம் ஒன்றை அறிவித்தோம். பேண்தகு காணி முகாமைத்துவம், வளி மாசடைதல் மற்றும் அதன் தாக்கங்களை மட்டுப்படுத்தல், நீர் மற்றும் நீர் மூலங்களின் பாதுகாப்பு, உயிர் பல்வகைமையை பாதுகாத்தல், சுற்றாடலை தூய்மைப்படுத்தல், பிளாஸ்டிக் கழிவுகளின் முகாமைத்துவம் மற்றும் மரம் நடுதல் இந்த சுற்றாடல் வாரத்தின் செயற்பாடுகளாகும்.
உள்ளூராட்சி நிறுவன நிலப் பகுதி ஒன்றில் அகழ்வுச் செயற்பாடுகள், மண் வெட்டுதல், மணல் எடுத்தல் மற்றும் காடழிப்பு காரணமாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் நிலங்கள் இருந்தால் கூடிய விரைவில் அந்த நிலத்தை மீளமைப்பதற்கு பொருத்தமான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் தேவை தற்போது ஏற்பட்டுள்ளது.

மண் பாதுகாப்பு மற்றும் பேண்தகு காணி முகாமைத்துவம் மற்றும் பாதிப்புக்கு உள்ளான நிலத்தின் மீளமைப்புக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளன. நாட்டில் காட்டுப் பகுதியை அதிகரிப்பதன் தேவை வலுவாக ஏற்பட்டுள்ளது. கிராமிய மற்றும் நிறுவன மட்டத்தில் மரம் நடுதல் நிகழ்ச்சிகளை செயற்படுத்தி வளர்த்து கிளைகள் வரும் வரை பாதுகாப்பது அவசியமாகும்.
சுற்றுச்சூழல் துறை சார்ந்த அரசின் கொள்கை இலக்குகளை பூர்த்தி செய்யும்போது மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உட்பட பொறுப்புடைய அமைச்சுகள், திணைக்களங்கள், தனியார் துறை, அரசு சாரா அமைப்புகள் உட்பட இலங்கையர்களை சிறந்த முறையில் ஒருங்கிணைத்து, ஒத்துழைப்புடன் இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் முகம்கொடுக்கும் பாரிய சவாலான காலநிலை மாற்றத்தை வெற்றி கொள்வதற்கு சர்வதேச சுற்றாடல் தினத்தை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வோம்.

**பி.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு**

## சுற்றாடல் அமைச்சு






**ஜானக்க வக்கும்புர**
**சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்**

"பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம்" என்ற தொனிப்பொருளைக் கொண்ட இம்முறை சுற்றாடல் தினத்திற்கு ஆசிச் செய்தி ஒன்றை வழங்குவதை பெரும் பாக்கிமாக கருதுவதோடு, பேண்தகு சுற்றாடல் மூலோபாய திட்ட தேவைகளுக்கு அமைய நில முகாமைத்துவம், உயிர் பல்வகைமையை பாதுகாத்தல், தேசிய வனப்பகுதியை அதிகரிப்பது, விஞ்ஞான ரீதியான கழிவுகளின் முகாமைத்துவம் மற்றும் சுற்றடாலுக்கு சாதகமான குடியேற்றங்கள் போன்ற சுற்றாடல் பாதுகாப்பு நுழைவுகளை உண்மையாக்குவதன் மூலம் வெள்ளம், நிலச்சரிவு, பனிப்பாறைகள் உருகுதல், வளி மாசு, உலக வெப்பமாதல் அதிகரித்தல் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முடியுமாக உள்ளது.

மனிதன் உட்பட அனைத்து உயிரினங்கள் மற்றும் சுற்றாடல் இடையே நெருங்கிய உறவு உள்ளது. பண்டைய காலம் தொடக்கம் இலங்கை மக்கள் சுற்றுச்சூழலுடன் பேணி வந்த ஆழமான உறவு எமது வாழ்வை மேம்படுத்துவதற்கு காரணமானதோடு அது சுற்றுச்சூழலுடன் சகவாழ்வுடனான போக்கை கட்டியெழுப்பிய சமூகம் ஒன்று எதிர்கால சந்ததிக்கு சுற்றாடல் தொடர்பில் எமது கடந்த கால அறிவை மற்றும் தற்போதைய சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் புரிதல் ஒன்றை பெற்றுக்கொடுப்பதன் மூலம் மட்டுப்படுத்தல் மற்றும் ஒட்சிசன் அளவை அதிகரிப்பதை நோக்கி அந்தந்த பகுதிகளுக்கு பொருந்துகின்ற வகையில் மரங்கள் நடப்பட்டு எதிர்கால வருடங்களில் உலகுக்கு 02 மில்லியன் செடிகளை நட்டு பங்களிப்பு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டு இம்முறை உலக சுற்றாடல் தினத்தில் எமது தொனிப்பொருளான "பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லத்தை" வெல்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியான்றுவோம், ஒன்றுதிரள்வோம்!

# வாழ்வு தரும் சுற்றாடலைப் பாதுகாப்பது எங்கள் கடமையாகும்

**பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம் என்ற தொனிப்பொருளை முன்வைத்து சர்வதேச சுற்றாடல் தினம் இன்று (5) கொண்டாடப்படுகிறது. 1972ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் நடைபெற்ற மனித சுற்றாடலை பாதுகாப்பது தொடர்பான ஐக்கிய நாடுகளின் மாநாட்டு ஆரம்ப தினத்தையொட்டி இன்று (5) சர்வதேச சுற்றாடல் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரை அதனையொட்டியாகும்.**



சட்டத்தரணி பிரபாத் சந்திரகீர்த்தி
செயலாளர், சுற்றாடல் அமைச்சு

ஐந்து தசாப்த காலமாக உலக மக்களால் இன்று (5) உலக சுற்றாடல் தினம் கொண்டாடப்படுகிறது. வருடாந்தம் பல்வேறு தொனிப்பொருள்களில் இடம்பெறுகிறது. இம்முறை அது பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம் என்பதாகும். அதேபோன்று 2016 சர்வதேச சுற்றாடல் தினத்துக்கு இணையாக சுற்றாடல் வாரம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சர்வதேச சுற்றாடல் தினத்திற்காக சுற்றாடல் வாரம் ஒன்று ஜனாதிபதி செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறையும் அது அவ்வாறே உள்ளது. அதன்படி முறையே பேண்தகு காணி முகாமைத்துவ தினம், வளி மாசு மற்றும் அதன் பாதகமான தாக்கங்களை மட்டுப்படுத்தல் தினம், நீர் மற்றும் நிர் மூலங்களை பாதுகாத்தல் தினம், உயிர் பல்வகைமையை பாதுகாத்தல் தினம், சுற்றாடலை தூய்மைப்படுத்தும் தினம், பிளாஸ்டிக் கழிவுகள் முகாமைத்துவ தினம் என்ற தொனிப்பொருளின் ஊடாக 30 ஆம் திகதி தொடக்கம் நேற்று (4) வரை பல்வேறு நிகழ்ச்சிகள் அரச தனியானர், சமூக அமைப்புகளின் பங்கேற்புடன் நாடு முழுவதும் நடைபெற்றது. இன்றைய தினம் சர்வதேச சுற்றாடல் தின கொண்டாட்டம் சிங்கராஜ வனத்தின் குடாவெவில் இடம்பெறுவது அதன் இரண்டாவது கட்டமாகவாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுற்றாடல் அமைச்சராக பிரதான விருந்தினராக இணையும் இன்றைய நிகழ்வுக்கு சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் மற்றும் மாகாண மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சரான ஜானக்க வக்கும்புர உட்பட அமைச்சர்கள், பிரமுகர்கள் பலரின் பங்கேற்புடன் இடம்பெறும்.

அதேபோன்று சர்வதேச சுற்றாடல் தினம் தொடர்பில் குறிப்பிடப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. உண்மையிலேயே இன்றைய தினம் ஒருபோதும் ஒரு நாளுக்கு அல்லது வாரத்துக்கு என பிரித்து பார்க்க முடியாது. எமக்கு அதன் குறுகிய மற்றும் நீண்டகால இலக்கை பூர்த்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அது சார்ந்த சர்வதேச ஒப்பந்தங்களுக்கு இந்த நாடு கைச்சாத்திட்டுள்ளது.

2015 பாரிஸ் ஒப்பந்தத்திற்கு நாம் 2016 இல் கைச்சாத்திட்டோம். அதன்படி இலங்கை 2030 ஆம் ஆண்டாகும்போது பசுமையில்ல வாயு உமிழ்வு 14.5மூ குறைக்க வேண்டி உள்ளது. என்றாலும் அதற்காக போக்குவரத்து, விவசாயம், கழிவு முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டி உள்ளது.

அதேபோன்று, தற்போது 29% வரையான இந்நாட்டு வனப்பகுதியில் 2030 ஆம் ஆண்டாகும்போது 32% வரை அதிகரிக்க வேண்டி உள்ளது. அப்போது புதுப்பிக்கத்தக்க வலுசக்தி இந்நாட்டின் முழு தேவையில் 70% இனை பூர்த்தி செய்தல் வேண்டும். அது மாத்திரமல்ல அப்போது இந்நாட்டுக்கு கார்பன் உமிழ்வு 2050 இல் பூஜ்யமாக்குவது அவசியமாகும்.

என்றாலும் அந்த இலக்குக்கு 2034ஆம் ஆண்டில் நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதி ஆலோசனை வழங்கி உள்ளார். அதன்படி தற்போது திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உண்மையிலேயே காலநிலை மாற்றம் பேரழிவு ஒன்றாக முழு உலகமும் ஏற்றுள்ளது. என்றாலும் அதனால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாவது எம்மைப் போன்ற நாடுகளாகும். அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். அது அவ்வாறு அமைவது அபிவிருத்தி அடைந்த பல நாடுகளை விடவும் இந்த நாடு பசுமையில்ல வாயு உமிழ்வு அதிகம் குறைவு என்பதாலாகும். எம்மைப்போன்ற நாடுகளுக்கு காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு பெரும் பணத்தை பயன்படுத்த முடியாதுள்ளது. உலக மக்களின் ஒத்துழைப்பு இந்த நாட்டுக்கு தேவையாக உள்ளது.

1850ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கத்தேய நாடுகள் அதிக வளப் பயன்பாடு காரணமாக அதிக பசுமையில்ல வாயு உமிழ்வு இடம்பெற்று வருகிறது. அதன்படி அந்த நாடுகள் எம்மைப்போன்ற நாடுகளுக்கு 45 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை கடன்பட்டுள்ளது. என்றாலும் நாம் நாடு ஒன்றாக நிதி அடிப்படையில் கடன்பட்டிருப்பது 12 முதல் 15 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையாகும். அதன்படி உண்மை நிலை வெளிச்சத்திற்கு வருகிறது.

வெளிநாட்டு சுற்றாடல் மாநாடுகள், உச்சிமாநாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த மார்ச் மாதம் கென்யாவின் நைரோபி நகரில் இடம்பெற்ற சர்வதேச சுற்றாடல் மாநாட்டிலும் அது அவ்வாறு இருந்தது. என்றாலும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்பதால் அந்த முன்மொழிவு முன்னெடுத்துச் செல்லப்படாதபோதிலும் அது உண்மை என சர்வதேச சமூகம் ஏற்றுள்ளது. அதேபோன்று அதற்காக மேற்கத்தியே நாடுகளில் இருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்பு தற்போதையதை விடவும் அதிகரிக்க வேண்டும் என்பது உலகம் ஏற்ற உண்மையாகும்.

இந்நாட்டு தனி நபர் கார்பன் உமிழ்வு 0.8 தொன் அளவாகும். ஆனால் ஐக்கிய அமெரிக்க குடியரசில் அது 14.9 தொன் ஆகும். கனடாவில் அது 14.8 தொன்னாக உள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் அது 7 தொன்கள் அளவாகும்.

அது அவ்வாறு இருக்க நாம் நாடு ஒன்றாக தொடர்ந்து முன்னேற்றத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறோம். அந்தப் பயணத்திற்கு தற்போதைய சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராக பணியாற்றுவதும் உண்மையான ஒளியூட்டுவதாக உள்ளது. அதேபோன்று அது அவ்வாறு இருப்பது இந்நாட்டில் முதல் முறையாகவாகும். கழிவு முகாமைத்துவ பொறுப்பு பிரதானமாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுற்றடால் துறையும் அந்த இராஜாங்க அமைச்சின் கீழ் இருப்பது செயற்பாடுகளை மிகவும் வசதியாக்கியுள்ளது.

சுற்றாடல் அமைச்சராக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்தை ஒன்றிணைத்து ஒரே வட்டத்தில் அடையாளப்படுத்துவது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேபோன்று சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் கொத்மலை பகுதியில் அமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நாட்டு மக்கள் தொகையில் 50% இற்கு மேல் வாழ்வது கடற்கரையை ஒட்டியாகும். அதேபோன்று கடற்றொழில் சுற்றுலா ஊக்குவிப்பு துறைகளுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும்.

பிராஸ்டிக் கழிவு முகாமைத்துவத்தில் முக்கியமான நாடு ஒன்று என்பதை விசேடமாக குறிப்பிட வேண்டியதில்லை. ஒரு தடவை பயன்படுத்தி அகற்றும் அந்தக் கழிவுகளை தடை செய்வதற்கு எமது நாடு நடவடிக்கை எடுத்துள்ளது. பல்பொருள் அங்காடிகளில் இருந்து பொலித்தீன் பைகளை பெற்றுக்கொள்வதாக இருந்தால் அதற்காக மேலதிக பணம் செலுத்த வேண்டும் என்ற விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொலித்தீன், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பது இலக்காகும். நிலத்தில் அங்கங்கே சேகரிக்கப்படும் அவை ஆறு குளங்கள் வழியாக கடலில் கலக்கின்றன. அது கடல் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது தவிர கடல் உயிரினங்கள் உணவாக பெறும் அவை மீண்டும் மனித உடலுக்கு கடல் உணவு ஊடாக நுழைந்து புற்றுநோய்க்கு காரணமாகிறது. இது உட்பட தூய்மையான சுவாசத்தை எதிர்கால சந்ததிக்கு உரிமையாக்குவதற்கான பொறுப்பு இந்நாட்டின் அனைவருக்கும் ஒன்றுபோல் இருக்கிறது.



அஞ்சலி குமாரகே, மேலதிக செயலாளர் (சுற்றாடல் கல்வி, மேம்பாடு மற்றும் விசேட திட்டங்கள்)

### அஞ்சலி குமாரகே, மேலதிக செயலாளர் (சுற்றாடல் கல்வி, மேம்பாடு மற்றும் விசேட திட்டங்கள்)

தூய்மையான நீர், காற்று எல்லோரதும் உரிமையாகும். அதனால் மாத்திரமன்றி விலங்குகள், மரங்களுக்கும் இந்த சுற்றாடல் உரிமையாகும். ஆனால் இன்று நீரை வாங்குகிறோம். அதேபோன்று அது சாதாரணமான ஒன்றாக மாறிவிட்டது. எதிர்காலத்தில் சுவாசத்தை பாதுகாப்பதற்கு தூய்மையான காற்றையும் வாங்க வேண்டிய வாய்ப்பு ஏற்படாதா? அதன்படி எமக்கு பெரும் வரட்சி, சுற்றாடலுக்காக தனித்தனியாக செய்ய வேண்டிய பொறுப்புகள் மலையளவில் உள்ளன. ஒருவருக்கும் அதில் இருந்து விடுபட முடியாது.

மேலும், சுற்றாடல் கல்வி தொடர்பில் சட்டரீதியில் இந்நாட்டு பாடசாலை கட்டமைப்புக்குள் தொடர்ந்து கற்பிக்கப்படுகிறது. என்றாலும் வெளியேறிய பின்னர் நடைமுறையில் அதனை செயற்படுத்துபவர்கள் ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது. பொறுப்பு என்ற வகையில் பொறுப்புக் கூறலும் எம்மால் மறக்க முடியாதுள்ளது.

அது மாத்திரமல்ல, பாதுகாப்பு, அரச நிர்வாக துறைகள் நாடுகளில் முக்கிய அவதானம் செலுத்துகின்ற துறைகளாகும். என்றாலும் அவை ஒவ்வொன்றும் அல்லாது சுற்றாடல் அதனை விடவும் மிகவும் பரந்த கட்டமைப்பைக் கொண்டுள்ளது. சுற்றாடலை பாதுகாப்பது உலகளாவிய குடிமகனின் பொறுப்பாகும். அதற்கு எல்லைகள் நாடு நாடாக ஒதுக்கி காண்பிக்க முடியாது.

அதில் இருந்து மீண்டும் இந்நாட்டை திரும்பிப் பார்த்தால், சிங்கராஜ காடு உலக உரிமையாகும். அதன் பெறுமதி உலக மக்களுக்கு சுட்டிக்காட்டும் வகையில் சுற்றாடல் அமைச்சருமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எடுக்கும் முயற்சியின் மற்றொரு சந்தர்ப்பமாக இம்முறை சர்வதேச சுற்றடால் தின விழா இன்று சிங்கராஜ குடாவ வில் நடைபெறுவதை குறிப்பிடலாம்.

### ஆர்.எஸ். துல்வலகே, பணிப்பாளர்



ஆர்.எஸ். துல்வலகே, பணிப்பாளர் பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு சுற்றாடல் அமைச்சு

### பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு சுற்றாடல் அமைச்சு

சர்வதேச சுற்றாடல் தினகொண்டாட்டத்தை இம்முறை சுற்றாடல் அமைச்சு இரண்டு கட்டங்களைக் கொண்டதாக நடத்துகிறது. அது தேசிய சுற்றாடல் வார கொண்டாட்டம் மற்றும் சர்வதேச சுற்றாடல் தின தேசிய கொண்டாட்டமாகவாகும். சுற்றாடல் வாரத்தின் கீழ் கடந்த 30ஆம் திகதி பேண்தகு காணி முகாமைத்துவத்தை முன்னிலைப்படுத்தி சுவதரணி பூமி திட்டத்தின் கீழ் பல்வேறு நிகழ்சிகள் நாடு முழுவதும் நடைபெற்றது. அநுராதபுரத்தில் எல்லங்க குளக் கட்டமைப்பு ஒன்றை புதுப்பித்தல் அதில் பிரதானானதாகும். 31ஆம் திகதி வளி மாசு மற்றும் அதன் தாக்கங்களை மட்டுப்படுத்தும் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கொழும்பு பத்தரமுல்லை மற்றும் கேகாலை வாகனங்களில் இருந்து சுற்றுச்சூழலுக்கு விச வாயு வெளியிடும் சோனை நடவடிக்கை ஒன்று இடம்பெற்றது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, மோட்டார் வாகன திணைக்களம், VET FUND பங்கேற்புடன் இடம்பெற்ற அதன் இணைப்பு செயற்பாடுகள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய ஓசோன் மற்றும் காற்று வள முகாமைத்துவம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. ஜூன் 1ஆம் திகதி நீர் மற்றும் அதன் மூலங்களை பாதுகாக்கும் தினமாக அறிவிக்கப்பட்டது. நீர் மூல பாதுகாப்பு நோக்குடன் அதன் கீழ் ஜப்பான் ஜபர போன்ற பாதகமான செடிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உயிர் பல்வகைமை பாதுகாப்பு தினமாக கடந்த 2ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. அனுராதபுரம் தன்திரிமலே போர் பூமி சார்ந்த அட்டவிசி போதி அங்கு ரோண உட்பட நிகழ்ச்சிகள் இதற்கு உட்பட்டுள்ளது. அதேபோன்று கடந்த 3ஆம் திகதி சுற்றாடல் தூய்மை தினம் தேசிய விழாவாக கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாகாண சபை நிறுவனங்கள், கடற்றொழில் அமைச்சு, கடல் பாதுகாப்பு திணைக்களம், மேல் மாகாண மற்றும் கழிவு முகாமைத்துவ அதிகாரசபையின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது.

பிளாஸ்டிக் கழிவுகள் முகாமைத்துவ தினம் தொடர்பில் பெந்தர கடற்கரையை சுத்தம் செய்தல் உட்பட நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டமை முதல் கட்டத்தின் கீழாகும். அதேபோன்று சர்வதேச சுற்றாடல் தினம் இடம்பெறும் இன்று சுற்றாடல் அமைச்சு சொபா வருடாந்த சஞ்சிகையை அந்த தேசிய விழா நடைபெறும் சிங்கராஜ வனத்தின் குட்வதி யில் வெளியிடுகிறது. அரசின் பசுமை பெறுகை கொள்கையின் கீழ் சைபர் வெளியீடாக இன்று வெளியிடப்படுவது முன்மாதிரியான நடவடிக்கையாகும். இரத்தினபுரி வர்ணகலவத்த சுற்றாடல் பாதுகாப்பு வலயமாக இன்று வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டது. சிறந்த 5 பசுமை புகையிரத சேவை இடங்களை தேர்வு செய்து இன்று சான்றிதழ்கள் வழங்கி இந்நாட்டு சுற்றுலா துறை மூலம் பங்களிப்பை பெறுவதற்கு ஆதரவு வழங்கப்படுகிறது.

### ரஞ்சித் ராஜபக்' உதவி பணிப்பாளர் சுற்றாடல் அமைச்சு



ரஞ்சித் ராஜபக்' உதவி பணிப்பாளர் சுற்றாடல் அமைச்சு

தேசிய சுற்றாடல் வாரத்தில் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் துறைகள், பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தோட்டத் துறை, அரசு சார அமைப்புகள், சிவில் அமைப்புகளின் பங்கேற்புடன் மக்களின் பங்களிப்புடன் கீழுள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு சுற்றாடல் பாதுகாப்பு திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது, பாதிக்கப்பட்ட நிலங்களை மீளமைத்தல், மண் பாதுகாப்பு மற்றும் பேண்தகு காணி முகாமைத்துவத்திற்காக நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்.

விவசாய நிலங்களை நீண்ட காலத்திற்கு பயன்படுத்த முடியுமான வகையில் செயற்படுத்துவது தொடர்பில் விவசாயிகள் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களை அறிவூட்டல்,

காட்டில் அளவை அதிகரிப்பதற்கு கிராமிய அளவில் மற்றும் நிறுவன அளவில் பொருத்தமான மர நடுகை நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்,

நிரேந்து பகுதி, பாதுகாப்பு பகுதிகள், ஆற்றங்கரைகள், ஈர நிலப் பகுதிகள் போன்ற முக்கிய சுற்றுச்சூழல் நிலங்களை அடையாளம் காணல் மற்றும் அவைகளை பாதுகாப்பதற்கு நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்,

உயிர் பல்வகைமையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

பசுமை கடற்கரை சிந்தனைக்கு பேண்தகு முகாமைத்து மற்றும் கடொலான பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுத்தல்.

கடற்கரை சார்ந்த சுற்றாடல் வலயத்தில் பிளாஸ்டிக் பொலித்தின் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்காக ஊக்குவித்தல்

அழகான, தூய்மையான நாடு ஒன்றை உருவாக்கலை ஒவ்வொரு வீட்டில் இருந்து ஆரம்பிப்பதன் முக்கியத்துவம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பில் பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலுக்கு முறையான கழிவு முகாமைத்துவ முறை ஒன்றை பின்பற்றல்,

பிராந்தியத்திற்கு அமைய பசுமை தொழில்களை அறிமுகம் செய்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கு நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்,

வீட்டில் இருந்து, அலுவலகத்தில் இருந்து, பாடசாலையில் இருந்து அகற்றப்படும் பிளாஸ்டிக்கை சேகரித்து கசல பொல நிகழ்ச்சியை செற்படுத்தல் ஆகியவை ஆகும்.

**நுவன் மகேஷ் ஜயவிக்ரம**
**படம்: நீலக்க அபேரத்ன (சுற்றாடல் அமைச்சு ஊடகப் பிரிவு)**



# நகர்வலம்



## சீரற்ற காலநிலை காரணமாக மாத்தறையில் 10,937 பேர் பாதிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் மாத்தறை மாவட்டத்தில் 2,731 குடும்பங்களை சேர்ந்த 10,937 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அம்மாவட்டத்தில் 150 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாத்தறை மாவட்ட செயலகம் தெரிவித்தது.

இந்நிலையில் மாத்தறை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மத்திய நிலையங்களில் 21 குடும்பங்களை சேர்ந்த 123 பேர் தங்கியுள்ளனர். இம்மாவட்டத்தில் இதுவரை 06 பேர்மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் அகுரஸ்ஸ, திஹகொட, மாலிம்பட, தெவிநுவர, கம்புறுப்பிட்டிய, அதுரெலிய, கிரிந்தை, புகுல்வல்ல, பஸ்கொட, ஹக்மன, மாத்தறை, பிடபந்தர, முலட்டியன, கொடபொல, திக்வல்லை, வெலிப்பிட்டிய ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட இடங்களே வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் அதுரெலிய பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியிலேயே அதிகளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் 1,572 குடும்பங்களை சேர்ந்த 6,377 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 56 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மாத்தறை மாவட்ட செயலகம் தெரிவித்தது.



### அனர்த்த நிலைமையை ஆராய

## இராஜாங்க அமைச்சர் களுத்துறை விஜயம்



**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் அவதானிக்கும் நோக்கில் களுத்துறைக்கு நேற்று முன்தினம் மாலை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் விஜயம் செய்துள்ளார்.

இந்நிலையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் கலந்து கொண்டு மாவட்டத்தின் அனர்த்த நிலவரம் தொடர்பாக ஆராய்ந்து அதிகாரிகளுக்கு இராஜாங்க அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சஞ்ஜீவ எதிரிமான்ன, களுத்துறை மாவட்ட செயலாளர் ஜீ.ஜனக பிரசன்னகுமார, களுத்துறை பிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் ஐ.டீ.பீ.சுகதபால, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி பொலிஸ் பிரிவின் ஹெலம்பகஸ்வெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேயிடத்தை வசிப்பிடமாகக் கொண்ட 56 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது காணிக்குள் நுழைந்த காட்டு யானையை துரத்துவதற்கு முற்பட்ட போது, இவரை யானை தாக்கியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



இலங்கைக்கு வருகை தந்துள்ள பொறியியலாளர் முஹம்மத் பின் சுலைமான் அல் மஸ்ஊத் தலைமையிலான சவுதி அரேபியாவின் அபிவிருத்திக்கான நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானியை அவரது அலுவலகத்தில் சந்தித்து, இந்நாட்டில் இந்நிதியத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.

## போதைக்கு எதிரான செழுமை வீதி பந்தயம்

**திறப்பனை தினகரன், அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்கள்**

சர்வதேச புகையிலை மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'போதைக்கு எதிரான செழுமை வீதி பந்தயம்' நேற்று முன்தினம் திங்கட்கிழமை (03) அநுராதபுர நகரில் நடைபெற்றது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட இப்போட்டி அநுராதபுரம் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ.வசந்த தலைமையில் நடைபெற்றது. 'வலிமையான நாட்டை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த போதைப்பொருள் எதிர்ப்பு சமுர்த்தி வீதிப்போட்டி நடைபெற்றது. இதில் 12 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய அநுராதபுர மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் டபிள்யூ.ஏ.வசந்த, இளைஞர்களை புகைப்பிடித்தல் மற்றும் போதைப் பாவனையிலிருந்து விடுவிக்க விளையாட்டு சிறந்த வழியாகுமென்றார்.

## கடும் மழை, வெள்ளம்; புத்தளத்தில் 258 பேர் பாதிப்பு



**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**

சீரற்ற காலநிலையுடன் கூடிய மழை வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தின் 07 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 19 கிராம அலுவலர் பிரிவுகளில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 258 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி கூறினார்.

மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவில் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதில் 12 கிராம அலுவலர் பிரிவுகளில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாதம்பை, ஆராச்சிகட்டுவ, நாத்தாண்டிய, புத்தளம், முந்தல் மற்றும் கருவலகஸ்வெவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சீரற்ற காலநிலை காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சீரற்ற காலநிலையால் 51 வீடுகளும் 04 வர்த்தக நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வாறிருக்க மாரவில, தல்வில பிரதேசத்திலுள்ள சாந்த ரீட்டா கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை வீசிய பலத்த காற்று காரணமாக பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் அத்தேவாலயத்தின் ஒருபகுதி சேதமடைந்துள்ளது.

இதனால் அத்தேவாலயத்தின் ஒரு பகுதி கட்டடம் மற்றும் கூரைக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

### புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற

## சீனன்கோட்டையிலிருந்து சுமார் 200 பேர் புனித மக்கா பயணம்



**பேருவளை விசேட நிருபர்**

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இந்த வருடம் (2024) பேருவளை சீனன்கோட்டை பிரதேசத்திலிருந்து சுமார் 200 பேர் மக்காவுக்கு செல்கின்றனர்.

இவ்வாறு புனித ஹஜ் கடமையை மேற்கொள்ள செல்லும் முதற்கட்ட ஹாஜிகளை வழியனுப்பும் நிகழ்வு, பாஸியா பெரிய பள்ளிவாசலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஹஜ் கடமையை மேற்கொள்வோர் பல முகவர் நிலையங்களினூடாக கட்டம் கட்டமாக செல்கின்றனர். கடைசிக் குழுவினர் 09ஆம் திகதி பயணமாகவுள்ளனர்.

துஆ பிரார்த்தனையின் பின்னர் ஹஜ்ஜாஜிகள் பயணமாகினர். சீனன்கோட்டை பாஸியா பள்ளிவாசல் இமாம் மௌலவி அஹம்மத் முபாரக், பள்ளிச் சங்க இணைச் செயலாளர்களான எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், ரம்ழான் அரூஸ் உட்பட உறுப்பினர்கள், ஊர்மக்கள் இதன் போது சமூகமளித்திருந்தனர்.

சீனன்கோட்டையிலிருந்து ஒவ்வொரு வருடமும் பலர் புனித ஹஜ் கடமையை தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த. உ/த பரீட்சை பெறுபேறுகள்

## உயிரியல் விஞ்ஞான பிரிவில் களுத்துறையில் முதலிடம்

**பேருவளை விசேட நிருபர்**



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தையும் களுத்துறை மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்று பேருவளைக்கு புகழ் சேர்த்த பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மாணவியான கே.எப். பாத்திமா நிஹ்லாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தர்கா நகர் விஞ்ஞான கல்வி செயற்றிட்டத்தின் ஏற்பாட்டில் இஷாஅத்துல் இஸ்லாம் சிறுவர் அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தர்கா நகர் விஞ்ஞான கல்வி செயற்றிட்டத்தின் சார்பில் மாணவிக்கு நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.

## கணித பிரிவில் தோற்றி 15 வயது மாணவி சாதனை

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



புத்தளம், ஆராச்சிகட்டுவ விஜயகடுபொத பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய மாணவியான மஞ்சநாயக்க முதியன்சலாகே அவீஷா நெட்சரணி மஞ்சநாயக்க கணித பிரிவில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி 03 ஏ சித்திகளை பெற்றுள்ளார். இவர் புத்தளம் மாவட்டத்தில் 16ஆவது இடத்தை பெற்று சாதனை புரிந்துள்ளார்.

பாலர் பாடசாலையில் கல்வி பயின்ற போதே கல்வி கற்பதில் திறமையை வெளிப்படுத்தி வந்த அவீஷா நெட்சரணி, முதலாம் ஆண்டு முதல் மூன்றாம் ஆண்டுவரை ஆராச்சிகட்டுவ விஜயகட்டுபொத மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார்.

இந்நிலையில் தனக்கு கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோர் உள்ளிட்ட அனைவருக்கும் இம்மாணவி நன்றி தெரிவித்துள்ளார்.

இம்மாணவி ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய போது 190 புள்ளிகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நேகம முஸ்லிம் வித்தியாலயத்தில் 26 பேர் பல்கலைக்கு அனுமதி

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் கெக்கிராவ கல்வி வலயத்தில் தமிழ்மொழி மூலம் கலைப்பிரிவில் சிறந்த பெறுபேற்றை நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எச்.ராஜி ஜனுல்ஹக் தெரிவித்தார். கலைப்பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய 26 மாணவர்களில் 24 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர். ஆர்.எப்.ரிஸ்கியா, எம்.வை.எப்.சிஹாதா, ஏ.எப். ஹுஸ்னா, ஏ.எப்.அர்ஸதா, ஏ.ஆர். எப்.ரமீஹா ஆகியோர் 03 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

## மருத்துவ பீடத்துக்கு தெரிவான மாணவன்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



ஹொரவப்பொத்தானை ரத்மலை பிரதேசத்தைச் சேர்ந்த ஹசன் குத்தூஸ் முஹம்மத் சம்ரி உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 03 ஏ சித்தி பெற்று முதன்முதலாக இப்பிரதேசத்திலிருந்து மருத்துவ பீடத்துக்கு தெரிவாகியுள்ளார். இவர் கலாவெவ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து உயர்தரப் பரீட்சைக்கு உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றியதுடன், 2.2056 இஸட் ஸ்கோர் பெற்று அநுராதபுரம் மாவட்டத்தில் 12ஆவது மாவட்ட நிலையையும் அகில இலங்கை மட்டத்தில் 478ஆவது நிலையையும் பெற்றுள்ளார்.

## திக்குவல்லை மின்ஹாஜ் தேசிய கல்லூரி சாதனை

**வெலிகம தினகரன் நிருபர்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் திக்குவல்லை மின்ஹாஜ் தேசிய கல்லூரி சாதனை படைத்துள்ளதாக அக்கல்லூரி அதிபர் எம்.ஏ.அஸ்வான் தெரிவித்தார்.

இக்கல்லூரியிலிருந்து முதன்முதலாக 2 பேர் மருத்துவத்துறைக்கு தகுதி பெற்றுள்ளனர். ஸுஹைரா ஷாபி (03 ஏ), ஸல்மி ஸப்ரி (02 ஏ, 01 பீ) ஆகியோரே இச்சாதனையை புரிந்துள்ளனர். இத்மா இப்திகார், அம்னா அக்ரம், மிப்ளா ஹனீபா ஆகியோர் 03 ஏ சித்திகளை கலை, வர்த்தகத் துறைகளில் பெற்றுள்ளனர்.

## கலைப்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி

**கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்**



க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் புத்தளம் தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி முஹம்மட் பஸ்லுல் பாரிஸ் ஹானிம், புத்தளம் மாவட்டத்தில் கலைப்பிரிவில் (தமிழ்மொழி) முதலிடம் பெற்றுள்ளார்.

அரசியல் விஞ்ஞானம், பொருளியல், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் ஆகிய மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளை இம்மாணவி பெற்றுக்கொண்டதுடன்,2.1417இஸட்புள்ளிகளையும் பெற்றுள்ளார்.

சட்டத்தரணியாவதே தனது இலட்சியமென க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் புத்தளம் மாவட்டத்தில் கலைப் பிரிவில் முதலிடம் பிடித்த மாணவி முஹம்மட் பஸ்லுல் பாரிஸ் ஹானிம் தெரிவித்தார்.

சிறுவயதிலிருந்தே சட்டத்தரணியாக வேண்டுமென்பது தனது இலட்சியமாகும். அந்த இலட்சியத்தை நோக்கி பயணித்ததாகவும் அம்மாணவி கூறினார். கல்வி கற்பதற்காக ஊக்கப்படுத்தி மேலதிக வகுப்புகள் உட்பட கற்பதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்த பெற்றோர், கொத்தாந்தீவு மு.ம.வி. அதிபர், ஆசிரியர்களுக்கும் இம்மாணவி நன்றி தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற ஹன்சார்ட் முன்னாள் பிரதம ஆசிரியர் மீராமுகைதீன் காலமானார்



இலங்கைப் பாராளுமன்றத்தில் ஹன்சார்ட் பிரதமஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற எம். ஏ. மீராமுகைதீன் கடந்த 08.05.2024 அன்று காலமானார்.

மர்ஹூம் முஸ்தபா ஆலிம் மீராமுகைதீன் காத்தான்குடியை பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு மற்றும் பாணந்துறை எழுவிலவில் அவர் வாழ்ந்து வந்தார். அவர் பாராளுமன்றத்தில் 1957 ஆம் ஆண்டு ஹன்சார்ட் செய்தியாளராக நியமனம் பெற்றார். 1966 ஆம் ஆண்டு உபசெய்தி ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் 1982 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். 1986 முதல் பிரதி ஆசிரியராகவும் பின்னர் 1990 முதல் பிரதம ஆசிரியராகவும் கடமையாற்றி 1992 ஆம் ஆண்டு 35 வருட சேவையை பூர்த்தி செய்து ஓய்வு பெற்றார்.

அவர் காத்தான்குடி அகமது லெப்பை ஆலிம் முகம்மது முஸ்தபா ஆலிம் (நூரி) அவர்களின் இரண்டாவது புதல்வராவார். அவர் கண்ணியமும் நேர்மையும் கொண்டவர்.

பிரபல மொழிபெயர்ப்பாளரான மர்ஹூம் மீராமுகைதீன், சமய சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். கொழும்பு ஜாமிஉல் அல்பர் சம்மாங்கோட்டுப் பள்ளிவாயலின் இமாம் மர்ஹூம் அபுல் ஹஸன் ஆலிம் (காஹிரி) அவர்களால் எழுதப்பட்ட இஸ்லாமிய நூல்கள் பலவற்றை ஆங்கில மொழியில் வெளியிட்டார்.

அன்னாரின் ஜனாஸா 09.05.2024 அன்று பாணந்துறை எழுவில ஜும்ஆப் பள்ளிவாயல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயலில் அவருக்கான ஜனாஸாத் தொழுகையும் நடைபெற்றது.

மௌலவி
SMM முஸ்தபா...
(பலாஹி)

# மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமானால் சமூக ஊடகங்களிலிருந்து விலகியிருப்பது அவசியம்!

## உயர்தரப் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல்நிலை பெற்ற மாணவன் நாகுல் கூறுகின்றார்



படிக்கின்ற காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் மற்றும் கல்விக்கு அப்பாலான செயல்பாடுகளில் இருந்து விலகியிருத்தல் வினைத்திறனான கற்றலுக்கு பக்கபலமாக அமையும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்தர கணிதப் பிரிவில் மாவட்டத்தில் முதல்நிலை மாணவனாக தெரிவாகி சாதனை படைத்த புனித மிக்கேல் கல்லூரி மாணவன் செல்வன் நிர்மலன் நாகுல் தெரிவித்தார்.

அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த. உயர்தர பெறுபேறுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கணிதப்பிரிவில் புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை மாணவன் நிர்மலன் நாகுல் முதலிடம் பெற்றிருந்தார்.

இவர் மூன்று பாடங்களிலும் ஏ சித்தியினைப் பெற்று மாவட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 13 ஆவது இடத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இவர் பெற்ற சற் புள்ளி 2.8844 ஆகும். இவர் தனது மூன்று பாடங்களிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றமையே இவரின் சற் புள்ளி அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது.

அவரை வீட்டில் சந்தித்து உரையாடிய போது அவர் கூறியதாவது:

கேள்வி: எதிர்கால மாணவர்களுக்காக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில்: மாணவர்கள் கூடுதலாக நித்திரையினை தியாகம் செய்து இரவு பகலாக படிக்க வேண்டியதில்லை. அத்தோடு தவணைப் பரீட்சைகளில் குறைய புள்ளிகளை பெறும் போது அதைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இறுதிப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டால் போதுமானதாகும்.

அநேகமானவர்கள் நேர அட்டவணை போட்டு அது மாதாந்தம், வாராந்தம் என வகுத்து படிக்கும்படி கூறுவார்கள். ஆனால் நான் இப்படியெல்லாம் செயல்படவில்லை. நான் நாளைக்கு என்ன படிக்க வேண்டும், எந்த பாடத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதனை இன்று இரவுதான் தீர்மானிப்பேன். இதனை மாதாந்த அடிப்படையிலோ அல்லது வாராந்த அடிப்படையிலோ வகுத்துக் கொள்வதில்லை.

நான் எனக்கென்று ஒரு புதிய கற்றல் அனுகுமுறையினை வகுத்துக் கொண்டே படிப்பேன். இதன் மூலம் கற்றலை இலகுவாக்கி, விரைவாக கற்றுக்கொள்ள முடியும். எனக்கான புதிய உபாயத்தினை பின்பற்றியதால் அதிகூடிய புள்ளியினைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. என்னைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாணவனும் தமக்கான கற்றல் பாணியினை உருவாக்கி கற்பதன் மூலம் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி: பாடசாலையின் பங்களிப்பு எப்படியிருந்தது?

பதில்: பாடசாலையில்தான் ஆசிரியர் மாணவர் இணைப்பு காணப்படும். ஒவ்வொரு மாணவனின் சாதக, பாதக தன்மைகளை இனம் கண்டு ஆசிரியர்கள் வழிப்படுத்துவார்கள். அத்தோடு செய்முறை செயல்பாடுகளை பாடசாலைக்கு சென்றால் மாத்திரமே செயல்படுத்த முடியும். உதாரணத்துக்கு பௌதீகவியல், இரசாயனவியல் பாடங்களுக்கான செய்முறைகளை பாடசாலையில் மேற்கொள்ள வசதிகள் உள்ளன. இவ்வாறான செய்முறைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பாடங்கள் மனதில் இலகுவாக பதிந்துவிடும். ஆகவே மாணவர்கள் கட்டாயம் பாடசாலைக்கு ஒழுங்காக செல்ல வேண்டும். இவ்வாறான வசதிவாய்ப்புக்கள் தனியார் மேலதிக வகுப்புக்களில் காணப்படாது.

இம்மாணவர் களுதாவளையைச் சேர்ந்த ஆனந்தகுமாரி, பழுகாமத்தினைச் சேர்ந்த நிர்மலன் தம்பதியினரின் சிரேஷ்ர புதல்வராவார்.

காரைதீவு குறூப் நிருபர்...

# அம்பாறை மாவட்டத்தில் மது, புகைத்தல் எதிர்ப்பு நிகழ்வுகள்



சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு அமைய அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் M.A.C. அகமது ஷாபிர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இவ்வாண்டுக்கான (2024) சர்வதேச புகைத்தல், மது எதிர்ப்பு தொனிப்பொருளாக 'நண்பா போதைக்கு புகைத்தலுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்', 'வலுவான தேசம் ஒன்றை நிதமும் கட்டி எழுப்புவோம்' என்பதாகும்.

மேலும் அதனையொட்டி மரதன் ஓட்டப் போட்டி, புகைத்தல் எதிர்ப்புக் கொடி விற்பனை, வீதி நாடகங்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்பன இடம்பெற்றன.

மேலும் மரதன் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற வீரருக்கு 15,000 ரூபாவும், இரண்டாம் இடத்தை பெற்ற வீரருக்கு 10,000 ரூபாவும், மூன்றாம் இடத்தை பெற்ற வீரருக்கு 7,500 ரூபாவும் நான்கு மற்றும் ஐந்தாம் இடங்களை பெற்ற வீரருக்கு தலா 5,000 ரூபாவும் வழங்கப்பட்டதுடன், வெற்றியாளர்கள் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி சங்கங்களின் தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வானது மே 31 இல் ஆரம்பமாகி ஜூன் 14 வரை இடம்பெறுகின்றது.

எம்.எப்.நவாஸ்...
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# மூதூர் டயமன் விசேட பாடசாலை மாணவரின் 8 ஆம் வருட பூர்த்தி விழா

மூதூர் தினகரன் நிருபர்



மூதூர் டயமன் விசேட பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் 8 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட வருடாந்த கலைவிழா மற்றும் கௌரவிப்பு நிகழ்வு என்பன பாடசாலை அதிபர் என்.எப்.அகீதா தலைமையில் மூதூர் சஹ்ரா மண்டபத்தில் அண்மையில் வெகு விமர்சையாக இடம்பெற்றன.

மேலும் இப்பாடசாலையில் மூவினத்தையும் சேர்ந்த 40 நலிவுற்ற மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதேவேளை இப்பாடசாலையில் 8 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு இம்மாணவர்களுக்கென கலை நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விநோத நிகழ்ச்சிகள் என்பன நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் பதக்கங்கள், பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் என வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக், மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் இஸட்.எம்.எம். நளீம் முனவ்வரா, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி எம்.பி.எம்.ஹில்மி, மூதூர் பிரதேச சபை செயலாளர் வி. சத்தியசோதி, சமூக சேவையாளர் எம்.பஸால், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வாரணாசி தொகுதியில் மீண்டும் பிரதமர் மோடி



வாரணாசி தொகுதியில் 3 ஆவது முறையாக பா.ஜ.க சார்பில் களமிறங்கி உள்ள பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் பெற்றுள்ளார்.

தொடக்கத்தில் சில சுற்றுகளில் பின்தங்கிய பிரதமர் மோடிநேற்றுக் காலை 21,629 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தார்.

அவரை எதிர்த்துக் களமிறங்கிய காங்கிரசின் அஜய்ராய், 63,523 வாக்குகள் பெற்றுள்ளார்.

அதேபோல் குஜராத் மாநிலம் காந்தி நகரில் போட்டியிட்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும், 2,09,736 வாக்குகள் பெற்றுள்ளார். அவர் 1,67,094 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார்.

# ஸ்மிருதி இரானியை வியூகம் வகுத்து படுதோல்வியடைய வைத்த ராகுல்!



இந்திய லோக்சபா தேர்தலில் அமேதி தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் ஸ்மிருதி இரானி படுதோல்வி அடைந்துள்ளார். அமேதி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் கிஸோரி லால் 368487 வாக்குகள் பெற்றுள்ளார். அமேதி பாஜக வேட்பாளர் ஸ்மிருதி இரானி 68829 வாக்குகள் பெற்றுள்ளார்.

அமேதி மக்களவைத் தொகுதியானது, திலோய், சலோன், ஜகதீஷ்பூர், கௌரிகஞ்ச் மற்றும் அமேதி ஆகிய ஐந்து சட்டமன்ற தொகுதிகளைக் கொண்டுள்ளது. இது பாரம்பரியமாக காங்கிரஸ் கட்சியின் தொகுதி ஆகும். 1967_ 1971 வரை இங்கே காங்கிரஸ் எம்பி இருந்தார். 1981_ 1996 வரை மீண்டும் காங்கிரஸ் இருந்தது.

அதேபோல் 1999_ 2014 வரை மீண்டும் இங்கே காங்கிரஸ் இருந்தது. இங்கே 2004_ 2014 வரை காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி எம்பியாக இருந்தார். இந்த நிலையில் கடந்த லோக்சபா தேர்தலில் இங்கே ராகுல் காந்தியை பா.ஜ.கவின் ஸ்மிருதி இரானி வீழ்த்தினார். இந்த நிலையில் தான் 2024 லோக்சபா தேர்தலில் உத்தரப்பிரதேசத்தின் ரேபரேலி, அமேதி ஆகிய நேரு இந்திரா குடும்பத்தின் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை காங்கிரஸ் மேலிடம் அறிவிக்காமலேயே இழுத்தடித்து வந்தது. இதனை பா.ஜ.க அரசியல் ஆதாயத்துக்காக கையில் எடுத்தது.

இங்கே பலரின் பெயர்கள் சுற்றி வந்தன. ஏன் ராகுல் கூட மீண்டும் அமேதியில் போட்டியிடுவார் என்று கூறப்பட்டது. ஆனால் அதிரடியாக ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தியும் அமேதியில் கே.எல் ஷர்மாவும் களமிறங்கினர். ராகுல் காந்தியின் இந்த தடாலடி வியூகமானது பா.ஜ.கவினரை 'வாயடைக்க' வைத்திருக்கிறது என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

முக்கியமாக ஸ்மிர்தி இராணியை நான் எதிர்க்க வேண்டியது இல்லை. கட்சி தொண்டர் கே. எல். ஷர்மா போதும். அவரே உங்களை வீழ்த்துவார். நான் உங்களுக்கு போட்டியில்லை.. மோடிக்குத்தான் போட்டி என்று ராகுல் காந்தி ஸ்மிருதி இரானியிடம் சொல்லாமல் சொல்லி கே. எல். ஷர்மாவை களமிறங்கினார்.

ராகுல் போட்டியிடுவார். அதை வைத்து நான் பெரிய ஆள் என்று சொல்ல ஸ்மிருதி இரானி நினைத்தார். ஆனால் நேரு குடும்பத்தின் மிக நெருக்கமான விசுவாசமான கே.எல். ஷர்மாவை களமிறக்கியிருக்கிறார் ராகுல் காந்தி. இந்த நிலையில்தான் 2024 லோக்சபா தேர்தலில் அமேதி தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் ஸ்மிருதி இரானி படுதோல்வியை அடைந்து இருக்கிறார்.

# ஆந்திராவில் ஆட்சியைக் கைப்பற்றிய சந்திரபாபு நாயுடுவுக்கு மோடி வாழ்த்து



ஆந்திராவில் ஆட்சியைக் கைப்பற்றிய சந்திரபாபு நாயுடுவுக்கு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலுடன் சிக்கிம், ஒடிசா, ஆந்திர பிரதேசம், அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு சட்டப்பேரவை தேர்தல் நடைபெற்றது. ஆந்திர மாநிலத்தின் ஒரே கட்டமாக சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் கடந்த மே 13 ஆம் திகதி நடைபெற்று முடிந்தது. இந்தத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக, பவன் கல்யாணின் ஜன சேனா, சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சிகளும் எதிர்த்து தனித்து போட்டியிட்டுள்ளன.

தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன. இதில் மொத்தம் உள்ள 175 தொகுதிகளில் 131 இடங்களில் தெலுங்கு தேசம் முன்னிலை வகிக்கிறது. வை.எஸ் ஆர் காங்கிரஸ் 16 இடங்களிலும், பா.ஜ.க 7 இடங்களிலும், மற்றவை 20 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன. இதில் பெரும்பான்மை பெற்று தெலுங்கு தேசம் ஆந்திராவில் ஆட்சி அமைக்கிறது. தமிழகத்தை ஒட்டியுள்ள குப்பம் தொகுதியில் 8 ஆவது முறையாக சந்திரபாபு நாயுடு தேர்வாகினார்.

ஆந்திராவின் முதலமைச்சராக சந்திரபாபு நாயுடு 4 ஆவது முறையாக பதவியேற்கிறார். அவர் வருகின்ற 9 ஆம் திகதி முதலமைச்சராக பதவியேற்பார். இந்நிலையில், ஆந்திராவில் ஆட்சி அமைக்க உள்ள சந்திரபாபு நாயுடுவை தொலைபேசியில் அழைத்து பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் சந்திரபாபு நாயுடுவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் கால்பதித்தது பா.ஜ.க



கேரளாவின் திருச்சூர் தொகுதியில் நடிகர் சுரேஷ் கோபி வெற்றி பெற்றதன் மூலம் பா.ஜ.க அங்கு கால்பதித்துள்ளது. கேரளாவில் மொத்தம் உள்ள 20 மக்களவை தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக ஏப்ரல் 26 ஆம் திகதி தேர்தல் நடந்தது. ஐக்கிய ஜனநாயக முன்னணி சார்பில் காங்கிரஸ் 16 தொகுதிகளில் போட்டியிட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் பா.ஜ.க 16 தொகுதிகளில் போட்டியிட்டது.

இந் த நிலையில் நேற்றைய தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகளின் படி, காங்கிரஸ் தலைமையிலான யூ.டி.எப் 17 தொகுதிகளில் முன்னிலை வகித்தது. இதில் காங்கிரஸ் மட்டும் 13 இடங்களிலும், ஐயுஎம்எல் கட்சி இரண்டு இடங்களிலும், கேரளா காங்கிரஸ் ஒரு இடத்திலும், ஆர்எஸ்பி கட்சி ஒரு இடத்திலும் முன்னிலை வகித்தன.மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஒரு இடத்தில் முன்னிலை வகித்தது.பாஜக ஒரு இடத்தில் வெற்றி பெற்றது.

திருச்சூர் தொகுதியில் பாஜக வேட்பாளரும் நடிகருமான சுரேஷ் கோபி வெற்றி பெற்றுள்ளார்.

# மீண்டும் எம்.பியானார் கனிமொழி



தமிழகத்தில் 39 தொகுதிகளில் திமுக கூட்டணியும், பா.ஜ.க ஒரு இடத்திலும் முன்னிலை வகித்துள்ளன. திமுக கூட்டணி அதிகப்படியான இடங்களில் முன்னிலை வகித்து வருவதால் திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் திமுகவினர் பட்டாசு வெடித்து, இனிப்புகளைப் பகிர்ந்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் தூத்துக்குடியில் தி.மு.க வேட்பாளர் கனிமொழி வெற்றிமுகம் கண்டுள்ளார். ஏற்கனவே அவர் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வந்த நிலையில் தூத்துக்குடி மக்களவை தொகுதியில் 2,89,925 வாக்குகள் பெற்று தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளார்.

# ஆரோக்கியமான பிரபஞ்சத்திற்கு பயன்தரு நிலப் பயன்பாட்டை மேற்கொள்வோம்

## உலக சுற்றாடல் தினத்தையொட்டி வெளியாகும் கட்டுரை

உயிரினங்களில் மனித குலத்திற்கு விசேட இடம் கிடைப்பது அவர்களிடம் இருக்கும் அறிவு மற்றும் தொடர்பாடல் திறன் காரணமாகவாகும். அந்த சாத்தியக்கூறு காரணமாக இயற்கைக்கு சில மாற்றங்களை செய்யும் திறன் அவர்களுக்கு உள்ளது. தொழில் புரட்சி காரணமாக மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் தேர்ச்சி அறிவு காரணமாக சுற்றுச்சூழல் விரைவான மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. உலக மக்கள் தொகை வளர்ச்சி, நகரமயமாதல் மற்றும் தொழில்மயமாக்கலுடன் இணைந்து உலகளாவிய ரீதியில் சூற்றுச்சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கடந்த நூற்றாண்டுக்குள் மக்கள் தொகை மற்றும் தொழில்துறையும் இணைந்து வளர்ச்சி பெற்றபோதும், அந்த இரண்டு சமநிலை இல்லாததன் காரணமாக பூமியின் வடக்கு மற்றும் தெற்கு எல்லைகளை கடந்து சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. அதன் விளைவை நாம் இன்று அனுபவிப்பதோடு உலகின் பல நாடுகளும் இந்தப் பிரச்சினைகள் காரணமாக ஒருவருக்கு ஒருவர் குற்றம்சாட்டிக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இன்றாகும்போதும் சுற்றாடல் மற்றும் மனிதன் முரண்பட்டுச் செல்லும் பிரச்சினைக்கு காரணமாகியுள்ளது. உதா:- சுனாமி, கடும் புயல், வெள்ளம், கடும் வரட்சி நிலை.

அதன்படி எமக்கு அடைக்கலம் தந்து நிழல் கொடுத்த சுற்றுச்சூழல் எமக்கு எதிராக ஆயுதம் தூக்கி இருப்பது எம் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இந்த கடுமையான இயற்கை அனர்த்தங்களுக்கு உலகமே சிக்கி இருக்கும் இந்தக் காலத்தில் வெவ்வோறாக சிந்திக்காது ஒன்றிணைந்து செய்ய முடியுமான பணிகள் பலதாகும். இயற்கைக்கு எதிராகாது அந்த போராட்டத்தில் சிறிதேனும் வெற்றி கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அவ்வாறான சுற்றுச்சூழல் சவால்களுக்கு பதில் அளிக்கும் வலுவான அடித்தளம் கிடைப்பது 1972ஆம் ஆண்டு ஜூன் 05 முதல் 16 வரை சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் இடம்பெற்ற மனித இடைச்செயற்பாடுகளுடன் சுற்றுச்சூழலை ஒன்றிணைக்கும் பேச்சுவார்த்தை மூலமாகவாகும்.

அதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1974ஆம் ஆண்டு ஒன்றிணைந்த பூமி என்ற தொனிப்பொருளின் கீழ் முதலாவது உலக சுற்றாடல் தினம் ஐக்கிய நாடுகளின்

வொஷிங்டன் நகரில் நடத்தப்பட்டது. அதன்பின் பல்வேறு நாடுகளின் அனுசரணை மற்றும் பல்வேறு தொனிப்பொருளின் கீழ் பல தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் உலக மக்களை அறிவூட்டுவதற்கு நாளுக்கு நாள் எழுந்துள்ள உலகளாவிய சுற்றாடல் சிக்கல் தொடர்பில் உலகத் தலைவர் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் அவதானத்தை செலுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டிலும் விசேட தொனிப்பொருளின் கீழ் சர்வதேச சுற்றாடல் தினம் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் திட்டத்தினால் இந்த ஆண்டில் சர்வதேச சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருளாக Land Restoration, Desertification and Drought Resilience என்பது உள்ளது. அதன்படி பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம் என்ற தேசிய தொனிப்பொருளின் கீழ் இலங்கையில் நாம் பெருமையுடன் அன்றைய தினத்தை கொண்டாடுவதற்கு தயாராகி வருகிறோம்.



மனித செயற்பாடுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் காரணமாக ஏற்படுகின்ற பாலைவனமாதல், நிலச் சிதைவு மற்றும் வரட்சி உலகின் அனைத்து மனிதனுக்கும் தாக்கம் செலுத்துகின்ற அமைதியான மற்றும் கண்ணுக்குப் புலப்படாத பிரச்சினை ஒன்றாக மாறியுள்ளது. அதனால் இன்றைய தினத்தில் எமது ஒன்றிணைவாக இருக்க வேண்டியது நிலச் சிதைவை தடுப்பது, அழிவுற்ற காணிகளின் மறுசீரமைப்புக்கு நடவடிக்கை எடுத்தல், அதன்மூலம் உயிர் பல்வகைமையை மேம்படுத்தல், அதேபோன்று சுற்றாடல் கட்டமைப்பின் மறுசீரமப்புக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதாகும்.

பாலைவனமாதல் பேண்தகு அபிவிருத்திக்கு தடங்கலாக இருப்பதோடு அது உலக பஞ்சம் அதிகரிப்பு, சுகாதார பிரச்சினைகள், உணவுப் பாதுகாப்பு இன்மை, நீர் பற்றாக்குறை, உயிர் பல்வகைமை பிரச்சினைகள் பலதுக்கும் ஆரம்பத்தை வழங்குகிறது. உலகில் இடம்பெற்றிருக்கும் இயற்கை அனர்த்தங்களை பார்க்கும்போது மனிதத் தாக்கம் காரணமாக ஏற்பட்ட நிலச் சிதைவு குறைந்தபட்சம் உலகெங்கும் 1.6 பில்லியன் ஹெக்டயர் அளவுக்கு தாக்கத்தை செலுத்துவதோடு உலகெங்கும் 3.2 பில்லியன் ஹெக்டயார் மக்களுக்கு நேரடியாக தாக்கத்தை செலுத்துகிறது. பாலைவனமாதலுக்கு எதிராக போராடுவது ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்திற்கு (UNCCD) அமைய உலகளாவிய ரீதியில் சிதைவுக்கு உள்ளான பூமியை மீளமைப்பதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பூளோத்திற்கு மூன்று பில்லியன் கார்பனை உறிஞ்ச முடியும். அதேபோன்று பூமி மீளமைக்கப்படுவதால் மனித குலம், பேண்தகு அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பு, தொழில் மற்றும் அனர்த்த அபாயம் குறைதல், சுற்றுச்சூழல் பயன்கள் மற்றும் மக்கள் சுகாதாரம் மேம்படும்.

உலக நில அளவில் மூன்றில் ஒன்று உள்ளடங்கும் உலர்ந்த நிலக் கட்டமைப்புகள், அதிக நுகர்வு மற்றும் தவறான நிலப் பயன்பாடு காரணமாக கடந்த பல தசாப்தங்களில் பாலைவனமாதல் பரப்பு மற்றும் தீவிரத்தன்மை அதிகரித்துள்ளது. 2050ஆம் ஆண்டாகும்போது வரட்சி காரணமாக உலக மக்கள் தொகையில் நான்கில் மூன்றுக்கு அதிக தாக்கம் ஏற்படக்கூடும் என முன்னறிவிக்கப்பட்டிருப்பதோடு தீவிர நீர் பற்றாக்குறை மக்களை சூழ்ந்துள்ளது. அதேபோன்று மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் கடல் மட்ட அதிகரிக்கும் சிக்கல் இத்துடன் இணைந்து வருகிறது.

உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சி இம்முறை சவூதி அரேபியாவில் நடத்தப்பட்டது.

இதன் இலங்கையின் பங்களிப்பு பயனுள்ள பூமியின் பயன்பாட்டின் மூலம் ஆரோக்கியமான இல்லம் என்ற தொனிப்பொருளின் சர்வதேச சுற்றாடல் வாரம் ஒன்றாக சுற்றாடல் அமைச்சு அதற்கு இணையாக மற்ற அரச மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் ஒன்றிணைந்து நடத்தப்படுகிறது. பூமி சிதைவை ஒழிப்பதற்கு எமது அமைச்சு பூமிச் சிதைவை ஒழிக்கும் சர்வதேச செயற்பாட்டு திட்டம் 2015/2024 இல் தயாரிக்கப்பட்டு குறித்த பங்குதார நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோன்று 2023 ஆகும்போது இந்நாட்டில் நிலச் சிதைவை மட்டுப்படுத்துவதற்கு இலக்குகளை தயாரிக்கும் செயற்பாடு ஐக்கிய நாடுகள் பாலைவனமாதலுக்கு எதிரான ஒப்பந்தத்தின் உதவியுடன் சுற்றாடல் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2030 ஆகும்போது அழிவுக்கு உள்ளாகி இருக்கும் காடுகளை மீளமைத்து காட்டுப் பகுதியை 32% வரை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கபடுகிறது.

இதற்காக சர்வதேச சுற்றால் தின கொண்டாட்ட நிகழ்ச்சிகள என்ற திட்டத்தின் கீழ் முன்வைக்கப்பட்டு ஒப்புதல் கிடைத்திருக்கும் அமைச்சரவை முடிவுக்கு அமைய சர்வதேச சுற்றாடல் தினம் தேசிய கொண்டாட்டத்திற்கு இணையாக தேசிய சுற்றாடல் வாரம் 2024 மே 30ஆம் திகதி தொடக்கம் ஜூன் 05ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டிருப்பதோடு, அந்த வாரத்தின் முக்கிய நாட்கள் பின்வருமாறு.

1. **மே 30 பேண்தகு காணி முகாமைத்துவ தினம்**
2. **மே 31 வளி மாசு மற்றும் அதன் பாதகமான தாக்கங்களை மட்டுப்படுத்தல் தினம்**
3. **ஜூன் 01 நீர் மற்றும் நிர் மூலங்களை பாதுகாத்தல் தினம்**
4. **ஜூன் 02 உயிர் பல்வகைமையை பாதுகாத்தல் தினம்**
5. **ஜூன் 03 சுற்றாடலை தூய்மைப்படுத்தும் தினம்**
6. **ஜூன் 04 பிளாஸ்டிக் கழிவுகள் முகாமைத்துவ தினம்**
7. **ஜூன் 05 மரம் நடுகை தினம்**

இதற்கு இணையாக தேசிய சுற்றாடல் வாரத்தில் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் துறை, பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தோட்டத் துறை, அரசு சாரா அமைப்புகள், சிவில் அமைப்புகளின் தலைமையில் மக்களிள் பங்கேற்புடன் சுற்றாடல் சகவாழ்வு நிகழ்ச்சிகள் பலதும் செயற்பட்டு வருகின்றன.

அது எப்படி இருந்தபோதும் கற்காலம் தொடக்கம் நவீன செயற்கை அறிவு வரை கால மாற்றத்திற்கு இடையே மனிதன் தமது பயண சகாவான சுற்றாடலில் இருந்து வேகமாக விலகி வருகிறது என்பது தெளிவான விடயமாகும். பௌதிக வாழ்க்கை எதிர்பார்ப்பில் சிக்கி இருக்கும் மனிதன் தமது பண்டைய வதிவிடமான காடு மற்றும் சுற்றுச்சூழலின் பெறுமதியை பொருட்படுதாதிருப்பது இந்த அனைத்து பேரழிவுகளுக்கும் காரணியாக உள்ளது.

அதனால், உலகளாவிய ரீதியில் சுற்றாடல் பாதுகாப்பு சவால்களை வெல்வதற்கு சர்வதேச செயற்பாடுகளுக்கு கைகோர்த்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் குடிமக்களாக எமது முக்கிய பங்கை அடையாளம் கண்டு சிந்தனை ரீதியான மாற்றம் ஒன்றின் மூலம் சுற்றாடல் பொறுப்புகளுக்காக தனி நபர்களாக தமது பங்கை நிறைவேற்றுவோம். அது பூமியின் நாளைய இருப்புக்கு நாம் இன்று எடுக்கும் சிறந்த படியாக இருக்கும்.

**கே.ஜீ.கே. ஹன்சனி**


**Repeat Your ad For Better Offers**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


## விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

(இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்)

**மாவட்ட செயலகம், காலி**

### காலி உணவட்டுனவிலுள்ள சிலோன் பிளாசா மற்றும் அருங்காடசியக கட்டிட புதுப்பித்தல் வேலை

1. கீழே விபரிக்கப்பட்டவாறு காலி, உணவட்டுன சிலோன் பிளாசா மற்றும் அருங்காட்சியக கட்டிடம் ஆகியவற்றின் புதுப்பித்தல் வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை காலி, மாவட்ட செயலக, மாவட்ட செயலாளரின் சார்பாக பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். இந்த வேலையானது விஷேட மின்சார கம்பி பதித்தல் மற்றும் கட்டிடத்தின் வரலாற்று பெறுமதிக்கு பொருந்தும் தன்மையிலான நிர்மாணம் ஆகியவற்றை உள்ளடக்கும். நிர்மாணக் காலப்பகுதியானது ஆரம்ப திகதியிலிருந்து 3 மாதங்கள் வரையிலான காலமாகும்.
2. கேள்விக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாக இருப்பதுடன் கட்டிட நிர்மாணத்தில் பின்வரும் சி-4 அல்லது சி-5 தரத்தில் ICTAD/CIDA தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கேள்விக் கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக் கோரல் மூலம் நடத்தப்படும். பெறுகையின் மொத்த ஆகுசெலவு மதிப்பீடானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 4/2016(ii) என்ற அரச நிதிச் சுற்றறிக்கையில் நிருணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
4. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
   i. நிர்மாண வேலைகளில் 5 வருட மற்றும் நிகரான தன்மையிலமைந்த ஆகக்குறைந்தது ஒரு கட்டிட செயற்றிட்ட அனுபவம்.
   ii. எந்தவொரு முற்பணக் கொடுப்பனவு நீங்கலாக ஆகக் குறைந்த காசுப் பாய்ச்சல் மற்றும் கடன் வசதிகளின் தொகையானது 6.7 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   iii. வர்த்தகப் பதிவு மற்றும் கம்பனிக் குறிப்புக்கள்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை காலி, மாவட்ட செயலக, மாவட்ட பொறியியலாளரிடமிருந்து (091-4944806) பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள கணக்கிடல் கிளையின் 2 ஆம் மாடியில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.06.05 ஆம் திகதியிலிருந்து 2024.06.26 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 8,750 ரூபாவை செலுத்திய பின்னர், காலி, மாவட்ட செயலக, மாவட்ட செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக் கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள கேள்விதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது காலி, மாவட்ட செயலகத்தின் 2 ஆம் மாடியின் சிறாப்பரிடம் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதாகும்.
7. கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியான மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், காலி என்ற முகவரியில் 2024.06.27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்வி மனுக்கள் சமுகமளித்திருக்கும் கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. தள விஜயமானது 2024.06.20 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு ஒழுங்கு பண்ணப்படும். தள விஜயத்தின் பின்னர் விரைவாகவே விலைமனு முன்னோடிக் கூட்டமானது காலி, மாவட்ட செயலக, மாவட்ட செயலாளரின் அலுவலகத்தின் 2 ஆம் மாடியில் அதே நாளில் நடைபெறும்.
9. கேள்வி மனுக்கள் 2024.09.26 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனு பாதுகாப்பானது விலைமனுவின் செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 நாட்கள் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். எனவே விலைமனு பாதுகாப்பானது 2024.10.24 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக் கோரல்களும் நிபந்தனையற்ற கோரிக்கை விலைமனுப் பாதுகாப்புடன் வழங்கப்பட வேண்டும். இது செல்லுபடியாகும் காலம் மற்றும் எழுத்துப்பூர்வமாக முதல் கோரிக்கையைப் பெற்றவுடன் உத்தரவாதத் தொகையை செலுத்துதல் ஆகியவற்றில் கொடுக்கப்பட்ட வடிவமைப்பிலிருந்து விலகிச் செல்லாமல் இருத்தல் வேண்டும். விலைமனு பாதுகாப்பான 334,000 ரூபாவானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு :

**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**காலி.**

**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலகம்,**
**காலி.**

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

**க.பொ.த. (உ/ தர)ப் பரீட்சை – 2023 (2024)**
**பெறுபேறு மீளாய்வு விண்ணப்பப்படிவம்**
**நிகழ்நிலை (Online) முறையில் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**
**(பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு)**

பெறுபேற்று மீளாய்வின்போது குறித்த விடைத்தாள் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பலரால் முழுமையாக பரிசீலிக்கப்படும். விடைத்தாள் மீளாய்வின் பெறுபேறாக Z புள்ளிகளில் அல்லது கிடைக்கப் பெற்றுள்ள தரங்களில் அதிகரித்தலோ அல்லது குறைதலோ ஏற்பட இடமுண்டு என்பதை பரீட்சார்த்திகள் அறிந்திருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

1. மேற்குறித்த பரீட்சையின் மீளாய்வுக்கு விண்ணப்பப்படிவங்கள் நிகழ்நிலையில் மாத்திரம் கோரப்படும்.
2. பாடசாலை பரீட்சார்த்திகள் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆகிய இருவகைப் பரீட்சார்த்திகளும் மீளாய்வுக்கு விண்ணப்பிக்கும் போது தாமே விண்ணப்பங்களை முன்வைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பம் கோரப்படுதலானது **2024.06.05** ஆம் திகதி ஆரம்பமாவதோடு **2024.06.19** ஆம் திகதி நிறைவடையும்.
4. மீளாய்வுக்காக விண்ணப்பிப்பதற்கு பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்
   - ❖ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (https://www.doenets.lk) இனுள் பிரவேசித்து 'Our Services' என்பதின் கீழ் உள்ள 'Exam Information Centre' இன் மீது Click செய்வதன் மூலம்
   - ❖ பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ நடமாடும் தொலைபேசி பிரயோகம் (Mobile Application) ஆன DoE இற்கு சென்று நிகழ்நிலை விண்ணப்பப்படிவம் 'Exam Information Centre' இன் மீது Click செய்வதன் மூலம்
   - ❖ https://onlineexams.gov.lk/eic இனுள் பிரவேசிப்பதன் மூலம்
5. **முறைமைக்குள் பிரவேசிக்கும்போது தாங்கள் (உ/தர) 2023(2024) பரீட்சைக்குத் தோற்றியபோது பயன்படுத்திய பரீட்சை சுட்டெண் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்துதல் வேண்டும். கணக்கொன்று இல்லை எனில் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளிட்டு கணக்கொன்றினை ஆரம்பித்துக் கொள்ளல் வேண்டும்.**
6. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்பாக Technical Instructions, Common Instructions அறிவுறுத்தல் வீடியோவைப் பார்த்தல் என்பன சரியான முறையில் படிவத்தை நிரப்புவதற்கு அத்தியாவசியமானதாகும்.
7. ஒரு பாடத்துக்கான மீள்பரிசீலனை செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ஆகும். தபால் அலுவலகத்திலோ அல்லது Credit card / Debit card மூலமோ பணத்தைச் செலுத்தலாம்
8. பணத்தைச் செலுத்திய பின்பு விண்ணப்பப்படிவத்தை PDF முறையில் பதிவிறக்கம் (Download) செய்யலாம் என்பதோடு அவ் விண்ணப்படிவத்தை தங்களது பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். பணத்தைச் செலுத்திய பின்பு தங்களது தொலைபேசி இலக்கத்துக்கு SMS செய்தி கிடைக்கப்பெறும்.
9. நீங்கள் பெறுபேறு மீளாய்வு செய்வதற்கு எதிர்பார்க்கும் சகல பாடங்களோடு மீளாய்வு விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட விபரங்களைச் சரியாகப் பூரணப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். உரிய பணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் எந்தவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களுக்கென செலுத்தப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.
10. பாட எண்: 12 – பொதுச் சாதாரணப் பரீட்சை பாடத்தில் 30 இற்குக் குறைவான புள்ளிகள் பெற்றதால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறாத விண்ணப்பதாரிகள் அப்பாடத்திற்கும் மீளாய்வுக்காக விண்ணப்பிக்க முடியும்.
11. இது தொடர்பான ஏதேனும் விசாரணைகள் தேவைப்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| **மதிப்பீட்டுக் (பாடசாலைகள் பரீட்சை) கிளை** | - 011 – 2785231 / 011 2785216 / 011 2784037 |
| **உடனடி அழைப்பிற்கு** | - 1911 |

பாடசாலைப் பரீட்சைகள் (மதிப்பீடு) கிளை,
தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்திரமுல்ல.
2024. 06.05 ஆம் திகதி.

**ஒப்பம்: H.J.M.C. அமித் ஜயசுந்தர**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

# கேள்விக்கான அழைப்பு

**வரையறுக்கப்பட்ட சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன கடன் வழங்கல் சங்கத்திற்கு Cloud Based ERP அமைப்பை வழங்குதல், ஸ்தாபித்தல், ஆர்வத்தை ஏற்படுத்துதல், செயற்படுத்திக் காட்டுதல், பயிற்சியளித்தல் மற்றும் பராமரித்தல்**

**ஒப்பந்த இலக்கம் : HDTS/ERP Software System/2024**

மேற்படி விடயமாக 2024 மே 15 புதன் தினகரன் பத்திரிகையில் 22ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுடன் சம்பந்தப்பட்டது. அந்த அறிவித்தலில் பந்தி இல. 4.1 இன் கீழ் குறிப்பிடப்பட்ட கேள்விகோரலுக்கு முன்னரான கூட்டம் 2024.05.30ம் திகதி நடைபெற்ற பின்னர் அதற்காக பங்குபற்றிய கேள்வி விண்ணப்பதாரர்களின் வேண்டுதல் மற்றும் இணைக்கப்பாட்டின் அடிப்படையில் கேள்வி ஆவணங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.06.14 பி.ப. 2.30 என திருத்தப்பட்டுள்ளதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

அதன் பிரகாரம் மேற்படி அறிவித்தலில் குறிப்பிடப்படும் விடயங்கள் கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாக இத்தால் மேலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- 5ம் பந்தியில் குறிப்பிடப்படும் கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2024.06.14 பி.ப. 2.30 என திருத்தப்படுகிறது.
- பந்தி இல. 06 இன் பிரகாரம் 2024.06.14 முதல் கேள்விகள் 104 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும் (90+14)
- பந்தி இல. 07 இன் பிரகாரம் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை 2024.06.14 முதல் 2024.09.27 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம்**
**37/36, பன்சல வீதி, கொழும்பு - 10,**
**2024.06.05ம் திகதி**

## பெயர் மாற்றம்

தக்வாநகர், மூதூர்-01, திருகோணமலை மாவட்டம் என்ற விலாசத்தில் வசித்து வரும் அலிஅக்பர் யாஸினா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை அலிஅக்பர் யாஸிரா என பெயர் மாற்றம் செய்வதோடு எனது சகல ஆவணங்களிலும் அலிஅக்பர் யாஸிரா என மாற்றம் செய்வேன் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பெயர் மாற்றம்

இல. 63எ, ஓடாவியார் வீதி, ஏறாவூர் - 2A என்ற முகவரியில் வசிக்கும் லோகநாதன் ஜிதுசன் தே.அ.அட்டை இல. 200511005430 கொண்ட நான் புனித இஸ்லாத்தை எனது சுயவிருப்பத்தில் தழுவி தற்போது எனது பெயரை L.உமர் என மாற்றி அழைக்கப்படுவதாக இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**L.உமர்**

**Repeat Your ad For Better Offers**

# திருத்தப்பட்ட அறிவித்தல்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

## அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்தல்

**ஒப்பந்த இலக்கம் - 2024/03**

2024 மே மாதம் 15 ஆம் திகதி தினமின, தினகரன் மற்றும் டேய்லி நியுஸ் பத்திரிகைகளில் வெளியான விலைமனு கோரல் அறிவித்தல்களில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறியத்தருகின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கணக்காளர் (வழங்கல்) தொலைபேசி இலக்கம் 0113070870 ஊடாக தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| ITB 23.1 | For bid submission purposes, the Purchaser's address is.<br>Address: Registrar General,<br>Supply Branch (Ground Floor),<br>Registrar Generals' Department,<br>234/A3, DenzilKobbakaduwa Mawatha,<br>Baththaramulla<br>The deadline for the submission of bids is<br>Date: 03rd July 2024<br>Time:02.00 p.m. |
| ITB 26.1 | The bid opening shall take place at:<br>Address: Registrar General,<br>Supply Branch (Ground Floor),<br>Registrar Generals' Department,<br>234/A3, Denzil Kobbakaduwa Mawatha,<br>Baththaramulla<br>Date: 03rd July 2024<br>Time: 02.00 p.m. |

விலைமனு முன் சந்திப்பொன்று 2024 ஜுன் 24 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களை 2024 ஜுலை 03 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை எழுத்து மூலமான கோரிக்கையையும் மீளளிக்கப்படாத ரூ.12,500.00 தொகையையும் செலுத்தி கொள்முதல் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். (கொடுப்பனவு காசாக செய்யப்படுதல் வேண்டும்.)

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல. 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

**ஊவா மாகாண சபை**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம்

பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை நிறைவு செய்வதற்காக நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் ICTAD (CIDA) பதிவைப் பெற்றுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டிரீதியில் கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

நிதி அமைச்சின் 4/2016(iii) சுற்றுநிருபத்தின் பிரகாரம் கேள்வி வழங்கப்படும்போது பிராந்திய முன்னுரிமை வழங்கப்படும்.

கேள்விகளைச் சமர்ப்பிக்க உத்தேசிக்கும் கேள்விதாரர்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கப்படும் கட்டணத்தை பதுளை, ரத்வத்த மாவத்தையில் அமைந்துள்ள மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி அந்த அலுவலகத்தில் பெறுகை மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ICTAD (CIDA) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளாகவில்லை என்பதற்கான சான்று ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மீளளிக்கப்படும் கேள்விப் பிணை முறிக்குப் பதிலாக அதன் இரு மடங்கு பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 60 நாட்கள் செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றை மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரின் பெயரில் பெற்று கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பிக்கலாம். இயைபுடைய நிபந்தனைகள் பெறுகை மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

5.0 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கேள்வித் தொகையைக் கொண்ட வேலைகளுக்கு கேள்விதாரரால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு நகல்களிலான கேள்விப் படிவங்களை 2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, ரத்வத்த மாவத்தை, பதுளை எனும் முகவரியைக் குறிப்பிட்டு மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நகல்பிரதிகள் மூலப்பிரதியின் புகைப்படப் பிரதிகளாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் கேள்விதாரரின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் | - | 2024-06-03ஆம் திகதி முதல் 2024-06-25ஆம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை |
| கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் | - | 2024-06-26ஆம் திகதி ந.ப. 12.00 மணி வரை |
| கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் | - | 2024-06-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். இதன்பொருட்டு தேவைப்படும் மேலதிக விபரங்களை பதுளை, ரத்வத்த மாவத்தையில் அமைந்துள்ள மாகாண விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்தில் அல்லது 055-2222311 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

கேள்விகளை கையளிக்கும் இறுதித் தீர்மானத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

| குறிப்பீட்டு இல. | வேலையின் பெயர் | பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் | பிரதேச செயலாளர் பிரிவு | இக்டாட் பழைய/ புதிய வகைப் படுத்தல் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை முறி ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| IRRUVA1 | கெமிதிரிய குளத்தை புனரமைத்தல் | புத்தள | வெள்ளவாய | C6 அல்லது C7 | 160,000.00 | 5000.00 | 150 நாட்கள் |
| IRRUVA2 | ஹெபொல அலிகந்துர கால்வாயை புனரமைத்தல் | பதுளை | ரிதிமாலியத்த | C7 அல்லது C6 | 85,000.00 | 5000.00 | 150 நாட்கள் |
| IRRUVA3 | உடவெலயாய கால்வாய் மற்றும் விவசாய பாதையைப் புனரமைத்தல் | பதுளை | ஊவா பரணகம | C6 அல்லது C5 | 163,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| IRRUVA4 | திவுரும்மடில்ல அணைக்கட்டு மற்றும் கால்வாயை புனரமைத்தல் | பதுளை | பதுளை | C7 அல்லது C6 | 70,000.00 | 5000.00 | 120 நாட்கள் |
| IRRUVA5 | பிஸ்ஸகம கால்வாயை புனரமைத்தல் | பதுளை | லுணுகல | C7 அல்லது C6 | 59,000.00 | 5000.00 | 150 நாட்கள் |
| IRRUVA6 | உடவெலயாய கால்வாய் மற்றும் விவசாய பாதையைப் புனரமைத்தல் | புத்தள | மொனராகல | C8 அல்லது C7 | 25,000.00 | 5000.00 | 120 நாட்கள் |

**ஜே.எம்.யூ.கே. ஜயசேக்கர,**
**செயலாளர் / பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாகாண விவசாய, நீர்ப்பாசன, விலங்கு உற்பத்தி மற்றும்**
**நன்னீர் மீன்பிடி விவகார அமைச்சு,**
**ரத்வத்த மாவத்தை, பதுளை.**
**2024-06-03.**

# பெறுகை அறிவித்தல்

**பேருவளை நகர சபை**

## பேருவளை நகர சபைக்குச் சொந்தமான ஆயுர்வேத கட்டிடத்தின் மிகுதி வேலையை பூர்த்தி செய்தல்

இங்கு கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள பழுதுபார்த்தல்களுக்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.06.27 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும் அன்றே (2024.06.27) மு.ப. 10.05 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

01. கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குறித்த படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையை செலுத்தி 2024.06.05 முதல் 2024.06.25 பி.ப. 3.00 வரை பேருவளை நகர சபை அலுவலகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அவை முறையாக பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியெனக் குறிப்பிட்டு வேறு வேறாக பொறியிட்டு ஒரு உறையில் இட்டு, பொறியிட்டு, செயலாளர் மற்றும் பேருவளை நகர சபையின் அதிகாரம், செயற்பாடுகள் அமுல்படுத்தும் அதிகாரி, பேருவளை நகர சபை" என்ற முகவரிக்கு 2024.06.27 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். இல்லையெனில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கடித உறையின் இடது மூலையில் செயற்றிட்டத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் போது குறித்த விண்ணப்பதாரியின் வெட்வரி பதிவு இருப்பின் அதனோடு சம்பந்தப்பட்ட இலக்கத்தை குறிப்பிடுதல் கட்டாயமாவதுடன், குறித்த சான்றிதழின் பிரதியையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. இச்செயற்றிட்டத்தின் நிர்மாண விடயங்கள் 75 நாட்களுக்குள் முடிக்கப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் CIDA நிறுவனத்தின் C6 அல்லது C5 பதிவு செயற்பாட்டு நிலையில் இருக்கும் ஒருவராக இருத்தல் வேண்டும். குறித்த விண்ணப்பதாரி அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
06. கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பதாரி தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணத்தின் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.
07. 2024.06.27 மு.ப. 10.05 இங்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மட்டும் சமுகமளிக்கலாம்.
08. மேலதிக விபரங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகளை இவ்அலுவலகத்தில் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.
09. பெறுகைச் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தொ.பே.இல. 0342276375 / 0342277850

**அட்டவணை**

| தொடர் இல | செயற்றிட்டப் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர படிவக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | பேருவளை நகர சபைக்குச் சொந்தமான ஆயுர்வேத கட்டிடத்தின் மிகுதி வேலைளைப் பூர்த்தி செய்தல் | 11,567,655,72 (வெட் இன்றி) | 10,000.00 | 115,000.00 |

2024.06.03ம் திகதி பேருவளை நகரசபை அலுவலகத்தில்,

**ஆர். யூ. டபிள்யூ குணவர்தன,**
**செயலாளர் மற்றும் பேருவளை நகர சபையின் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பேருவளை நகரசபை**










## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் | செயற்றிட்டத்தின் பெயர் | இடைநிகழ்வுகள் நீங்கலான பொறியியலாளரின் மதிப்பீடு. SSCL மற்றும் பெசேவ (மில்லியன் ரூபாவில்) | விலைமனு பாதுகாப்பு ரூபாவில் (செல்லுபடியாகும் திகதி) | நெடுஞ் சாலையின் பதிவுத் தரம் | நிர்மாணக் காலம் (நாட்காட்டி நாட்களில்) |
|---|---|---|---|---|---|
| RDA/EE/BT/RMTF/2024/01 | BTT வீதியின் 16+000 கிமீ இலிருந்து 78+000 கிமீ வரை rectification of shoulder | 3.849 | 40,000 (15.09.2024) | சி-8 மற்றும் சி-7 | 60 |
| RDA/EE/BT/RMTF/2024/02 | MHT வீதியின் 109+000 கிமீ இலிருந்து 129+000 கிமீ வரை construction of shoulder | 3.790 | 40,000 (15.09.2024) | சி-8 மற்றும் சி-7 | 60 |
| RDA/EE/BT/RMTF/2024/03 | BTT வீதியின் 0+000 கிமீ இலிருந்து 16+000 கிமீ வரையும் பார் வீதியில் 2+850 இலிருந்து 4+670 கிமீ வரையும் rectification of shoulder | 3.764 | 40,000 (15.09.2024) | சி-8 மற்றும் சி-7 | 60 |
| RDA/EE/BT/RMTF/2024/04 | CRWB வீதியின் 392+600 கிமீ இலிருந்து 420+000 கிமீ வரை rectification of shoulder | 3.856 | 40,000 (15.09.2024) | சி-8 மற்றும் சி-7 | 60 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.06.05 ஆம் திகதியிலிருந்து 2024.06.12 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பொறியியலாளர் ஏ. லிங்கேஸ்வரன்,**
**நிறைவேற்று பொறியியலாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**மட்டக்களப்பு.**

---

CSIAP THE WORLD BANK

# பிழைதிருத்தம்

## கேள்விக்காகன அழைப்பு - இலங்கை சனநாயகக் சோஷலிசக் குடியரசு விவசாய அமைச்சு

**பிரதி செயற்றிட்ட பணிப்பாளர் பணிமனை வடமேல்**
**காலநிலை இசைவாக்க, நீரப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**
**செயற்றிட்ட அடையாளம் : P163742**

**(தேசியபோட்டி கேள்விகோரல்)**

01. மேற்படி தலைப்பின் கீழ் 2024 மே 17ம் திகதி தினகரன் பத்திரிகையின் 23ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் கீழ்க்காணுமாறு டாபொலின் அலகு அளவு 20X18 அடியாக மாற்றப்படுவதுடன் கேள்வி திறக்கப்படும் தினம் 2024 ஜூன் 13ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்பு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களும் மாற்றமின்றி காணப்படும்.

| Contract No | Description of Goods | | Non-refundable Fee (LKR) | Bid Security | |
|---|---|---|---|---|---|
| | | | | Value in (LKR) | validity Date up to |
| LK-MOA-415202-GO-RFB/NWP/ | Procurement of 500 Nos of Tarpaulin (20ft*18ft) to PSs under the product quality management program in North Western Province | | 2500.00 | 125,000.00 | Up to 06th September 2024 |
| | Lot 01. Tarpaulin (20ft X18ft) | 500 Nos | | | |

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**பெறுகைக்குழு,**
**பிரதி செயற்றிட்டப பணிப்பாளர் பணிமனை - வடமேல்,**
**காலநிலைக்கு இசைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**இல. 51, மிஹிந்து மாவத்த, யக்கபிட்டிய வீடமைப்பு, குருநாகல்.**
**திகதி : 03.06.2024**

---

CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
## கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்

**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)**
**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) - உலக வங்கி விவசாய அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) கிரயச் செலவிற்காக 125 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான கடன் தொகையொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, வடமேல் சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா மில்லியனில்) (வரிகள் மற்றும் அவசரச் செலவுகள் தவிர்த்து) | CIDA தரப் பதிவு - நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைமனுப் பிணை முறி பெறுமதி (இல. ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-415201-CW-RFB- | NWP - CSIA திட்டத்தின் கீழ் யாய 29 முதல் தம்மிட்டகம 3 கி.மீ. கிராமிய வீதியை மேம்படுத்துதல் (லொட் 4) | 04.20 | C9, C8 அல்லது C7 (பெருந் தெருக்கள் நிர்மாணம்) | 3,500.00 | 40,000.00 2024 செப்டெம்பர் 27ஆம் திகதி வரை |
| 02 | | NWP - CSIA திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் குருக்கெட்டியாவ முதல் சந்தனன்குளம வரையான 2 கி.மீ. வீதியை மேம்படுத்துதல் | 03.60 | C9, C8 அல்லது C7 (பெருந் தெருக்கள் நிர்மாணம்) | 3,500.00 | 35,000.00 2024 செப்டெம்பர் 27ஆம் திகதி வரை |

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் முறையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை குருநாகல், யக்காபிட்டிய வீடமைப்பு, இல. 51, மிஹிந்து மாவத்தை, காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமேல் மாகாணம்), பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: **037-2227950**, தொலைநகல்: **037-2227950**, மின்னஞ்சல்: **dpdcsiapnwp@gmail.com**) மற்றும் அதே இடத்தில் 2024 ஜூன் 05ஆம் திகதி முதல் 2024 ஜூன் 25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெருந்தெருக்கள் நிர்மாணத் துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்களின் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. தகுதியுள்ள விலைமனுதாரர்கள்' 2024 ஜூன் 05ஆம் திகதி முதல் 2024 ஜூன் 25ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்கூறப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஜூன் 18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவ விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
03. விலைமனுக்களை 2024-06-05ஆம் திகதி முதல் 2024-06-19ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் தென் மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேலதிக தகவல்களை 091- 4941472 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-06-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்), தென் மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகம், கோட்டை, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. விலைமனுக்கள் 2024-06-20ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தென் மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகத்தில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

06. விலைக்கோரல் பிணை முறியாக இலங்கையின் வர்த்தக வங்கியொன்றில் ''பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்), தென் மாகாணம்'' எனும் பெயருக்கு பெறப்பட்ட 2024-06-19ஆம் திகதி முதல் 2024-10-15ஆம் திகதி வரை செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறி அல்லது தென் மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகத்திற்கு ரொக்கப் பணமாக செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி நிராகரிக்கப்படும்.

07. விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் 91 நாட்களாகும்.

08. சமர்ப்பிக்கப்படும் வேலைக்கு இயைபான விலைமனுக்களை ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவைகளை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மாத்தறை மாவட்ட பொறியியல் (கட்டிடங்கள்) அலுவலகத்தை நிர்மாணித்தல் - IIIஆம் கட்டம்'' எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

09. விலைமனுக்கள் விலைமனு ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மதிப்பிடப்படும். குறைபாடுகளுடன் கூடிய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண பொறியியல் சேவைகள் அலுவலகம்,**
**கோட்டை, காலி.**
**2024-06-05.**

### அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## மாவட்டச் செயலகம் – மொனராகலை

### பெறுகை அறிவித்தல்

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மொனராகலை மாவட்டச் செயலக பெறுகைக் குழுவின் தலைவரால் 2024 ஜூன் மாதம் 26ஆந் திகதி பி.ப. 02.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். நிர்மாணத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை, கேள்விதாரர்களின் தகைமை மற்றும் நிர்மாணக் காலம் எனபன அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- ❖ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கேள்வி வைப்பை மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட கேள்வி மாதிரிப் படிவத்தில் தயாரித்து பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை முத்திரைக் குறி பொறித்து நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்டச் செயலக கணக்காளரின் உததியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.
- ❖ 2024-06-05ஆம் திகதி முதல் 2024-06-25ஆம் திகதி வரை கேள்வி மாதிரிப் படிவங்களை சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 வரையான காலத்தில் மாவட்டச் செயலக கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ சாதாரண கடமை நேரங்களில் மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- ❖ பெறுகை முன்னோடிக் கூட்டம் 2024-06-19ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மாவட்டச் செயலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ❖ அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், மொனராகலை" எனும் முகவரிக்கு பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியொன்றை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதியை மொனராகலை மாவட்டச் செயலகத்தில் ரொக்கப் பணமாகவும் வைப்புச் செய்யலாம்.
- ❖ தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படுவர்.
- ❖ தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.
- ❖ கேள்விப் படிவங்கள் கோரப்பட்டு முடிவடைந்த உடனடுத்து, அதாவது 2024 ஜூன் மாதம் 26ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதிக்கு இடமளிக்கப்படும்.
- ❖ கேள்விப்படிவத்தின் சகல பக்கங்களும் கேள்விதாரரினால் ஒப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறித்திருத்தல் வேண்டும்.
- ❖ அபகீர்த்தியாளர் பட்டில்படுத்தப்பட்டவர்களுக்கு கேள்விகளைச் சமர்ப்பிக்க முடியாது.
- ❖ ஒப்பந்தத்தை வழங்கப்பெறுதலுக்குரித்தான விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவைச் சார்ந்தது. மேலதிக விபரங்களை 055-2276067 / 055-2276234 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மாவட்டச் செயலகத்தின் கணக்கிடல் பிரிவில் விசாரித்தறியலாம். அதேபோல் கேள்விப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்திக்கொள்வதற்கு 055-2276234 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மாவட்டப் பொறியியலாளரைத் தொடர்புகொள்ளலாம்.

**அட்டவணை**

| தொடர்பு இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் மற்றும் ஒப்பந்தக் காலம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூபா) (வெட் சகிதம்) | கேள்விப் பிணை முறி (ரூபா) (செல்லுபடிக் காலம்) | பொருத்தமான தரம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| MO/DS/ ENG-B/C/2024/03 | சியம்பலாண்டுவ (கொட்டியாகல) மெ.வோ. 100 சூரிய மின்சக்தி உற்பத்தியக செயற்றிட்ட இடப்பரப்பின் பிரவேச வீதியை அபிவிருத்தி செய்தல் (120 நாட்கள்) | 121.9 மில்லியன் | 1,220,000.00 2024-10-22ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். | வீதி நிர்மாணம் C4 அல்லது அதற்கு மேல் | 23,500.00 |

**ஆர்.எம். பசன் எஸ்.பீ. ரத்நாயக்க,**
**மாவட்டச் செயலாளர் / அரச அதிபர்,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு.**
**மாவட்டச் செயலகம்,**
**மொனராகலை.**

# பெறுகை அறிவித்தல்

## கல்பிட்டி பிரதேச சபை

**கல்பிட்டி பிரதேச சபையினால் பின்வரும் வேலை விடயங்களை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| தொ. இல. | வேலை விடயம் | வேலை பெறுமதியின் சராசரி மதிப்பீடு (ரூ. மில்.) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப் படும் விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | ஒப்பந்தப் பதிவுப் பெறுமதி | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | தொரயடிய உள் வீதியை அபிவிருத்தி செய்தல் | 21.72 | 5,000.00 | 218,000.00 | C4, C3 | 04 |
| 02 | கல்பிட்டி உச்சமுனை வீதியை அபிவிருத்தி செய்தல் | 20.77 | 5,000.00 | 208,000.00 | C4, C3 | |
| 03 | சேத்தவாடிய வீதியை அபிவிருத்தி செய்தல் (டானியா ஹோட்டல் வீதி) | 13.99 | 5,000.00 | 140,000.00 | C5, C4 | |
| 04 | கந்தகுளிய குடாவ பீச் வீதியை அபிவிருத்தி செய்தல் | 7.62 | 5,000.00 | 77,000.00 | C5, C6 | |

1. 2024-06-01ஆம் திகதி முதல் 2024-06-25ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 08.30 மணி முதல் பி.ப. 03.00 மணி வரை மேற்கூறிய வகையில் கட்டணத்தைச் செலுத்தி கல்பிட்டி பிரதேச சபை பிரதான அலுவலகத்திலிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. சகல விலைமனுதாரர்களும் இந்த வேலைக்காக மேற்கூறிய விலைக்கோரல் பிணை பெறுமதிக்கு இயைபான அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை 2024-06-01ஆம் திகதி முதல் 2024-08-15ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ''செயலாளர், பிரதேச சபை, கல்பிட்டி'' பயன்பெறுநராக பெயரிட்டு பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றின் மூலம் அல்லது குறித்த வேலையின் பெயரில் விலைக் கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாக கல்பிட்டி பிரதேச சபைக்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. இந்த வேலைகள் தொடர்பான விபரங்களை கல்பிட்டி பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது 0322260274 / 032260275 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக அலுவலக நேரத்தினுள் விசாரித்தறிந்து கொள்ளலாம். தேவையானவர்கள் வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-06-26ஆம் திகதி பி.ப. 03.00 மணி அல்லது அதற்கு முன் கல்பிட்டி பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் வேலைக்கு இயைபான நகல் பிரதியை வேறொரு உறையில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2024-06-26ஆம் திகதி பி.ப. 03.00 மணிக்கு கல்பிட்டி பிரதேச சபை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கல்பிட்டி பிரதேச சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-6-18ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு கல்பிட்டி பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் இடம்பெறும்.
8. சகல விலைமனுக்களும் 2024-06-26ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. இது தொடர்பில் கல்பிட்டி பிரதேச சபையினால் 2024-05-28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை பத்திரிகை விளம்பரம் இரத்துச் செய்யப்படுகின்றது.

**மங்கள ராமநாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, கல்பிட்டி.**
**2024-06-01.**
**Gmail: kalpitiyaps@gmail.com**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

### மழைநீரை சேகரிப்பதற்காக 165 எண்ணிக்கையுள்ள 5000 லீற்றர் பிளாஸ்டிக் நீர் தாங்கிகள் மற்றும் வடிகட்டிகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

**(மொனராகல, ஹம்பந்தொட்ட, நுவரெலிய, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் புத்தளம் மாவட்டங்கள்)**

**Contract No.: MWS&EID/WT/5000L/DEV/RAIN WATER/II/2024**

1. புகழ்வாய்ந்த பதிவு பெற்ற உற்பத்தி செய்யும் கம்பனிகள்/ புகழ்வாய்ந்த தயாரிப்பாளர்களின் முகவர்கள் அல்லது வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை மூடும் திகதியாகிய 2024.06.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் மொனராகல, ஹம்பந்தொட்ட, நுவரெலிய, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் புத்தளம் மாவட்டங்களில் மழைநீரை சேகரிப்பதற்காக 165 எண்ணிக்கையுள்ள 5000 லீற்றர் பிளாஸ்டிக் நீர் தாங்கிகள் மற்றும் வடிகட்டிகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, 'லக்திய மெதுர', 35 ஆம் இலக்கத்திலுள்ள நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. பெசேவ நீங்கலாக உறுதிப்படுத்தப்படாத மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவானது 21 மில்லியன் இலங்கை ரூபா என்பதுடன் ஒப்படைக்கும் கால எல்லையானது 45 நாட்களாகும்.
3. 2024.06.25 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 5000 ரூபா மற்றும் பொருந்தக்கூடிய பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, 'லக்திய மெதுர', 35 ஆம் இலக்கத்திலுள்ள நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் 2 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் கேள்வி ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ளன.
4. இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, ''லக்திய மெதுர'', 2 ஆம் மாடி, நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் பெறுகைப் பிரிவில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். மேலும் ஆவணங்கள் உங்கள் வியாபார தலைப்புக் கடிதத்தினூடாகஒப்பந்த பதிவுச் சான்றிதழுடன் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் கோரிக்கையானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. விலைமனுதாரர் இத்தொழிலில் ஆகக் குறைந்தது இரு வருட அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் 165 எண்ணிக்கையான 5000 லீற்றர் பிளாஸ்டிக் நீர் தாங்கிகள் மற்றும் வடிகட்டிகளை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அமைவிடங்களில் இலவசமாக வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் வேண்டும்.
6. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவிருத்தல் வேண்டும்.
7. மாற்று வழியான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் பணிப்பாளர் (பெறுகை), பெறுகைப் பிரிவு, 2 ஆம் மாடி, நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, இல. 35, 'லக்திய மெதுர , புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல, இலங்கை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.
9. அனைத்து கேள்வி ஆவணங்களும் 200,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பாதுகாப்பொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனு பாதுகாப்பானது 2024.09.12 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, 'லக்திய மெதுர' 35 ஆம் இலக்கத்திலுள்ள நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் பெறுகைப் பிரிவின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
11. மேலதிக விபரங்களுக்கு, 94-11-2177232 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது 94-11-2141229 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக இலங்கை, பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, 'லக்திய மெதுர' 35 ஆம் இலக்கத்திலுள்ள நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்திக்கான பணிப்பாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். இக்கடிதத்தை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை அறிவிக்கவும்.

**செயலாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு.**



## வரையறுக்கப்பட்ட இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு பராமரிப்பு பண்ணைகள் கூட்டுறவு சங்கம்

### 115/B - மினுவங்கொட வீதி, கனுவன, ஜாஎல

### பண்ணை விலங்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024/2025

வரையறுக்கப்பட்ட அகில இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் விலங்குப் பராமரிப்பு பண்ணைகள் கூட்டுறவுச் சங்கத்திற்கு பண்ணை விலங்குகளை கீழே காணப்படும் வகைப்படுத்தலின் பிரகாரம் தொடர்ந்து வழங்குவதற்கு தகைமையுள்ள வழங்குநர்கள் பதிவு செய்யப்படுகின்றனர்.

விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மற்றும் மாகாண கால்நடை மருத்துவ அலுவலகம் மற்றும் வதிவிட பண்ணைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

| விலங்கு வகைகள் | | வயது | குஞ்சுகளின் விலை |
|---|---|---|---|
| கோழிக்குஞ்சுகள் | நாட்டுக்கோழிக் குஞ்சுகள் | 02 வாரங்கள் | |
| | | 03 வாரங்கள் | |
| | | 04 வாரங்கள் | |
| | ஃபாம் கோழிக்குஞ்சுகள் (முட்டைக்காக) | ஒரு வயதுடைய | |

விலைமனுக்களுடன் கீழ்க்காணும் தகவல்களை இணைத்தல் வேண்டும்.

- கால்நடை மருத்துவ அலுவலகத்தின் பதிவுச் சான்றிதழ்
- வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ்
- இனப்பெருக்க நிலைய பதிவு செய்தற் சான்றிதழ்
- குஞ்சுகளுக்கான உத்தரவாத சான்றிதழ்/ உத்தரவாத காலம்
- ஊசியேற்றுதல் பற்றிய தகவல்கள்
- பெண் விலங்குகளின் விகிதாசாரம்
- இனப்பெருக்க நிலையத்தின் கொள்ளளவு
- வழங்கக்கூடிய விலங்குகளின் அளவு

இலக்கம் - 077 - 0757848 WhatsApp மூலம் அல்லது மேற்படி முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு வருகைதந்து பெற்றுக் கொண்ட விண்ணப்பத்துடன் கணக்கு இல. 0091130026 என்ற ஜாஎல இலங்கை வங்கிக் கிளைக்கு (மீளளிக்கப்படாத) ரூ.2000 தொகையைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்களை மேற்படி முகவரிக்கு சொந்தமான சங்க அலுவலகத்திற்கு 2024.06.18 பி.ப 2.30 இற்கு முன்பு அனுப்ப வேண்டியதுடன் கடித உறையின் மேல் மூலையில் "பண்ணை விலங்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

**கவனிக்கவும் :** கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024.06.18 பி.ப. 3.00 இற்கு மேற்படி முகவரி குறிப்பிடப்படும் அலுவலக வளாகத்தில் நடைபெறும். இறுதித்தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியது.

**செயலாளர்,**
**வரையறுக்கப்பட்ட அகில இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும்**
**விலங்கு பராமரிப்பு பண்ணைகள் கூட்டுறவுச் சங்கம்**

**தொ.பே. இலக்கம் : 077 - 0884640/ 077 - 0757848** **திகதி : 2024.06.04**

## கேள்வி அறிவித்தல்

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு பணிமனை

### API சேற்றுக் குழியில் குவிக்கப்பட்டுள்ள எண்ணெய் சேற்றை அகற்றல்

**(TENDER No.: PL/45/2024)**

இலங்கை, சப்புகஸ்கந்த, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் API சேற்றுக் குழியின் மசகு எண்ணெயின் அகற்றல் மற்றும் நீக்குவதற்காக எடுத்துச் செல்லல், களஞ்சியப்படுத்தல் மற்றும் அகற்றல் வகுதியின் கீழ் மத்திய சூழல் அதிகாரசபையின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுவானது கேள்விக்கோரல்களை இத்தால் அழைக்கின்றது.

ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கேள்வி ஆவணங்களில் கூறப்பட்டவாறான தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தலும் வேண்டும்.

கேள்வி ஆவணங்களை கையேற்கும் வேளையில் சுத்திகரிப்பு பணிமனையில் நிதித் திணைக்களத்திற்கு அனைத்து வரிகளும் அடங்கிய 10,000 ரூபாவை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக செலுத்தப்படல் வேண்டும். மதிப்பீட்டிற்காக பற்றுச்சீட்டின் பிரதியொன்று முன்வைப்புடன் இணைக்கப்படல் வேண்டும். இருப்பினும், **www.ceypetco.gov.lk** என்ற இணையதளத்தில் கேள்விதாரர்கள் மேலேயுள்ள கேள்வி ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

களனி, சப்புகஸ்கந்த, இபெகூ சுத்திகரிப்பு பணிமனை, பயிற்சி நிலையத்தில் 2024 ஜுன் 19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ள விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு தாம் சமுகமளிக்க வேண்டுமென்று அனைத்து கேள்விதாரர்களும் அல்லது அவர்களின் முறையாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளித்தல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களின் வழங்கும் இறுதி திகதி மற்றும் நேரம் ஆகியன 2024 ஜுன் 19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கென்பதுடன் முத்திரைகுறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களின் மூடும் திகதி மற்றும் நேரம் ஆகியன 2024 ஜுன் 28 ஆம் திகதியன்று மு.ப. 2 மணியாகுமென்பதுடன் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமையக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலங்கை, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பணிமனை, இபெகூ திட்டமிடல் திணைக்கள திட்டமிடலுக்கான பொறியியல் பிரதி முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி: 011 2400427/28/29, 0112401359, 011-77329963**
**தொலைநகல்: 011-2401359**
**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**சுத்திகரிப்பு பணிமனை,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**சப்புகஸ்கந்த, இலங்கை.**

## அறிவித்தல்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

2024.05.14 தினமின, தினகரன் மற்றும் டெயிலிநியுஸ் பத்திரிகைகளில் பிரசுரமான பத்திரிகை அறிவித்தல் பற்றியது. மோட்டார் வாகனங்கள் வீதி சட்டங்களை மீறும் வேலைகளில் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்காத குற்றங்களுக்கு அறவிடப்படும் தண்ட தொகை சேகரிக்கும் முறை மற்றும் சாரதிகளுக்கு பாதகமான புள்ளி முறையை செயற்படுத்துவதற்காக பரந்த இணைந்த இலத்திரனியல் தீர்வை செயற்படுத்தும் முறைக்காக கேள்வி ஆவணங்களை விநியோகிப்பதற்கு பொருத்தமான கேள்விதாரர் ஒருவரை தேர்ந்தெடுப்பதுடன் சம்பந்தப்பட்ட விலைமனுக்கோரல் என்ற அறிவித்தலில் கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி மற்றும் விலைமனுக்கள் திறக்கும் திகதி 2024.06.24 பி.ப.2.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மோட்டார் போக்குவரத்து திணைக்களம்,**
**இல.341, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 05**

## அறிவித்தல் - 2024

### நகராட்சி மன்றம் திருகோணமலை

திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கு சொந்தமான பின்வரும் சொத்து தனிநபர் முதலீட்டுடன் வருமானம் பெறும் நோக்கில் 05 வருடகால குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சொத்துக்களில் முதலீடு செய்து நகர சபையுடன் இணைந்து வருமானம் ஈட்டுவதற்கு முன்வருவோர் தங்களது சாத்திய வளமான கருத்திட்டத்தை எதிர்வரும் 26.06.2024 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக நகர சபையில் சமர்ப்பிக்கவும்.

தங்களது முன்மொழிவுகள் தொழில்நுட்ப குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டு குத்தகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

1. திருகோணமலை நகர கடற்கரைக்கு அருகே Dutch Bay பக்கமாக காணப்படும் 40 பேர்ச் நிலப்பரப்பைக் கொண்ட வெற்றுக்காணி (சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான செயற்றிட்டம்)

**வெ.இராஜசேகர்,**
**செயலாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**திருகோணமலை.**
**தொ.பே.இல 026-2222275-**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### கி.மீ. 1,500 வீதி செயற்திட்டத்திற்கான விலைமனுக்கோரல் (மேல் மாகாணம்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | பொறியியலாளர் களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/WP/KAL/156 | கலஹேன சோமசிரி கடை வீதியை கடந்து கட்டுஹேன வரையான வீதியை மேம்படுத்தல் | 26.35 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/KAL/187 | முங்ஹேன பன்னை முதல் அனந்தகம புது மெதுர வரையான வீதியை மேம்படுத்தல் | 25.56 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/KAL/201 | அம்பகஹகும்புர அமுஹேன பெப்பிலியாவத்த சுனாமி வீடுகள் மில்லகசுதுமுல்ல மற்றும் மினுவாங்கொட பாடசாலை வரை பெப்பிலியாவத்த வீதியை மேம்படுத்தல் | 38.68 | C5 மற்றும் C4 | 550,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/GAM/191 | பூகொட குமரிமுல்ல தேவாலயம் மற்றும் கிராமத்திற்கு உட்செல்லும் கரகல மாவத்தை வீதியை மேம்படுத்தல் | 27.38 | C5 மற்றும் C4 | 400,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/GAM/209 | புபுதுகம பிரதான வீதியை மேம்படுத்தல் | 59.60 | C4 மற்றும் அதற்கு மேல் | 850,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/COL/202 | மாலபல்ல மிஹிந்து மாவத்தை வீதியை மேம்படுத்தல் (Balance work) | 26.27 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |

இது மேற்குறிப்பிட்ட கொள்முதல் அறிவித்தலானது **2024.05.18** ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரத்தைக் குறிக்கிறது. அப்பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட மனுத் திறப்புக்கான திகதியானது **2024.06.13** ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மனு ஆவணத்தின் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை

கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் சார்பாக கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவரினால் அநுராதபுரம் விஜயபுர பிரதேச சபைக்குரித்தான நெலுபெவ ஜயபிம உற்சவ மண்டபத்திற்கு 36000 BTU 05 வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக செயற்படுத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப்பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.

04. நிறுவனப் பதிவைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அநுராதபுரம், விஜயபுர, கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து (தொலைபேசி: 025-2235581, தொலைநகல்: 025-2235581, மின்னஞ்சல்: nanupaprasa@mail.com) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-06-03ஆம் திகதி முதல் 2024-07-05ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரையில் மேற்கூறிய முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-07-05ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை அலுவலகத்தில் இடம்பெறும்.

07. அநுராதபுரம், விஜயபுர, கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-06-03ஆம் திகதி முதல் 2024-07-05ஆம் திகதி வரையில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

08. விலைமனுக்களை 2024-07-05ஆம் திகதி 13.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் அநுராதபுரம், விஜயபுர, கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவருக்கு நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு எதிர்பார்க்கும் விலைமனுதாரர்கள் அல்லது விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

09. நகல் பிரதிகளுடனான விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

10. விலைக்கோரல் பிணை முறி 90 நாட்கள் (2024-09-20) வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீட்டுத் தொகையின் 1% (ரூபா 50,000.00) விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை,**
**விஜயபுர - அநுராதபுரம்.**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Magazine Issued with Sunday Observer

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz



- Auto Focus
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk



# கொழும்பு கம்பன் கழகம் நடத்தும்

# கம்பன் விழா–2024

## புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரி இந்த ஆண்டு கம்பன் புகழ் விருது பெறுகிறார்

கொழும்பு கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக் கம்பன்விழா இம் மாதம் 14, 15, 16, 17ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கையில் கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 44 வருடங்கள் பூர்த்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு கம்பன் விழாவின் முதல்நாளான ஜுன் மாதம் 14 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு இராமகிருஷ்ண தோட்டம், இல. 11இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப் படமும், சீதா இராம விக்கிரகங்களும் இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கல இசையுடனும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய, மேலைத்தேய வாத்திய இசையுடனும், மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும், ஊர்வலமாக விழாமண்டபம் நோக்கி எடுத்து வரப்படவுள்ளன. இவ் ஊர்வலத்தில் நம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதரும் பிரமுகர்களும், இரசிகர்களும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்து வருகை தரவுள்ள அறிஞர்களும் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஊர்வலத்தைத் தொடர்ந்து மாலை 5.30க்கு அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் அபிராமி கயிலாசபிள்ளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்பு கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ. விஸ்வநாதன் தலைமையுரையையும் கொழும்பு கம்பன்கழகத் தலைவர் ஈ. கணேஷ் தொடக்க உரையையும் ஆற்றவுள்ளனர்.

### நூல் வெளியீடு

இவ்வாண்டுக் கம்பன் விழா திருநாள் மங்கலத்தன்று கம்பராமாயணச் செய்யுட்களின் முழுத்தொகுப்பு நூல் (பைபிள் தாளில் அச்சிடப்பட்டது) இரு பாகங்களாக வெளியிடப்படவுள்ளது. இந்நூலின் முதற்பிரதிகளை இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

### 'கம்பன் புகழ் விருது' பெறும் பிரபல எழுத்தாளர் சிவசங்கரி

அகில இலங்கைக் கம்பன் கழகம் உலகளாவித் தமிழ்ப்பணி செய்த சான்றோர் ஒருவருக்கு "கம்பன் புகழ் விருதினை" ஆண்டுதோறும் கொழும்பு கம்பன் விழாவில் வழங்கி வருகிறது. கடந்த ஆண்டுகளில் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, கவிக்கோ அப்துல் ரகுமான், இசை அறிஞர் ரி.என். சேஷகோபாலன், நாட்டியக்கலைஞர் பத்மா சுப்பிரமணியம், பேராசிரியர் ஒளவை நடராஜன், பேராசிரியர் சிலம்பொலி சு. செல்லப்பன், இசையரசி பம்பாய் ஜெயஸ்ரீ, பேராசிரியர் சாலமன் பாப்பையா, புகழ்பெற்ற பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் முதலியோர் இவ்விருதினைப் பெற்றுள்ளனர். 'வி. ரி. வி. பவுண்டேஷன்' நிறுவியுள்ள வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நினைவு அறக்கட்டளை வழங்கும் இக் 'கம்பன்புகழ் விருது' இவ்வாண்டு, புகழ்பெற்ற எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்படவுள்ளது. விருதுக் கேடயம், பொன்னாடை, பொற்கிழி ஆகியவற்றுடன் கூடிய ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியானதாக இவ்விருது அமையவுள்ளது. இவ்விருதினை, கம்பன் விழாவின் நிறைவு நாளன்று மாலை கழகப்பெருந்தலைவர் நீதியரசர் ஜெ. விஸ்வநாதன் எழுத்தாளர் சிவசங்கரி அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

### சான்றோர் கெளரவம் பெறும் நம்நாட்டுப் பெருமக்கள் அறுவர்

தம் செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டுதோறும் அகில இலங்கைக் கம்பன் கழகம் கௌரவித்து வருகிறது. அவ்வரிசையில் இவ்வாண்டு கௌரவத்துக்குரியவர்களாக, இலங்கையின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், என்பு அறுவை சிகிச்சை நிபுணர் டொக்டர் சண்முகம் ஸ்ரீதரன், தமிழ் அறிஞர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், வடமாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தத்தம் துறைசார்ந்து இப்பெரியோர்கள் நம் தேசத்திற்கும், இனத்திற்கும் தன்னலமற்று செய்த பெருந்தொண்டுக்காகவும் அவர்தம் துறைசார்ந்த ஆற்றலுக்காகவும் வழங்கப்படும் இவ்விருதுகள் ஈழத்தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படுகின்றன. இவ்விருதுக்கு உரியவர்களுக்கான கௌரவங்கள், விழாவின் இறுதி நாளில் சகல மரியாதைகளுடனும் வழங்கப்படவுள்ளன.

### அறக்கட்டளை விருதுகள்

கம்பன் விழாவில் வருடாந்தம் வழங்கவென அறக்கட்டளை விருதுகளை சிலர் ஏற்படுத்தியுள்ளனர். நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் அமரர் என். கருணை ஆனந்த சிறந்த அறிஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள 'நாவலர் விருது' இவ்வாண்டு அரிய பல நூல்களை வெளியிட்டுவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற 'சிவாலயம்' ஜெ. மோகனுக்கு (பொறியியலாளர்) வழங்கப்படுகிறது. தமிழ்நாடு திருக்குவளை இராமஸ்ரீனிவாசன் மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர், சிறந்த இசைக்கலைஞர் ஒருவருக்கு வழங்கவென நிறுவியுள்ள 'விபுலாநந்தர் விருது' இவ்வாண்டு புகழ்பெற்ற சங்கீத பூஷணம் பொன். ஸ்ரீவாமதேவனுக்கு வழங்கப்படுகிறது. கவிஞர் அமரர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான், ஈழத்துக் கவிஞர்களைக் கௌரவிப்பதற்காக நிறுவிய 'மகரந்தச் சிறகு' விருது இவ்வாண்டு இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான கவிஞர் மேமன்கவிக்கு வழங்கப்படுகிறது. புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனின் நினைவாக அவரின் குடும்பத்தினர் நிறுவியுள்ள அறக்கட்டளை மூலம், சிறந்த ஆய்வு நூல் ஒன்றுக்கு 'நுழைபுலம் ஆய்வு' விருது வழங்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டுக்குரிய சிறந்த ஆய்வு நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எழுதிய "யாழ்ப்பாணத்து கல்வி வளர்ச்சியில் இந்திய அறிஞர்களின் பங்களிப்பு" எனும் நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா நிறுவியுள்ள 'ஏற்றமிகு இளைஞர்' விருது, அண்மையில் புகழடைந்துவரும் தமிழ் கிரிக்கெட் விளையாட்டு வீரர் வி. வியாஸ்காந்துக்கு வழங்கப்படுகிறது.

### சமூக நிதியுதவி

அமரர் எல். அலமேலு ஆச்சி ஞாபகமாகத் தமிழ்நாடு ஏ. எல். சிதம்பரம் நிறுவிய அறக்கட்டளை நிதி, இவ்வாண்டு மட்டக்களப்பு யோகர் சுவாமி மகளிர் இல்லத்திற்கு வழங்கப் பெறுகிறது. மேலும், அமரர் சி. கே. இலங்கராஜா ஞாபகார்த்த நிதி, அமரர் வித்துவான் க. ந. வேலன் ஞாபகார்த்த நிதி, அமரர் டாக்டர் செ. சபாநடேசன் ஞாபகார்த்த நிதி, முன்னாள் அதிபர் அமரர் ஈ. சபாலிங்கம் ஞாபகார்த்த நிதி, திருமதி சூரியகண்ணம்மாள் அறக்கட்டளை நிதி உதவிகள் இலங்கையில் பல பாகங்களிலும் அமைந்திருக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு அவர்களது உயர் கல்வியைத் தொடரும் பொருட்டு வழங்கப்படவுள்ளன.
















### இளையோர் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கான பரிசளிப்பு

இயல்த் துறையில் ஈடுபடும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டு தோறும் கம்பன் கழகம் நடத்தி வரும் அமரர் துரை. விஸ்வநாதன் நினைவுப் பேச்சுப் போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி, நாவலர் நற்பணிமன்ற அனுசரணையில் நடத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரின் அனுசரணையில் நடாத்தப்படும் இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டி முதலியவற்றில் வெற்றி பெற்ற போட்டியாளருக்கான பதக்கங்களும் பரிசில்களும் வழங்கும் நிகழ்ச்சி விழாவின் மூன்றாம் நாள் மாலை நிகழ்வில் நடைபெறவுள்ளது.

### கம்பன் விழா நிகழ்ச்சிகள்

இவ்வாண்டுக் கம்பன்விழாவில்; தனியுரை, விவாத அரங்கம், பட்டிமண்டபம், சிந்தனை அரங்கு, கவியரங்கம், கருத்தரங்கம், நாடக அரங்கம், வழக்காடு மன்றம், நாட்டிய அரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

### சிறப்பு நாட்டிய அரங்கம்

இவ்வாண்டுக் கம்பன் விழாவின் முதல் நாள் மாலை அரங்கில் சிறப்பான நாட்டிய நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "இராமன் எத்தனை இராமனடி?" எனும் பொருளில் இடம்பெறவுள்ள இந் நிகழ்ச்சியை நம் நாட்டின் புகழ்பெற்ற நடன ஆசிரியர்கள் நால்வரின் மாணவர்கள் சேர்ந்து வழங்கவுள்ளனர். கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன், கலைமாமணி ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதாசன், நாட்டிய பூரண கலாநிதி ஸ்ரீமதி நிர்மலா ஜோன், நாட்டிய கலைமணி ஸ்ரீமதி பவானி குகப்பிரியா, ஆகியோரின் மாணவியர்கள் இணைந்து இந்நிகழ்ச்சியை வழங்கவுள்ளனர்.

### விழாவில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள், அறிஞர்கள்

இவ்விழாவில் மலேசிய நாட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை முன்னாள் பிரதியமைச்சரும் மலேசியக் கண்ணதாசன் அறவாரியத்தின் செயலாளருமான டத்தோ ஸ்ரீ எம். சரவணன் தலைமையில் மலேசிய இலக்கியப் பிரமுகர் குழுவினர் கலந்து சிறப்பிக்கின்றனர். அவ்வாறே புதுச்சேரி சட்டசபையின் முன்னாள் சபாநாயகர் வி. பி. சிவக்கொழுந்து தலைமையில் புதுவைப் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மேலும் கோவிலூர் ஆதீன கர்த்தர் சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள், 'கற்க' அறக்கட்டளையின் தலைவர் எஸ். செந்தில்குமார், டில்லி கம்பன் கழகத் தலைவர் பெருமாள், அவுஸ்திரேலியாவில் வதியும் வைத்தியநிபுணர் செ. சிதம்பரக்குமார், சிங்கப்பூரைச் சார்ந்த முன்னாள் வங்கி அதிகாரி மகாலிங்கம் முதலிய பிறநாட்டுப் பிரமுகர்கள் பலரும் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றவென தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள் மற்றும் பேச்சாளர்கள் பலரும் வருகை தருகின்றனர். 'இலக்கியச் சுடர்' த. இராமலிங்கம் முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், கவிச்சுடர் கவிதைப்பித்தன், முனைவர் இரா மாது, திருமதி பாரதி பாஸ்கர், வழக்கறிஞர் கே. சுமதி, பேராசிரியை பர்வீன் சுல்தானா ஆகியோர் வருகை தருகிறார்கள். இவர்களோடு சென்னைக் கம்பன் கழகம், புதுவைக் கம்பன் கழகம், கோவில்ப்பட்டிக் கம்பன் கழகம், டில்லி கம்பன் கழகம், திருச்சி கம்பன் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவர்களோடு நம்நாட்டைச் சார்ந்த பிரபல பேராசிரியர்கள், அறிஞர்கள், நிர்வாகிகள், சமுதாயப் பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள் முதலிய பெரியோர்கள் பலரும் இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

### புத்தகக் கண்காட்சி

விழா நடைபெறும் நான்கு நாட்களிலும் மண்டப வாயிலில் பூபாலசிங்கம் புத்தகசாலை, புத்தகக் கண்காட்சி ஒன்றினை நடத்தவுள்ளது. இக் கண்காட்சியில் சிறப்புத் தள்ளுபடியில் புத்தகங்கள் விற்பனை செய்யப்படும்.

### இரசிகர்களுக்கு வேண்டுகோள்

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளதால் இரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## இலங்கை வந்தது மேற்கிந்திய மகளிர்



இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் பங்கேற்பதற்காக மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி நேற்று (4) கட்டுநாயக் விமான நிலையத்தின் வழியாக இலங்கையை வந்தது. இந்த அணியில் 15 வீராங்கனைகள் மற்றும் 07 பயிற்சியாளர்கள் அடங்குன்றனர்.

மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி எதிர்வரும் ஜூன் 15, 18 மற்றும் 21 ஆம் திகதிகளில் இலங்கை மகளிர் அணிக்கு எதிராக மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இந்தப் போட்டிகள் காலி சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இலங்கை மற்றும் மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடர் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஜூன் 24, 26 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறும் இந்தப் போட்டிகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியினர் நேற்றுக் காலை 8.40 மணிக்கு டுபாயில் இருந்து எமிரேட்ஸ் விமான சேவையின் ஈ.கே.650 விமானத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தனர். அவர்களை வரவேற்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் சிலரும் விமாநிலையத்திற்கு வந்திருந்தனர்.

# டி20 உலகக் கிண்ண போட்டி அட்டவணை தொடர்பில் இலங்கை வீரர்கள் அதிருப்தி

## ஒவ்வொரு போட்டிக்கும் இடையே பயணச் சுமை

உலகக் கிண்ண போட்டி அட்டவணை குறித்து இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க மற்றும் சுழற்பந்து வீச்சாளர் மஹிஷ் தீக்ஷன அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது போட்டியில் இலங்கை 6 விக்கெட்டுகளால் தோல்வி அடைந்த நிலையிலேயே இந்த கருத்து வெளியாகியுள்ளது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 77 ஓட்டங்களுக்கே சுருண்டதோடு தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுகளை இழந்து சற்று போராடியே அந்த இலக்கை எட்டியது.

போட்டி முடிந்த விரைவிலேயே இலங்கை அணியினர் ப்ரூக்ளியில் உள்ள தமது ஹோட்டல் அறைக்கு அவசரமாகச் சென்று தமது உடைமைகளை எடுத்துக் கொண்டு பி.ப. 6 மணிக்கு இருக்கும் டலாஸுக்காக விமானத்தை பிடிக்கச் புறப்பட்டதாக கிரிக்கின்போ இணையதளம் குறிப்பிட்டுள்ளது. பங்களாதேஷுக்கு எதிரான இலங்கை அணியின் அடுத்த போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை டலாஸில் நடைபெறவுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டிக்கு முன்னர் கூட இலங்கை அணி பயிற்சி பெற முடியாமல் போனது. போட்டிக்காக நியூயோர்க் திரும்புவதற்காக அவர்களின் விமானம் ஏழு மணி நேரம் தாமதித்தே வந்தது.

டி குழுவுக்காக இலங்கை அணி ஆடிய முதல் போட்டிக்குப் பின்னர் தீக்ஷன போட்டி அட்டவணை தொடர்பிலான தமது அதிருப்தியை வெளியிட்டார். 'எமக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நான்கு வெவ்வேறு மைதானங்களில் போட்டிகள் இருப்பதால் (போட்டிக்குப் பின்னர்) நாம் ஒவ்வொரு நாளும் பயணிக்க வேண்டி இருக்கிறது. இது நியாயமில்லை.

புளோரிடாவில் இருந்து மற்றும் மியாமியில் இருந்து நாம் விமானங்களை பெறுவதற்கு விமானநிலையத்தில் எட்டு மணி நேரங்கள் அளவு காத்திருக்க வேண்டிய நிலை





ஏற்பட்டது. நாம் சுற்றி வருகிறோம். நாம் இரவு 8 மணிக்கே புறப்பட வேண்டும், ஆனால் எமக்கு அதிகாலை 5 மணிக்கே விமானம் இருக்கிறது. இது உண்மையிலேயே எமக்கு பெரும் அநீதியாகும், எப்படி இருந்தபோதும் போட்டியில் அது பொருட்டல்ல' என்று கிரிக்கின்போவுக்கு தீக்ஷன குறிப்பிட்டார்.

உலகக் கிண்ணத்தில் பங்கேற்றிருக்கும் 20 அணிகளில் முதல் சுற்றின் நான்கு போட்டிகளையும் நான்கு மைதானங்களிலும் ஆடும் இரண்டு அணிகளில் இலங்கையும் ஒன்றாகும். நெதர்லாந்து அணியும் இவ்வாறு நான்கு போட்டிகளையும் வெவ்வேறு மைதானங்களில் ஆட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பயணக்களைப்புக் காரணமாக பயிற்சிகளையும் ரத்துச் செய்ததாக தீக்ஷன குறிப்பிட்டுள்ளது. தென்னாபிக்காவுக்கு எதிரான போட்டிக்காக அதிகாலை 5 மணிக்கே எழுந்து நசாவு கெண்டி சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்கு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

'ஏனென்றால் ஹோட்டலில் இருந்து ஒரு மணி 40 நிமிடங்கள் தூரத்தில் (மைதானம்) இருக்கிறது. இன்று கூட (போட்டி தினம்), நாம் அதிகாலை 5 மணி அளவில் எழுந்து இங்கு வந்தோம். ஒரே மைதானத்தில் போட்டிகளில் ஆடும் அணிகளை என்னால் குறிப்பிட முடியும். அப்படியானால் அவர்களுக்கு ஆடுகளம் பற்றி நன்காக தெரிந்திருக்கும். அவர்கள் பயிற்சிப் போட்டியையும் அதே மைதானத்தில் ஆடினார்கள். வேறு யாருக்கும் அப்படிக் கிடைக்கவில்லை.

நாம் பயிற்சிப் போட்டியை புளோரிடாவில் ஆடினோம். புளோரிடாவில் எமது மூன்றாவது போட்டி உள்ளது. இந்த ஆண்டு, எதுவும் மாறாது என்பதை நான் அறிந்திருப்பதால், அடுத்த ஆண்டு அனைவரும் மறுபரிசீலனை செய்வார்கள் என்று நான் நினைக்கும் சில விடயங்கள் உள்ளன. இன்றைய விமானத்தை பிடிப்பதற்காக எமது முகாமையாளர்கள் பொருட்களை பொதியிடும் ஏற்பாடுகளை தயார்செய்து வருகிறார்கள். ஏனென்றால் நாம் இங்கு விளையாடி வருகிறோம்' என்றும் தீக்ஷன குறிப்பிட்டார்.

போட்டிக்குப் பின்னர் நடந்த ஊடக சந்திப்பில், தென்னாபிக்காவுக்கு எதிரான போட்டியில் ஏற்பாட்டியல் பிரச்சினைகள் தாக்கம் செலுத்தியதாக இலங்கை அணித் தலைவர் வனிந்து ஹசரங்க தெரிவித்துள்ளார்.

'எம்மால் அதனை கூற முடியாது. கடந்த சில நாட்களாக நாம் கடுமையாக சிரமப்பட்டோம். நான்கு போட்டிகளும் நான்கு மைதானங்களில் உள்ளன. அது கடுமையானது. எமக்கு (மைதானங்கள் பற்றி) எதுவும் தெரியாது. இது தான் நியூயோர்க்கில் எமது முதல் போட்டி. அடுத்த போட்ட டலாஸில் உள்ளது. (அந்த மைதானம் பற்றி) எமக்கு எதுவும் தெரியாது. அடுத்த போட்டி புளோரிடாவில் உள்ளது. அங்கேயே நாம் இரண்டு போட்டிகளை ஆடினோம். அதுவே எமக்கு இருக்கும் ஒரே அனுகூலமாகும்' என்று ஹசரங்க குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் தோல்வியை சந்தித்த இலங்கை அணி சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற அடுத்த மூன்று போட்டிகளும் தீர்க்கமானதாக உள்ளது.

இலங்கை தவிர தென்னாபிரிக்கா மற்றும் அயர்லாந்து நாடுகளும் உலகக் கிண்ண போட்டி அட்டவணை தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டிருப்பதாகவும் அது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலிடம் முறையிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஆரம்ப சுற்று போட்டி அட்டவணையில் சில அணிகளுக்கு மேலதிக பயணச் சுமை இருக்கும் அதேநேரம், சில அணிகளுக்கு அந்தப் பயணச் சுமை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்திய அணி தனது மைதானத்திற்கு அருகில் உள்ள ஹோட்டலிலேயே தங்குவதோடு பெரும்பாலான போட்டிகளை ஒரு மைதானத்தில் ஆடுவது மேலதிக பயணங்களை தவிர்த்து அந்த அணிக்கு வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் போட்டியில் அணிகள் சரிசமமாக நடத்தப்பட வேண்டும் என்றே ஐ.சி.சியிடம் முறையிடப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## சர்வதேச செய்திகள்



# காசா போர் நிறுத்த முயற்சியில் தொடர்ந்து முட்டுக்கட்டை: உக்கிர தாக்குதல்கள் நீடிப்பு

## உயிரிழப்பு எண்ணிக்கை 36,550 ஆக உயர்வு

காசாவில் தொடர்ந்து மோதல்கள் நீடித்து இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடரும் நிலையில் அமெரிக்கா முன்வைத்த போர் நிறுத்தத் திட்டத்தை அமுல்படுத்துவதில் தொடர்ந்து நிச்சயமற்ற சூழல் நீடித்து வருகிறது.

இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேலின் தயார் நிலையை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி செய்திருப்பதோடு தற்போது அது தொடர்பான நிபந்தனைகள் ஹமாஸ் அமைப்பிடம் வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலுடன் காசா போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றுக்கு ஹமாஸ் ஒரே முட்டுக்கட்டையாக இருப்பதாக ஜோ பைடன், கட்டார் எமீர் ஷெய்க் பின் ஹம்தான் அல் தானியிடம் தெரிவித்துள்ளார். அமெரிக்கா கடந்த வாரம் முன்வைத்த இந்த போர் நிறுத்தத் திட்டத்தின் நிபந்தனைகளுக்கு இஸ்ரேலின் தயார்நிலை வெளியிடப்பட்டிருப்பதாகவும் பைடன் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் நிரந்த போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது தொடர்பில் கட்டார் அமீருடன் கடந்த திங்களன்று அமெரிக்க ஜனாதிபதி தொலைபேசியில் பேசியுள்ளார். ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுடனான மறைமுக பேச்சுவார்த்தையில் எகிப்து மற்றும் அமெரிக்காவுடன் கட்டாரும் முக்கியமான மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா முன்வைத்திருக்கும் போர் நிறுத்தம் மூன்று கட்டங்களை கொண்டிருப்பதோடு இதில் இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீனர்களுக்கு பகரமாக காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் காசாவுக்கான உதவிகளை அதிகரிப்பது உட்பட இறுதியில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் திட்டத்தை கொண்டுள்ளது.

எனினும் ஹமாஸ் காசாவில் அதிகாரத்தில் நீடிப்பதை விலக்குவதாக இந்த முன்மொழிவு உள்ளது. இது ஹமாஸ் தொடர்ந்து எதிர்க்கும் ஒன்றாக உள்ளது.

இந்நிலையில் இந்தப் போர் நிறுத்த முன்மொழிவு கடந்த வியாழக்கிழமையே ஹமாஸுக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் இதுவரை பதில் கிடைக்கவில்லை என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் பிரதான அம்சங்கள் ஹமாஸ் சில வாரங்களுக்கு முன்னர் முன்வைத்த முன்மொழிவின் பிரதான அம்சங்களுடன் கிட்டத்தட்ட பொருந்தி இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேலிய கூட்டணி அரசில் உள்ள தீவிர வலதுசாரிகளும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கும் சூழலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்ற குழுக் கூட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் பேசிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'எங்கள் நிபந்தனைகள் நிறைவேற்றப்படாமல் நாங்கள் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொண்டோம் என்று கூறுவது தவறானது' என்றார்.

'பணயக்கைதிகள் திரும்பும் நோக்கத்திற்காகவே போர் நிறுத்தம் இடம்பெறும்' என்று குறிப்பிட்ட இஸ்ரேலிய அரச பேச்சாளர் ஒருவர், அதனைத் தொடர்ந்து ஹமாஸை ஒழிக்கும் இஸ்ரேலின் இலக்கு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலின் போது கடத்திச் செல்லப்பட்ட பணயக்கைதிகளில் மேலும் நால்வர் கொல்லப்பட்டதை இஸ்ரேல் உறுதி செய்துள்ளது. தெற்கு காசா நகரின் கான் யூனிஸில் இஸ்ரேலிய நடவடிக்கையின்போது நான்கு பயணக்கைதிகள் கொல்லப்பட்டதாக அது குறிப்பிட்டுள்ளது. அவர்களின் உடல்கள் தொடர்ந்தும் போராளிகளின் பிடியில் இருப்பதாகவும் அது கூறியது.

இதில் 51 வயதான பிரிட்டிஷ் இஸ்ரேலியரான நவாட் பொலவெல், 79 வயது செயிம் பெரி, 80 வயது யொராம் மட்ஸ்கர் மற்றும் 85 வயது அமிராம் கூபர் ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர் 7 தாக்குதலின்போது இஸ்ரேலில் 1,200 பேர் கொல்லப்பட்டு 251 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். கடந்த நவம்பர் மாதம் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்தின் போது 105 பயணக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்;. தொடர்ந்து 120 பணயக்கைதிகள் வரை காசாவில் இருப்பதாக இஸ்ரேல் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். எனினும் பணயக்கைதிகளாக எஞ்சி இருப்பவர்கள் மூன்றில் ஒரு பங்கினர் உயிரிழந்திருப்பதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

எனினும் கட்டார் தலைநகர் டோஹாவில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய கட்டார் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மாஜித் அல் அன்சாரி, முன்வைக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்த மும்மொழிவு தொடர்பில் இரு தரப்பும் இன்னும் உறுதியான ஒப்புதலை தரவில்லை என்றார்.



'இஸ்ரேலிய அமைச்சர்களிடம் இருந்து வரும் அறிக்கைகளை நாங்கள் ஏற்கனவே பார்த்தோம், இது தற்போதைய முன்மொழிவு குறித்து இஸ்ரேலில் ஒரு ஒருங்கிணைந்த நிலைப்பாடு இருப்பதாக எங்களுக்கு அதிக நம்பிக்கையைத் தரவில்லை' என்று அவர் குறிப்பிட்டார். 'இரு தரப்பிலும் சாதாகமான நிலை உருவாகி வருவதை எம்மால் பார்க்க முடிகிறது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேலின் தீவிர தாக்குதல்கள் நேற்று தொடர்ந்ததோடு பலஸ்தீன போராளிகளுடனான மோதலும் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. குறிப்பாக இஸ்ரேல் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி இருக்கும் தெற்கு காசாவின் ரபா நகரில் மோதல் நீடித்து வருகின்றது.

மத்திய காசாவின் டெயிர் அல் பாலாஹ்வில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் தற்காலிக முகாம் ஒன்றுக்கு அருகில் வாகனம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். இதில் சிறுவர்களும் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் காயமடைந்தவர்கள் அங்குள்ள அல் அக்ஸா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக சன நெரிசல் மிக்க பகுதியிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக அங்குள்ள அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 24 மணி நேரத்தில் காசா பகுதியில் குடும்பங்கள் மீது இஸ்ரேல் நடத்திய ஏழு படுகொலைகளில் 71 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 182 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

இதன்படி கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 36,550 ஆக அதிகரித்துள்ளது. இதில் சுமார் 15,000 சிறுவர்கள் மற்றும் 10,000 பெண்கள் அடங்குகின்றனர். தவிர மேலும் 82,959 பேர் காயமடைந்துள்ளனர். 10,000 பேர் வரை காணாமல்போயிருப்பதாக மதிப்பிடப்படும் நிலையில் இவர்கள் கொல்லப்பட்டு மற்றும் இடிபாடுகளில் சிக்கியிருக்காலம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 5ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.